


பேராசிரியர் சபா.ஜெயராசா. க.சின்னராஜன். அ.லெட்சுமணன்.
அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின். தர்மு ஜீவராம் பிருமிள். மேமன்கவி.
மு.அநாதரட்சகன். மலரன்னை. மூதூர் மொகமட் ராபி. திக்குவல்லைகமால்.
சூரன் ஏ. ரவிவர்மா. கொற்றை பி.கிருஷ்ணானந்தன். செ.அன்புராசா.
சாந்தி நேசக்கரம். மு.யாழவன். கந்தர்மடம் அ.அஜந்தன். சி.சிவசேகரம்.
தனி ஒருவன். இ.ரவீந்திரன். இ.சு.முரளிதரன். அர்ச்சுனன்

# ஞானம்



109 100/-
கலை இலக்கிய மாத சஞ்சிகை
ஐப்பசி 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

## கட்டுரைகள்


**சமகாலக் கவிதை**
பேராசிரியர் சபா. ஜெயராசா.......................... 03

**எம்.சி. சுப்பிரமணியம் அவர்களின் சமூக விடுதலைப் போராட்டங்களும் தலைமைத்துவமும்**
க.சின்னராஜன்................................................ 12

**மலையக அரங்கியல் களம்**
அ.லெட்சுமணன்.............................................. 26

**ஐரோப்பிய பயணம் கற்றுத் தரும் பாடங்கள்**
அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்.................. 38

**டி. ராமநாதன் - மறைவு**
தர்மு சிவராம் பிருமிள்...................................... 41


## சிறுகதைகள்


மலரன்னை.................................................... 07
மு. அநாதரட்சகன்............................................ 15
மூதூர் மொகமட் ராபி....................................... 21
திக்குவல்லை கமால்.......................................... 41


## குறுங்கதைகள்


சூரன் ஏ.ரவிவர்மா.......................................... 36
கொற்றை பி. கிருஷ்ணானந்தன்........................... 37


## கவிதைகள்


செ.அன்புராசா................................................. 06
சாந்தி நேசக்கரம்.............................................. 11
மு.யாழவன்.................................................... 11
கந்தர்மடம் அ. அஜந்தன்.................................... 14
சி.சிவசேகரம்.................................................. 24
தனி ஒருவன்.................................................. 25


## அஞ்சலி


மேமன்கவி...................................................... 21


## நூல் மதிப்பீடு


ந.இரவீந்திரன்................................................. 46



## நூல் அறிமுகக்குறிப்பு


அர்ச்சுனன்..................................................... 42
இ.சு.முரளிதரன்............................................... 48




சமகாலக் கவிதை

- பேராசிரியர் சபா. ஜெயராசா -



எம்.சி.சுப்பிரமணியம் அவர்களின் சமூக விடுதலைப் போராட்டங்களும் தலைமைத்துவமும்

- க.சின்னராஜன் -



அட்டை ஓவியம்

V.P.வாசுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2017 ஐப்பசி இதழ் - 109**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



**ஜீவநதி சந்தா விபரம்**

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## ஒக்ரோபர் மாதமும் உலக தினங்களும்

ஒக்ரோபர் மாதம் என்பது உலக ரீதியாக பல்வேறு சிறப்புத்தினங்கள்உ கொண்டாடப்படும் மாதமாகும். உலக சிறுவர் தினம், உலக ஆசிரியர் தினம், உலக முதியோர் தினம், உலக உளநல தினம், உலக அஞ்சல் தினம் என இப்பட்டியல் நீண்டு செல்கிறது.

இச்சிறப்புத்உதினங்கள் கொண்டாடப்படும்போது ஒவ்வோ ராண்டும் இக்கொண்டாட்டத்துக்கான மையப்பொருள்(Central Theme) அறிவிக்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டில் ‘அன்புடன் எம்மைக் காக்க” என்பது உலக சிறுவர் தின சுலோகம் ஆகிறது. “சதந்திரமாக கற்பித்தலும் ஆசிரியரை வலுவூட்டலும்’ என்பது உலக ஆசிரியர் தினக் கருப்பொருளாகும். இதேபோல “வேலைத்தலத்தில் உளநலம்’ என்பது உலக உளநல தின மையப்பொருளாகும்.

இவ்வாறாக, இவ்வருடத்திற்கான மையப்பொருள்களை நோக்கும்போது அன்பு, சுதந்திரம், பாதுகாப்பு, உளநலம் என மனித தேவைகளையொட்டி நாம் பயணிக்க வேண்டும் என்பதனையே இவை வலியுறுத்துகின்றன. ஆனால் இவை எவையுமே கிடைக்காத நிலையில் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு பிரதேசங்களிலும் மக்களின் அவல வாழ்வு தொடர்வதையே நாம் காணமுடிகிறது. இந்த அவலநிலையைப் போக்குவதற்கு உணர்வு பூர்வமாக நேர்மையாக எமது செயற்பாடுகள் அமையும்போதே இந்த மையக் கருப்பொருள்களை நோக்கிய நகர்வுகளை நாம் முன்னெடுக்க முடியும்.

- க.பரணீதரன்-


**ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்**

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி,
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
செட்டித்தெரு பூபாலசிங்கம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலக் கவிதை

பேராசிரியர் சபா.ஜெயராசா



கட்டற்ற கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் சமகால உலகக்கவிதைப்பரப்பில் நீண்டு செல்வாக்குச் செலுத்தி வரும் விசையாகவுள்ளது யாப்பு ஆசாரங்களையும் இசைக்கோலங்களையும் கைவிடல், கட்டற்ற கவிதையை மக்களாட்சிப்பரவலுக்கு இட்டுச்சென்றது.

பல்வேறு துறைகளில் உடைப்பைச் சமப்பதோடு, பாடுபொருளில் அதீத பன்முகப்பாட்டை ஏற்படுத்தியவாறு, சமகால உலகக் கவிதைகள் மேற்கிளம்பிய வண்ண முள்ளன.

தேய்வியம்பல் (CLICHÉ) ஒரு புறமும், புதுமையாகச் செய்தல் இன்னொரு புறமும், என்ற நிகழ் வீச்சுக்களோடு சமகாலக்கவிதைகள் எழுகோலம் பெறத்தொடங்கி யுள்ளன.

ஒவ்வொரு நாடுகளுக்குமுரிய மனித இருப்பும் கவிதையின் வெளிப்பாடும் இடையறா இணைப்பைக் கொண்டுள்ளன. அந்நிலையில் உலகக் கவிதையின் பரவலைக்குறிப்பிட்ட ஓர் அடைப்புக்குள் கொண்டு வருதல் கடினமானது.

நவீன உலகக் கவிதைப்பரப்பிலே செல்வாக்குச் செலுத்திய ஒரு பொதுவான விசையாகக் கொள்ளத்தக்கது "நவீனத்துவம்". அது முன் மொழிந்த ஒரு முக்கிய கருத்து "எதனையும் புதிதாகச் செய்யுங்கள்" என்பதாகும்.

கருத்திற்செறிவு, பரிசோதனைகள், வெளியீட்டுச் சுதந்திரம், கட்டற்ற நகர்வுகள், நுகர்ச்சியாளர் வாதம், நடப்பியலைக் கைவிட்ட சொல்லாடல்கள் முதலிய வற்றுடன் கவிதைப்பரப்பு வளர்கின்றது.

மேலைப்புலத்தில் வளர்ச்சி பெற்ற படிமவியல் உலகளாவிய கவிதைப்பரப்பில்செல்வாக்குச் செலுத்திய வண்ணமுள்ளது. ஓசைப்படிமங்கள், காட்சிப்படிமங்கள் என்ற நிலைகளில் எடுத்தாள்கை நீட்சி ஏற்பட்டு வருகின்றது. படிமங்கள் கவிதைக்குரிய கற்பனையை வளப்படுத்தும். மறுபுறம் கற்பனைகள், படிமங்களின் வடிவை எடுக்கும். இந்த உடன்பாடு கவிதையாக்கத்தோடு நீட்சிகொள்கின்றது.

கட்டற்ற கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் சமகால உலகக்கவிதைப்பரப்பில் நீண்டு செல்வாக்குச் செலுத்தி வரும் விசையாகவுள்ளது யாப்பு ஆசாரங்களையும் இசைக்கோலங்களையும் கைவிடல், கட்டற்ற கவிதையை மக்களாட்சிப்பரவலுக்கு இட்டுச்சென்றது.

கட்டற்ற கவிதையின் பிறிதொரு சிறப்புப் பரிமாணம், பேச்சோசையைக் கவிதை வெளிக்குக் கொண்டு வந்தமை. கட்டற்ற கவிதை அல்லது யாப்பு அழுத்தங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட கவிதை என்பதும் ஓர் அமைப்பு வடிவாக்கத்தைக் கொண்டிருக்கும்.

கட்டற்ற கவிதையாக்கத்தின் தந்தை என்று கருதப்படும் விட்மனின் கவிதைகளை ஆராய்ந்தோர் அக்கவிதைகளிலேயே காணப்படும் அமைப்பாக் கத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டியுள்ளனர். ஓசை உருவாக்கத் தின் பொருட்டு சில தொடர்களை மீள மீள வருவித்த லும், ஒத்திசைவையும் கட்டமைப்பையும் உருவாக்குவதற்கு புள்ளிக்குறியீடுகளைப் பயன்படுத்துதலும் அவரது கவிதைகளில் இடம் பெற்றுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கட்டற்ற கவிதைகளில் இடம் பெறும் மரபு சாரா மொழிக்கையாள்கையும், அசாதாரண மொழிப் பிரயோகங் களும் ஒருவித கட்டமைப்பை உருவாக்கிக் கொள்கின்றன.

கவிதை வளர்ச்சியினூடே அதன் ஈர்ப்பு பல நிலைகளிலே ஏற்படலாயிற்று கவிதை வாசிப்பு, எழுத்து, வெளியீடு முதலியவற்றை உலகம் தழுவிய முறையில் வளர்த்தெடுப்பதை இலக்காகக் கொண்டு யுனெஸ்கோ நிறுவனம் மார்ச் மாதம் இருபத்து ஓராம் நாளை உலகக் கவிதை நாளாக அறிவிப்புச்செய்தது. கவிதையை ஒழுங்குறக் கற்பித்தலும் "கவிதை நாள்" அறிவின் பிறிதொரு சிறப்பு இலக்கு.

அமெரிக்கக் கவிஞர் கழகம், ஒவ்வோர் ஆண்டின் சித்திரை மாதத்தை தேசியக் கவிதை மாதமாக அறிவித் துள்ளது. கவிதை தொடர்பான சுவைப்பையும் உற்றுணர்வையும் பரவலாக்குதலே அந்த முன்னெடுப்பின் நோக்கமாக அமைந்துள்ளது.

பிரித்தானியாவில் கவிதையை வளர்க்கும் நோக்குடன் ஒக்டோபர் மாதத்தில் கவிதை நாளை அறிவுப்புச் செய்தது.

மேற்கூறியவாறு கவிதைகளுக்கென மாதங்களை யும் நாட்களையும் தவறானது என்ற கருத்தும் முன்வைக்கப் பட்டுள்ளது. அத்தகைய கருத்துக்களை முன்வைத்தவர் களுள் சால்ஸ் பேர்ன்டின் முக்கியமானவர்.

ஒடுக்குமுறை அழுத்தங்களும் ஒடுக்கு முறையை மறுதலித்து எழுதலும், சமகால உலகக் கவிதைப் பரப்பிலே காணப்படும் ஒரு பொதுவான பண்பு. அவ்வகையில் ஜமால்மே எழுதிய கவிதை ஒன்று வகைமாதிரியாகக் குறிப்பிடத்தக்கது.

"போர் சொன்னது, போரே நிகழ்க
அங்கே போர் நிகழ்ந்தது
போர் சொன்னது, சமாதானம் நிகழ்க
அங்கே போர் நிகழ்ந்தது"

ஜமால்மே, கருமை இனமக்களின் நலனுக்காக உழைக்கும் ஒரு வினைப்பாட்டாளர். "போர் பற்றிய ஒரு சுருக்கவரலாறு என்ற வரலாறு" என்ற தலைப்பில் அந்தக் கவிதை எழுதப்பட்டது. அது ஓர் ஐந்து அங்கக் கவிதை. அதன் முதல் அங்கம்மேலே தரப்பட்டுள்ளது.

ஒடுக்குமுறைகள், போர்கள் மானிடத்தை வேறு படுத்தும் செயற்பாடுகள், ஆகியவற்றுடன் தொடர்புடைய கவிதைகளும் உலக வெளியில் பரவலாக எழுதப்பட்டு வருகின்றன. "ஒடுக்கு முறைக்கவிதைகள்" என்ற திரட்டுக் கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

சமகால உலகக்கவிதைத் தளத்தில் செல்வாக்குச் செலுத்திவரும் ஒரு சிறப்பு விசையாக இருப்பது ஜப்பானிய ஹைக்கூ கவிதை. அது மூன்று அடிகளைக்கொண்ட குறுகிய வடிவம். ஜப்பானிய மொழியில் பல்வேறு கவிதை வடிவங்கள் இருந்தாலும், ஹைக்கூ வடிவமும் உள்ளடக் கமுமே உலகளாவிய சுவறல்களை ஏற்படுத்தியது.

ஹைக்கூ கவிதைக்குரிய ஓர் எடுத்துக்காட்டு வருமாறு.

பழை நீர்த்தடாகம்
அதனுள் தவளைகள் தாவுகின்றன
நீருடைய ஓசை.

சூழல் மாசடைந்து வரும் சமகாலத்தில் ஹைக்கூவின் வழியாகக் கையளிக்கப்பட்டு வரும் செய்தி முக்கியமானது. இயற்கையை முக்கியத்துவப்படுத்துதல் அதன் வழியாகப் படிமநிலையிற் கையளிக்கப்படுகின்றது. ஒருவித தந்தி நடையில் இயற்கையின் மொழி கையளிக்கப் படுகின்றது.

ஆங்கில ஹைக்கூ, அமெரிக்கன் ஹைக்கூ, தமிழ் ஹைக்கூ என்றவாறு உலகின் பல்வேறு மொழிகளில் ஹைக்கூ எழுதப்பெற்று வருகின்றது. வகை மாதிரிக்கு அமெரிக்கன் ஹைக்கூ வடிவம் ஒன்று வருமாறு:

"லில்லி:
தண்ணீருக்கு வெளியே
தன்னிலிருந்து வெளியே"

தமிழில் பல நூற்றுக் கணக்கான ஹைக்கூ கவிதைகள் எழுதப்படுகின்றன. அவற்றுள் ஒன்று வருமாறு,

"சத்தம் கேட்டு ஓடிச்சென்று பார்த்தேன்
கதறிக்கொண்டிருந்தது மழைத்துளிகள்"

தமிழில் ஹைக்கூ பற்றிய ஒரு முக்கியமான செய்தியை "த இந்து" ஆங்கில இதழ்வெளியிட்டது. அதனை எஸ்.செந்தளிர் என்பவர் எழுதியுள்ளார்.

1916 ஆம் ஆண்டின் அக்ரோபர் பதினாறாம் நாள் வெளிவந்த சுதேசமித்திரன் இதழில் "ஜப்பானிய கவிதை" என்ற தலைப்பில் ஹைக்கூ கவிதையை பாரதியார் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியதாக அந்தச்செய்தி குறிப்பிடுகின்றது.

ஹைக்கூ கவிதைகள் ஆங்கில மொழிவழியாகவே தமிழுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. ஜப்பானிய தமிழ் மொழித்தொடர்புகள் வளர்ச்சியடைய, ஹைக்கூ கவிதை களை நேரடியாகத் தமிழுக்குப் பெயர்க்கும் செயற்பாடுகள் மேலெழுந்தன.

சமகால உலகக்கவிதை உருவாக்கத்தில் ரூசியக் கவிதைகளின் வகிபாகம் தனித்துவம் பெறுகின்றது. சோவியத்தின் சோசலிசப் புரட்சியைத்தொடர்ந்து ரூசிய இலக்கியங்கள் உலக வெளியிலே பரவலாயின.

புகழ்பெற்ற பல கவிஞர்கள் ரூசிய மொழிப்பரப்பில் இருந்தாலும், அலெக்சாந்தர் புஸ்கின், விளாடிமிர் மாய கோவ்ஸ்கி ஆகியோரின் கவிதைகளே உலக அளவிலே கூடுதலான செல்வாக்கை ஏற்படுத்தின.

கவிஞர்களுக்கென புஸ்கின் எழுதிய கவிதையின் முதல் நான்கு அடிகளும் வருமாறு

"கவிஞரே, மக்கள் உங்களைப் புகழ்வர், பெருமிதம் கொள்ளாதீர
ஒரு நிமிடம் கழித்து அவர்களின் புகழ்ச்சி மறைந்து போகும்
முட்டாள்களின் முடிவுகளையும்,
கூட்டத்தினரின் சிரிப்பையும் கண்டு
நீவிர் குதூகலப்படாதீர், அமைதியும் நிதானமுமாய் நிற்பீர்"

ரூசியப் புலவர்களுள் லெனினால் பெரியதும் விரும்பப்பட்டவரும் புஸ்கின் தான். மாயகோவ்ஸ்கி சோசலிய நடபியலைத் திறனாய்வுக்கு உட்படுத்தித் தமது ஆக்கங் களைப் புனைந்தவர். கவிதையாக்கங்களுடன் நாடகப் புனைவிலும் நடிப்பிலும் ஈடுபட்டவர். புதுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டங்கள் அவரிடத்து மேலோங்கியிருந்தன. அந்த மேலோங்கலுடன் முதலாளியத்தையும் நகர வாழ்க்கையையும் சாடினார்.

ஒக்டோபர் புரட்சியின் விளைவுகளை உலகெலாம் பரப்பி கவிதையாக்க முன்னோடியாக விளங்கிய அவர் புரட்சியை விளக்கும் காண்பியங்களை வரைபவராகவும் அதற்கு ஏற்றவாறு ஒத்திசைவு கொண்ட மொழிவிரிப்பை வழங்குபவராகவும் செயற்பட்டார்.

ரூசிய மொழியில் பெருந்தொகையான கவிதைகளை எழுதிய அவரது ஆக்கங்கள் உலக மொழிகள் பலவற்றிலும் பெயர்க்கப்பட்டன. மார்க்சிய லெனினிசச் சிந்தனைகளுக்குக் கவிதை அழகியல் வடிவம் கொடுத்த அவரது முயற்சிகள் அதே தளத்தில் நின்று கவிதையாக்குவோருக்கு உசாத்துணையாகவும் அமைந்தன.

தமிழில் அவரது கவிதைகளைத் தந்தவர்களுள் முருகையன் முக்கியமானவர்.

சமகால உலகக்கவிதை வெளியில் ஆக்கநிலைப் பங்களிப்பை வழங்கியவர்களுள் குறிப்பிடத்தக்க ஓர் ஆளுமையாக விளங்குபவர் பபுலோ நெருடா சமகாலத்தில் சமூக மாற்றத்துக்கான கவிதையாக்கங்களை மேற்கொள்பவர்களுக்குரிய ஆற்றுப்படுத்தலை வழங்கும் வகையிலும் அவரது கவிதைகள் அமைந்துள்ளன.

உலக வாழ்க்கை தொடர்பான நம்பிக்கையும் உறுதியும் அவரின் கவிதைகளில் ஆழ்ந்து பதிந்திருந்தன. அதனைக்குறியீட்டுப்படுத்தி பச்சை வண்ண எழுத்துக்களில் தமது கவிதைகளை எழுதினார். நம்பிக்கை வரட்சியும் அவலமுமே கவிதைகளுக்கு வளமூட்டும் என்ற ஒற்றைப் பரிமாணக் கவிதைப்புரிதலை அவர் நிராகரிப்புக்கு உள்ளாக்கினார்.

"இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய கவிஞர்" என்ற அறிவுப்புக்கு உரியவராக அவரது கவிதைகள் உலக மொழிகள் பலவற்றிலும் பெயர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டன. உலகெங்கணும் அறியப்பட்ட அந்தக் கவிஞர் ஐ.அமெரிக்கச் சூழலில் அதிகம் அறியப்படாதவராக இருத்தல் ஒரு முரணுரையாகவுள்ளது.

அரசியற் கவிதை எழுதுவோருக்கு அவரது ஆக்கங்கள் வழிகாட்டலையும் மேற்கொள்கின்றன. சமகால உலகக் கவிதைக்கு வளமூட்டியதும், கவிதை வெளியில் செல்வாக்குச் செலுத்தியும் வருவது, பலஸ்தீனிய புலச் சிதறல் கவிதை, அரசியல் வினைப்பாடும், மேலாதிக்க எதிர்ப்பும், அந்தக் கவிதைகளில் விரப்பரந்து அழகியலுடன் நீட்சிகொண்டுள்ளன.

தமது தாயகத்தின் இழப்பும் ஏக்கமும், மீண்டெழலும், அக்கவிதைகளில் நீடித்த இயம்பலாகவுள்ளன. அவர்களின் புலச்சிதறல் வாழ்வின் அவலநிலையை விளக்கும் ஒரு கவிதை வருமாறு:

**ஒரு கலங்கிய வினா**

தொலைவில் பாதுகாப்பாய்
உள்ள எனது நண்பர்கள்
அவர்கள் வீடுகளினுள்ளே
பணிமனைகளினுள்ளே
மேலும் விளையாட்டுத்திடல்களிலே
எனக்குச் செய்திகளை
அனுப்புகின்றனர்
"நீங்கள் இன்னமும்
உயிருடன் இருக்கின்றீர்களா?"
பின்னர் அவர்கள்
எனக்கு எழுதவில்லை
எனது கலங்கிய
விடையைப் பெற்ற பின்னர்

– வஜ்ஜா அல் சுஜாச்

தற்கால உலகக்கவிதைகளின் சிறப்புப் பரிமாணங்களுள் ஒன்றாக அமைவது, பெண்ணியக்கவிதை. காலங்காலமாக நிகழ்த்தப்பட்டு வந்த ஆண் மேலாதிக்கத்துக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராகத்தோற்றம் பெற்ற பெண்ணியக்கருத்தியலை அடியொற்றிய கவிதைகள் வெளிவரத்தொடங்கியுள்ளன.

வகை மாதிரிக்கு மாயா அன்ஜலோ எழுதிய கவிதை ஒன்றினைக் குறிப்பிடலாம்.

"உங்களுடைய சொற்களால்
நீங்கள் என்னைச் சுட்டுத்தள்ளலாம்
உங்களுடைய கண்களால்
நீங்கள் என்னை அறுத்தெறியலாம்
உங்குடைய தாழா வெறுப்பினால்
நீங்கள் என்னைக்கொன்று முடிக்கலாம்
ஆனாலும் காற்றின் எழுச்சி போல
நான் எழுந்தே தீருவேன்"

பெண்ணியக்கவிதைகள் பெண்மொழியால் உருவாக்கப்படுகின்றன. முன்னர் அனுபவித்திராத மாற்றுவகைப்படிமங்களும், மாறுபாடான குறியீடுகளும் அக்கவிதைகளிலே மீண்டெழுகின்றன.

அதிதீவிரமான பெண்ணியச் சிந்தனைகளைக் கவிதை வெளிக்குக்கொண்டு வரும் ஆக்கங்களும் பரவலுற்று வருகின்றன. ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

கவிதையை எழுதியவர் சில்வியா பிளாத்

"சாம்பற் குவியலில் இருந்து
சிவப்புத்தலைமுடி மினுங்க
நான் மேலெழுகின்றேன்
வலிய காற்றின் சுவாலைபோல்
நான் ஆண்களைத் தின்று விடுவேன்"

பெண்ணியக்கவிதைகள் எழுதியவர்களுள் அமெரிக்கக்கருமை இனப்பெண்கள் சிறப்பிடம் பெறுகின்றனர். பெண்கள் என்ற நிலையிலும் நிலைத் தாக்கங்களை அனுபவித்து வருபவர்கள், அமெரிக்கக் கருமை இனப்பெண்கள்.

ஒரு வகையில் இந்திய சாதியச்சமூகத்தில் தலித்தியப்பெண்களும் இரு வகைத்தாக்கங்களை அனுபவிக்கின்றனர். பெண்ணிய அடிப்படையிலே தாக்கம், சாதிய அடிப்படையிலே இன்னொரு தாக்கம்.

அமெரிக்கக் கருமை இனப்பெண்களும், இந்தியத் தலித்தியப்பெண்களும் அனுபவித்தரும் பிறிதொரு தாக்கம் தாழாத வறுமை. அடிப்படை வயதிகள் அற்ற நிலையில் வாழும் அவல வாழ்க்கை.

சமகாலக்கவிதையை வளப்படுத்தும் பிறிதொரு வடிவம் "அரசியற் கவிதை" கடந்த முப்பது ஆண்டு காலப்போரில் இலங்கைத் தமிழ்ச்சூழலிலே பெரும் எழுச்சி கொண்டவை அரசியற் கவிதைகள் தான். அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்களைத் தனிமனித உணர்வுகளாலும், அவலத்துக்கு உள்ளாகும் சமூக மனத்தாலும் வெளிப்படுத்துபவை அரசியற்கவிதைகள்.

பரந்த நோக்கில் பார்க்கும் பொழுது அனைத்துக் கவிதைகளும் ஏதோ ஒரு வகையிலே அரசியற் சாயல் களைக்கொண்டிருந்தாலும், அரசியல் உள்ளீடு மிகையாகப் பொதிந்திருத்தலும், கவிதைச்செறிவைக் கொண்டிருத்தலு மான வடிவங்கள் அரசியல் கவிதை களாகின்றன. அவை அரசியல் உற்றுணர்வுடனும் வினைப்பாடுகளுடனும், கருத்துப்பகிர்வுகளுடனும் தொடர்புபட்டிருக்கும்.

கருத்தியலை வெளிப்படுத்துதல், எதிர்ப்புணர்வை வெளியிடல், நியாயப்பாடுகளைப் புலப்படுத்துதல், அரச பயங்கரச்செயல்களைப் புலப்படுத்துதல், நடந்த நிகழ்ச்சி களைப் படிமங்களாக்குதல், மாற்றங்களை வேண்டுதல் முதலாம் பல்வேறு நிலைகளிலே சமகால அரசியற் கவிதைகள் எழுதப்படுகின்றன.

இலங்கையின் போர்க்காலம் மற்றும் புலச்சிதறல் வாழ்க்கையோடு இணைந்த கவிதைகள் உலகக் கவிதைப் பரப்பிலே நீடித்த அடையாளங்களைப் பதிக்கத்தக்கவை. அக்கவிதைகளை உலகவெளிக்கு எடுத்துச் சென்ற பணியை மேற்கொண்டவர்களுள் பேராசிரியர் செல்வா கனகநாயகம் முக்கியமானவர்.

உலக அரசியற்கவிதைப் பரப்பில் அதிக தாக்கங் களை ஏற்படுத்தியவை. சல்வடோர் பெண்களின் அரசியல் கவிதைகள், அரசியலோடு இணைந்த கொடூரவன் செயலால், பெருந்தொகையான மக்கள் கொல்லப்பட்டனர். இருபது இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அதிக பட்டின வாழ்வுக்கு உட்பட்டனர். சல்வடோரில் இராணுவத்தால் பெண்கள் கொடூரமான பாதிப்புக்களை அனுபவித்தனர். பெருமளவில் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப் பட்டனர். அந்த அனுபவங்கள் கவிதைகளாக வெளிவந்தன.

மெக்சிக்கோ பெண்கள் கவிதை, நிக்கராகுவன் அரசியற் கவிதைகள், ஐரிஸ் அரசியற் கவிதைகள், கென்னியன் அரசியற் கவிதைகள், என்றவாறு பல்வேறு புலங்களிலே உலக அரசியற் கவிதைகள் எழுச்சி பெற்றன.

ஒடுக்குமுறையும், போரும், அவலங்களும் நிகழும் வேளை, அவற்றின் மொழிவழி ஆக்க வெளிப்பாடாக மேற்கிளம்பி நிற்பவை அரசியற் கவிதைகள். அவற்றிலே காணப்படும் ஒரு சிறப்புப் பண்பு இசைக்கோலங்கள் நிறைந் திருத்தல். சிறப்பாக நாட்டார் இசைப்பண்புகள் அவற்றிலே பொதியப்பெற்றிருக்கும்.

சமகால உலகக்கவிதைப்பெருக்கம் வலைத் தளங்கள் வாயிலாக பிறிதொரு நிலையில் நிகழ்த்தப்படு கின்றன. வலைத்தளத்தால் இணைக்கப்பட்ட சமூகத்தில் வாழ்வோர் தமக்குள் இலக்கியத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இணையவழி வெளியீட்டு உலகம் ஒன்று உருவாக்கம் பெற்று வருகின்றது. இணையவழிச் சமூகத்தினால் உருவாக்கப்படுவது மாற்றுவகை இலக்கியம் (ALTERNATIVE LITERATURE) எனப்படும் அந்த இலக்கிய வெளியில் கவிதைகளே பெருமளவில் உருவாக்கம் பெறுகின்றன.

இணைய வழிக்கவிதைகள் சொற்படிமங்களுடன் காட்சிப்படங்களும் கலந்து உருவாக்கப்படுகின்றன. அதே வேளை உடனடியாக இணையச்சமூகத்துக்குச்சென்று அடையக்கூடியனவாயும், உடனடித்துலங்கலைப் பெறக் கூடியனவாயுமுள்ளன. பன்முக உள்ளடக்கங்களில் பன்முக மனநிலைகளில், பன்முக இலக்குகளுடன் அவை எழுதப்படுகின்றன. (காண்பியத்துடன் இணைக்கப்பட்ட) இணைய வழிக்கவிதை ஒன்று வருமாறு.

“அகல் வெளியோ
மிகவும் பெரியது
நான் அசைந்து செல்கின்றேன்
ஆனாலும் நான்
அதே இடத்தில் நிற்கின்றேன்”

இணையவழி ஆக்கங்கள், கவிதை என்ற தளத்தை எட்டியவையுமிருக்கின்றன். எட்டாது விலகியவைமிருக் கின்றன. சொற்களும் தொழில்நுட்ப இணைவும் இணையக் கவிதைகளுக்குரிய தனித்துவம்

---

## ஒருத்தருக்கும் ஓதிப்போடாத...!



அடியேய்...
அறிஞ்ச நீயே!...

உவள் உமாவல்லே
ஓடிப்போட்டாளாம்!...
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

உவன் சிவா முடிச்சது
நம்ம சாதிசனமில்லையாம்!...
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

உவன் சுதா வெளிநாட்டில
உது ஊரூராய் திரியிதாம்!...
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

உவன் சதா கடன்பட்டுத்தான்
கலியாணம் செய்யிறானாம்!...
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

உவள் கலா காக்காபிடிச்சித்தான்
தன்காரியம் பாத்தாளாம்!
ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள் நமக்கேன்?

இப்படியே,
ஒருத்தர் விடாமல்
ஒவ்வொருவருக்கும்
ஓதப்படும் மந்திரம்தான்;
“ஒருத்தருக்கும் ஓதிப்போடாத
உனக்கு மட்டுந்தான்!
ஊர்க்கதையள்
நமக்கேன்?”

செ.அன்புராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரன்னை

# வரம்பு

"தடார்! கிளிங்!"

ஏக காலத்தில் சங்கமமாகிய அந்தச் சத்தம் வீட்டின் எஜமானியாகிய அந்த அரபுப் பெண்ணை திடுக்கிட வைத்தது. சோபாவை விட்டு எழுந்து வந்தவள். சமையலறைப் பக்கம் பார்த்தாள். அவர்கள் வீட்டுப்பணிப்பெண்ணாகிய நசீரா, தரையில் விழுந்து கிடந்தாள்.

எஜமானியைக் கண்டதும் அச்சமேலீட்டினால் துடித்துப்பதைத்து எழுந்தவள், நிலத்தில் சிதறிக்கிடந்த பீங்கான் துண்டுகளைப் பொறுக்கத்தொடங்கினாள். அவற்றை அப்புறப்படுத்திவிட்டு நிலத்தையும் சுத்தப்படுத்தினாள். அவளுடைய செய்கைகளை அவதானித்த எஜமானி, எதுவும் பேசாமல் திரும்பிப்போய்விட்டாள்.

நசீரா என்ற பெயருடன் அந்த வீட்டில் உலாவரும் கவிதா என்ற இலங்கைப் பெண்ணுக்கு, எஜமானியின் இச்செய்கை ஆச்சரியத்தைக்கொடுத்தது. மளமளவென்று மீண்டும் ஒரு கப் தயாரித்தவள், அதை எடுத்துக்கொண்டு போய் எஜமானியிடம் நீட்டினாள். எதுவும் நடந்தது போல் காட்டிக்கொள்ளாமல் எஜமானியும் "சூப்"பைக் கையிலெடுத்து, ருசித்துக் குடிக்கத்தொடங்கினாள். கவிதாவுக்கு எஜமானியின் இன்றைய செய்கை ஆச்சரித்தைக்கொடுத்தது. மற்றும் வேளைகளில், அவள் செய்யும் சிறு தவறுகளுக்கும் அவள் அரபுமொழியில் கன்னா பின்னாவென்று கூச்சல் போடுவாள். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாதவளாய் கவிதா பயந்து நடுங்கி ஒடுங்கிப்போய் நிற்பது வழக்கம்.

எஜமானி "சூப்"பைக் குடித்துவிட்டு "கப்"பை நீட்டினாள். காத்திருந்த கவிதா, அதை பக்குவமாய் வாங்கிக்கொண்டு போய் கழுவி வைத்துவிட்டு அன்றைய சமையலை கவனிக்கத் தொடங்கினாள். கைகள் முனைப்புடன் வேலையில் ஈடுபட, மனமோ அவளது இச்சைக்குக் கட்டுப்பட மறுத்து, எங்கோ அலைபாயத்தொடங்கியது.

கவிதா, இறுதிக்கட்ட ஈழப்போரில் கையில் ஒரு குழந்தையுடன் விதவையாகியவள், அவளது கணவனான கபிலன், தனது தாயையும், தங்கையையும் இவளுக்குச் சுமையாக்கி விட்டு, சீறி வந்த கொத்துக் குண்டினால் உடல்சிதறிப்பலியாகி விட்டான். எனவே, கவிதா தனது கணவனைப்பெற்றவளுக்காகவும், அவனுடன் கூடப்பிறந்தவளுக்காகவும், அதற்கும் மேலாக தனது உதிரத்தில் உதித்த... இல்வாழ்வின் சின்னமான மழலை கவியரசிக்காகவும், இன்று இந்த அரேபிய மண்ணில் அடிமையாக, ஓடாய் உழைத்து பணம் சம்பாதிக்கின்றாள்.



தங்களிடமிருந்த ஒரே சொத்தான ஓலைக் குடிசை யுடன் கூடிய வளவை அடமானம் வைத்து, முகவர் ஒருவர் மூலம் இந்த அரேபிய மண்ணில் காலடி எடுத்து வைத்தாள். தனக்கு மாதாந்தம் கிடைக்கும் சம்பளத்தொகையை தனது மாமியாரின் பெயரிலுள்ள வங்கிக்கணக்கிற்கு அனுப்பி வைத்துவிடுவாள்.

அபுதாபியிலுள்ள இந்த அரபியின் வீட்டில் வேலைக்குச் சேர்ந்து நான்கு மாதங்கள் நகர்ந்து போய் விட்டன. ஆரம்ப நாட்களில் அவளுக்கு அங்கு இருக்கவே பிடிக்கவில்லை. எந்நேரமும் வீட்டு நினைவு வந்து அவளை அங்கு நிலைகொள்ள விடாது துன்புறுத்தியது. மகள் கலையரசி கண்ணுக்குள் நின்று அவளை அலைக்கழித்துக்கொண்டிருந்தாள். பொங்கி யெழுந்த உணர்வுகளை ஒருவாறு. தன்னிலைப்படுத்திக் கொண்டவள், வீட்டு வேலைகளில் தன் முழுக் கவனத் தையும் செலுத்தி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

எனினும் அவளுக்குப் பூதாகரமாகத்தோன்றிய பிரச்சினை அவர்களுடைய பாஷைதான். அரபிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி அவளுக்கு முற்றாகப் பரிச்சயமற்ற ஒரு பாஷை தானே. அதனால் அவள் பல கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. முதலில் சைகை மூலம் அரைகுறையாக விளங்கிக்கொண்டவள், நாளடைவில் ஒவ்வொரு சொற்களாக பேசக்கற்றுக்கொண்டாள். அந்த வீட்டுக்குழந்தைக்கு நான்கு வயதிருக்கும். அதைப் பராமரிக்கும் பொறுப்பினையும் அவள் விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டாள் .கவிதாவின் குழந்தையை ஒத்திருந்த அந்தச் சிறுமி அவளுடன் நன்றாக ஒட்டிக்கொண்டதில் மனநிறைவு கிடைத்தது. ஆயிஷா என்ற அந்தக்குழந்தையிடமிருந்து தான் அவளால் அரபு மொழியை இலகுவாக கற்றுக்கொள்ள முடிந்தது.

அபுதாபி ஒரு சிறுதீவு. சில நாட்களில் மாலை வேளையில் எஜமானியின் உத்தரவின் பெயரால் அந்தக் குழந்தையை அவள் கடற்கரைக்கு அழைத்துச்செல்வதுண்டு. கடற்கரை மணல் மீது அமர்ந்து எங்கும் நீலநிறமாய் வியாபித்திருக்கும் கடலை கண் கொள்ளாமல் பார்த்து இருவரும் ரசிப்பார்கள். இரு கைகளாலும் மணலை வாரிக்குவித்து வீடு கட்டுவாள், கவிதா. குழந்தை அதை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அலையொன்று வந்து அதனை அடித்துக்கொண்டு போகும். ஆயிஷா அதைப் பார்த்து கைதட்டி ஆரவாரம் போடுவாள். அந்தக் குழந்தையின் மகிழ்ச்சி கவிதாவுக்கு உற்சாகத்தைத் தரும். இப்படியாக அவர்கள் இருவரும் மெய்மறந்து பொழுதை இனிமையாகக் கழிப்பார்கள்.

அன்று ஒரு வெள்ளிக்கழமை கவிதாவும் ஆயிஷாவும் கடற்கரை மணலில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கவிதா மணலுக்குள் கைகளைப் புதைத்து அளைந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அவளது எண்ணத்தில் கவியரசி புகுந்து விளையாடியதில் அவள் தன்னை மறந்து மகளது நினைவுகளுடன் ஒன்றிப்போனாள்.

நேரம் போனதுகூட அவளது புலனுக்குத் தோற்றவில்லை. சுயநினைவு வரப்பெற்றவளாய் அவள் நிமிர்ந்து பார்த்தபோது ஆயிஷாவை அங்கு காணவில்லை. ஓராயிரம் தேள்கள் ஒருமித்து அவளது தலையில் கொட்டிவிட்டது போன்றதோர் பிரமையில் துடித்துப்பதைத்துப் போனவளாய் குழந்தையைத் தேடத்தொடங்கினாள்.

"ஆயிஷா! ஆயிஷா!!"

அலறியடித்துக்கொண்டு கடற்கரை மணலில் கால்கள் புதையப்புதைய ஓடினாள். சற்றுத்தொலையில் குழந்தை யாரோ ஒருவருடன் நிற்பதைக் கண்ணுற்றதும் தான் அவளால் நிதானத்திற்கு வர முடிந்தது. அவளைக் கண்டதும் குழந்தை ஓடி வந்து அவளிடம் ஒட்டிக் கொண்டது. குழுந்தையுடன் நின்றவனை கண்களால் நோட்டமிட்டவாறே "ஆயிஷா! வா வீட்டிற்குப்போகலாம்" என அரபியில் அழைத்தாள்.

"போ நசீரா நான் வரவில்லை" என்றது குழந்தை.

கவிதாவுக்கு தூக்கி வாரிப்போட்டது. செய்வதறியாது திகைத்துப்போய் நின்றாள். அந்தப் புதியவனோ ஆயிஷாவைத் தனது கைகளுக்குள் சிறைப்படுத்தியவாறே அவளைப் பார்த்துச் சிரித்தான். கவிதா எரிச்சலுடன் கேட்டாள்.

"இஸ்மாக்" (பெயர் என்ன)

"நந்தன்"

கவிதாவுக்கு மூளையில் பொறி தட்டியது. இவன் தமிழன் போல் தெரிகிறது. எதற்கும் விசாரித்துப்பார்த்தால் தெரிந்துவிடும் என்று நினைத்தாள்.

"எந்த ஊர்?"

தமிழில் அவள் பேசியதைக்கேட்டதும் அவன் அதிர்ந்து போனான். "கறுப்பு அங்கியும் பர்தாவும் அணிந்திருக்கும் இவள் தமிழில் பேசுகிறாளே. ஒரு வேளை எம் நாட்டு முஸ்லிம் பெண்ணாக இருப்பாளோ... குழந்தைப்வேறு அவளை நசீரா என்று அழைத்ததே" குழப்பம் மேலிட்டவனாய் "ஸ்ரீலங்கா" என்று பதிலளித்தான்.

காரிருளில் ஒரு பொட்டு வெளிச்சத்தைக் கண்டது போல் கவிதாவின் மனம் குதூகலித்தது.

"நானும் ஸ்ரீலங்காதான். சொந்த இடம் முல்லைத்தீவு"

சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"நான் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவன். இங்கு இதே ஊரில்தான் ஒரு கம்பனியில் மேசன் வேலை செய்து கொண்டிருக்கிறேன். வெள்ளிக் கிழமை எங்களுக்கு ஓய்வு நாள். எனக்கு இங்கு பேசப்பழக எவருமே இல்லை. எல்லாம் பாஷைப்பிரச்சினை தான். அதனால்த்தான் கடலையாவது பார்த்துக்கொண்டே பொழுதைக்கழிக்கலாம் என கடற்கரையை நாடி வந்திருக்கிறேன்"

பொல பொல வென்று கொட்டும் மழையைப் போல அவன் பொரிந்து தள்ளிய வார்த்தைகள் அவளுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

"என்னுடைய நிலைமையும் அதுதான்"

"ஏன் உங்களுக்குத்தான் இந்த அருமையான குழந்தை இருக்கிறதே"

கலகலவெனச் சிரித்தாள் கவிதா. ஊரிலிருந்து வந்த பின் இன்றுதான் அவள் மனம் விட்டுச் சிரித்திருக்கிறாள்.

"உங்களுக்கு இவளைப்போல் குழந்தை..."

"சரியாகச் சொன்னீர்கள். எனக்கும் இவள் வயதில் ஒரு குழந்தை இருக்கிறாள் பெயர் புகழினி"

"அழகான தமிழ்ப்பெயர்"

"அது சரி. நீங்கள் உங்களைப் பற்றி சொல்லவில்லையே"

"எனது பெயர் கவிதா. இங்கு நசீரா என்ற பெயருடன் ஒரு அரபியின் வீட்டின் பணிப்பெண்ணாக வேலை செய்கிறேன்"

"உங்களை நான் கவிதா என்று அழைக்கலாமா?"

"ஓ...தாராளமாக"

கூறியவாறு கடற்கரையைத் திரும்பிப்பார்த்தாள். அங்கு அடிவானின் மேல் செம்பருத்திக்கோளம் தகதக வென்று பிரகாசிக்க, இத்தனை நேரமும் தன் ஒளிக்கற்றைகளால் பிரபஞ்சத்தை ஒளிர வைத்த பகலவன் மெது மெதுவாக அந்தச் செம்பருத்திக்குவியலுக்குள் புதைந்து கொண்டிருந்தான்.

கவிதா பரபரப்புடன் புறப்படத்தயாரானாள்.

"நேரமாகிவிட்டது. நாங்கள் போக வேண்டும் நீங்கள் தினமும் இங்கு வருவீர்களா?"

"இல்லையில்லை. வெள்ளிக்கிழமைகளில் மட்டும் தான் வருவேன். மற்றைய நாட்களில் மூச்சுவிடக் கூட நேரமில்லை. தொடர்ந்து வேலைசெய்யவேண்டும். கடினமான வேலைதானென்றாலும் சம்பளம் அதிகமாகவே கிடைக்கின்றது. அதற்காகத்தானே பிறந்த மண்ணை விட்டு இங்கே வந்திருக்கிறோம்"

அவனது மனச்சஞ்சலம் வார்த்தைகளில் தொனித்தது.

"சரி, அப்படியானால் அடுத்த வெள்ளிக்கிழமை சந்திப்போம்"

பதிலுக்குக்கூட காத்திராமல் ஆயிஷாவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துக்கொண்டு போய்விட்டாள், கவிதா. அன்றைய இரவு முழுவதும் நந்தனைப் பற்றிய நினைவுகளே வந்து அவளை அலைக்கழித்தன. அவனுடன் உரையாடிய அந்தச்சில நிமிடங்களில் அவள் தனது சொந்த ஊருக்கே போய் வந்துவிட்டதொரு பிரமையில் திளைத்துப் போனாள். தினமும் தான் ஊருக்குப்போகும் நாளை எண்ணி கணக்கிட்டுக்கொண்டிருப்பவள், இன்று வெள்ளிக்கிழமை எப்போது வரும் எனக்காத்திருந்தாள்.

அங்கு, நந்தனின் நிலைப்பாடும் இவளையே ஒத்திருந்தது. வேற்று மண்ணில்.... தனது கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி ஆற, வாய்விட்டுத்தாய்மொழியில் உரையாட ஒரு துணை கிடைத்துவிட்ட நிம்மதியுடன் நித்திரைக்குப்போனான்.

ஆமை வேகத்தில் நாட்கள் நகர, ஒருவாறு வெள்ளிக்கிமையும் வந்து சேர்ந்தது. எனினும் எஜமானி இன்று வெளியில் போக அனுமதிப்பாளோ என்றொரு ஐயமும் இருக்கத்தான் செய்தது. வழமைக்கு மாறாக வீட்டு வேலைகளையெல்லாம் நேரத்தோடு கச்சிதமான முடித்து விட்டு வலிய வந்து எஜமானியிடம் அனுமதி கேட்டாள். அனுமதி கிடைத்ததும் அவளது உள்ளத்தில் பட்டாம் பூச்சிகள் சிறகடிக்க, ஆயிஷாவையும் பற்றிக்கொண்டு போவதைக் காண எஜமானியின் மனம் நிறைந்து போனது. அவளுக்கு நசீரா மீது கருணை பொங்கி வழிந்தது.

கடற்கரையில் நந்தன் அவர்களுக்காகக் காத்திருந்தது இருவருக்குமே மகிழ்ச்சியைத் தந்தது. நந்தன் ஆயிஷாவிடம் தான் கொண்டு வந்திருந்த, உயர்ரக சாக்லேட்டுக்களை நீட்டினான். அதை வாங்கிக் கொண்டவள், அவனருகிலேயே அமர்ந்துகொண்டாள். கவிதாவும் மறுபக்கம் அமர, ஆயிஷா ஒரு குட்டி பொம்மைப்போல் இருவருக்கும் நடுவில் காட்சியளித்தாள். இருவருமே ஊரிலுள்ள தங்களது குடும்பத்தவர்களின் கஷ்ட நிலையை ஒருவருக்கொருவர் பரிமாறி, தமது மனப் பாரத்தைக் குறைத்துக்கொண்டனர்.

நந்தனுடன் பழகத்தொடங்கியதிலிருந்து கவிதாவுக்கு மனதில் ஒரு புதுத்தெம்பு தோன்றியிருந்தது. அன்றாடம் நடக்கும் சிறுவிடயங்களைக்கூட மனதில் சேர்த்து வைத்து அவனைச் சந்திக்கும் போது ஒப்புவித்து விடுவாள். அவனும் அவளுக்காக அனுதாபப்படுவான். அத்துடன் தனக்கு வேலைத்தளத்தில் கிடைக்கும் புது அனுபவங்களை ஒன்று விடாமல் கூறி அவளுடன் பகிர்ந்து கொள்வான். எனவே, இருவருக்குமிடையில் புரிந்துணர்வும் நட்பும் பெருகிக்கொண்டே போயிற்று.

ஒரு புதன்கிழமை, திடீரென எஜமானி நசீராவை அழைத்து அவளிடம் ஒரு வியப்பூட்டும் செய்தியைக் கூறினாள்.

"ஏய் நசீரா! நாங்கள் ஒரு கல்யாணத்திற்காக மலேசியா போகவேண்டியிருக்கு. நீதான் தனிய இருந்து வீட்டை பாத்துக்கொள்ளவேணும்"

திடுக்கிட்ட நசீரா தலையை மட்டும் ஆட்டி தனது ஒப்புதலை தெரிவித்துக்கொண்டாள். தனிமை தனது மனதுக்குச் சற்று நிம்மதியைத் தரும் என அவள் நம்பினாள். ஆனால்... ஆயிஷா அவளைவிட்டு வரமாட்டேன் என அடம் பிடித்தது. திடுக்கிட்டுபோனவளாய் கவிதா குழந்தையைச் சமாதானப்படுத்தினாள். எங்கே குழந்தை தன் மீது காட்டும் பாசம் பெற்றவளின் மனத்தில் பொறாமையை விதைத்துவிடுமோ என்ற அச்சமேலீட்டினால் குழந்தைக்கு நயமாக எடுத்துச்சொல்லி அவளையும் அவர்களுடன் அனுப்பி வைப்பதற்குள் அவளுக்குப் போதுமென்றாகி விட்டது.

இரவு பதினொரு மணிக்குத்தான் "பிளைட்" என்று சொல்லி அவர்கள் மாலையே புறப்பட்டு விமான நிலையத் திற்குப் போய்விட்டார்கள். கவிதாவுக்கு ஆயிஷா இல்லாத வீடு சூனியமாகக் காட்சியளித்தது. எனினும் வீட்டுவேலைகளில் தன்னை ஈடுபடுத்தி தனிமையைப் போக்கிக் கொண்டாள். முதலில் வீட்டைச் சுத்தப்படுத்தியவள், துவைக்க வேண்டிய துணிகளையெல்லாம் திரட்டி, வோஷிங் மெசினில் போட்டாள். சிறிது நேரம் ஓய்வெடுக்க நினைத்த போது, அவளையறியாமலே எண்ணப்பறவை சிறகடித்து சொந்த ஊர் நோக்கி பயணிக்கத் தொடங்கி விட்டது.

முதலில் எண்ணச் சுழலில் சிக்கியது அவளது கணவன் கபிலன் தான். அவனை முதல் முதலில் சந்தித்த அந்த நாள் நினைவுகள் இப்போதும் அவளது உள்ளத்தில் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. அவர்களிருவரும் திருமண பந்தத்தில் இணைந்த அந்த நாள் நினைவில் தோன்ற ஏக்கப்பெருமூச்சினால் அவளது நெஞ்சறை ஒரு தரம் விம்மித் தணிந்தது. அடுத்து கவியரசியைப்பெற்றெடுத்த நாள் நினைவுகளில் மூழ்கிப்போனாள். அரை மயக்கத்தில் சோர்ந்து போய்க்கிடந்தவளின் முன்னால் கபிலனே தொட்டிலில் துயின்று கிடந்த தங்களது வாரிசைத் தூக்கி வந்து காட்டினான். குழந்தையின் பட்டு மெனியைத் தொட்ட சுகத்தில் அவள் கிறங்கிப்போனவளாய் கணவனை நோக்குகிறாள். அப்பாவாகிவிட்ட பெருமையும் மகிழ்ச்சியும் அவன் பார்வையில் கொந்தளிக்கின்றது. இனி அந்த முகத்தை அவளால் பார்க்க முடியாது. வெறும் நினைவுகளை மட்டும் தான் அவளால் மீட்டுப்பார்க்க முடியும்.

"ம்!..."

நீண்ட பெருமூச்சொன்று அடி வயிற்றிலிருந்து மேலெழுந்து வெளியே வந்து அந்த அரேபிய மண்ணின் அனற் காற்றுடன் சங்கமமாகியது.

கடைசிக்கட்ட ஈழப்போர். பதுங்கு குழிக்குள் வைத்து குழந்தைக்குப் பாலூட்டிக்கொண்டிருந்தாள், கவிதா. கபிலன் இயற்கைக்கடன் கழிப்பதற்காக வெளியே போயிருந்தான். அந்தச் சமயம் பார்த்து குண்டுகளின் இரைச்சல் காதைத் துளைத்தது. கவிதா பதறிப்போனவளாய், இதயம் படபடக்க குழந்தையை இறுக அணைத்தவாறு கணவனை எண்ணித் துடித்துக்கொண்டிருந்தாள். சத்தம் ஓய்ந்ததும் வெளியே வந்து பார்த்தால்... ஒரு மரத்தின் கீழ் இரத்தவெள்ளத்தில் கபிலன் குற்றுயிராய்க் கிடந்தான். பதறித் துடித்த கவிதாவை ஒரு கணம் ஏறிட்டுப்பார்த்தவன், "அம்மாவையும் தங்கச்சியையும் பார்த்துக்கொள்" என அரைகுறையாகச் சொல்லிவிட்டு குழந்தையின் முகத்தைப்பார்த்தவாறே இறுதி மூச்சை விட்டான்.

கன்னங்களில் வழிந்து ஓடிக்கொண்டிருந்த கண்ணீரைக் கைகளால் துடைத்துக்கொண்டாள். சோகத்தினால் இறுகியிருந்த மனம் அழுததினால் சற்று லேசாகியது. இப்படி ஆறுதலாய் இருந்து அழக் கிடைத்ததே பெரும் பாக்கியம் எனக்கருதியவள், எழுந்து போய் ஏற்கனவே வோஷிங் மெசினில் கழுவி வைக்கப் பட்டிருந்த துணிகளை எடுத்து டிறையரில் போட்டாள்.

அன்றைய பொழுது ஆமை வேகத்தில் நகர்ந்து போயிற்று. மறுநாள் வெள்ளிக்கிழமை பொழுது விடிந்ததும் எங்கிருந்தோ வந்த சுறுசுறுப்பு அவளைக் கவ்விக்கொண்டது. நந்தனுக்கும் சேர்த்து ஏதாவது சமைத்து எடுத்துப்போகலாம் என்று நினைத்தாள்.

தனக்கு சாப்பாடு சரியில்லை என்று அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி புலம்பிக்கொண்டிருப்பான். இன்று வாய்க்கு ருசியாக எதையாவது சமைத்துக்கொண்டு போய்க் கொடுக்கலாம் என அவளது உள் மனம் விரும்பியது. உடனே செயலில் இறங்கிவிட்டாள்.

அவளுக்கு அவன் மீது வாஞ்சை ஏற்பட மற்றுமொரு காரணம் இருந்தது. அவளது உடன்பிறப்பான சாந்தன் அச்சொட்டாக நந்தனை ஒத்திருப்பான். அவள் வல்வைக்கடலில் தன்னை ஆகுதியாக்கி, கரைந்து போனவன். நந்தனோடு பழகும் பொது கவிதாவின் நெஞ்சத்தில் சாந்தனின் நினைவுகள் வந்து அலைமோதும். உணவைத் தயாரித்த கவிதா, அதை இரு பொட்டலங்களாக எடுத்துக்கொண்டு கடற்கரை நோக்கிப் புறப்பட்டாள்.

காலையிலேயே கடற்கரைக்கு வந்து சேர்ந்த கவிதாவைக் கண்டு நந்தனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"என்ன கவிதா! இண்டைக்கு நேரத்தோடயே... அதுவும் தனிய.."

ஆச்சரியம் வார்த்தைகளாய் வெளிவந்தது. ஆறுதலாய் வந்து அவனருகில் அமர்ந்து கொண்ட கவிதா, தனது வீட்டுக்காரர் மலேசியாவுக்குப் போயிருப்பதை விபரித்தாள். இருவருக்கும் எல்லையற்ற மகிழ்ச்சி.

"நந்தன்! வா முதல்ல சாப்பிடுவம். நானும் காலையில சாப்பிடேல்ல"

இருவரும் சாப்பிடத்தொடங்கினார்கள். நந்தன் உணவை ரசித்து, ருசித்துச் சாப்பிடுவதை கவிதா ஓரக்கண்ணால் பார்த்து மகிழ்ந்தாள். அவளது கண்களுக்கு சாந்தனே நந்தனது உருவத்தில் தோன்றினாள். என்னதான் கலகலப்பாய் இருந்தபோதிலும் கவிதாவின் மனம் மட்டும் "திக்திக்" என அடித்துக்கொண்டிருந்தது. இருந்த போதிலும் அவளது மனதில் ஒரு அசுரத்துணிவு தோன்றிவிட்டது.

"நந்தன்! நெடுகலும் நீ வேர்க்சைட்டில நான் வீட்டுக்குள்ள. என்று அடைஞ்சு கிடக்கிறம். இன்றைக்கு எங்கையாவது வெளியில போய் வருவமா?"

கவிதாவின் துணிச்சல் நந்தனையும் உஷாரடையச் செய்து விட்டது.

"கவிதா! எங்கை போறதென்பதையும் நீயே தீர்மானி"

"துபாயில "குளோபல் வில்லேஜ்" என்று ஒரு பொருட்காட்சி மையம் இருக்கிறதாம். அங்கை போய்த் தான் எங்கட வீட்டுக்காரர் விதம் விதமான சாமான்களை வாங்கிக்கொண்டு வாறவை. சும்மா நாங்களும் போய் ஒருக்கா பாத்து வைச்சா.. பேந்து நாங்கள் ஊருக்குப் போகேக்க ஏதும் வாங்கிக்கொண்டு.போகலாம். எப்பிடி என்ரை ஐடியா"

கேள்வியுடன் நிறுத்தினாள், கவிதா. அவளை நிமிர்ந்து பார்த்தான், நந்தன். அவனது பார்வையில் ஒரு கிறக்கம் இருப்பதை அவதானித்தவள், ஒரு வேளை நீண்ட காலத்தின்பின் சுவையான நாக்கிற்கு இதமான உணவை உண்டதனால் ஏற்பட்ட கிறக்கமாக இருக்கலாமென ஊகித்துக்கொண்டாள். இருவரும் அபுதாபி பஸ்தரிப்பை நடந்து சென்று, துபாய் பஸ்ஸில் ஏறிக்கொண்டனர்.

நந்தன் அரபுமொழியில் சரளமாகப்பேசியது கவிதாவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சைற்றில் மற்றைய தொழிலாளர்களுடன் நாள் முழுவதும் பழகுவ தனால் இலகுவாக மொழியைக் கற்றுக்கொள்ள முடிந்தது என்று நந்தன் அவளுக்கு விளக்கமளித்தான். அவர்களது கற்பனையில் விரிந்திருந்தைவிட "குளோபல் விலேஜ்" பன்மடங்கு விஸ்தீரனமாய் அமைந்திருந்தது. பல்வேறு நாடுகளின் பெயரில் முகப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. உள்ளே ஒவ்வொரு தொகுதிகளிலும் பகுதி பகுதியாக வெவ்வேறு விதமான அலங்காரப்பொருட்கள், ஆடை வகைகள், வீட்டுப்பாவனைப்பொருட்கள் என எல்லா விதமான பொருட்களும் விற்பனையாகிக்கொண்டிருந்தன. அவர்கள் எல்லாவற்றையும் கண்டு களித்ததோடு சரி. யாதொரு பொருளையும் வாங்க எத்தனிக்கவில்லை. இரண்டொரு பொருளுக்கு விலையைக் கேட்டுப் பார்த்தார்கள் ஏணி வைத்தாலும் எட்டாத அளவுக்கு விலைகள் உச்சமாய் இருந்தன.

நன்கு பரிச்சயமானது போல் தோன்றிய ஒரு தொகுதிக்குள் நுழைந்த போது அவர்களுக்கு அதிசயம் காத்திருந்தது. தமிழ்ப்பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருப்பதைச் செவியுற்றதும் அவர்களது மேனி புல்லரித்தது. தேமதுரத்தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியாரின் கூற்றை நினைவில் நிறுத்தியவளாய் கவிதா நடந்தாள். பின்னர் தான் அந்தத் தொகுதி இந்தியர்களுடையது என்பதை அவர்கள் அறிந்துகொண்டனர்.

கவிதா, ஒரு கவரிங் "பிறேஸ்லைட்"டை வாஞ்சையுடன் பார்த்ததைக் கவனித்த நந்தன் தனது பர்ஸிலிருந்து பணத்தை எடுத்துக்கொடுத்து வாங்கினான். கவிதாவுக்கு அதில் துளியும் இஷ்டமில்லை.

"நந்தன், இது இருநூறு திர்ஹாம் கொடுத்து வாங்க வேண்டிய பொருளல்ல எனக்கு இது வேண்டாம்"

கவிதாவின் மறுப்பையும் பொருட்படுத்தாது பிறேஸ்லெட்டை அவளது கையில் திணித்தான்.

"பிளீஸ் கவிதா! இதை ஏற்றுக்கொள்"

அவனது கெஞ்சல் அவளுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. அதே சமயம் அதைக்கொண்டு போய்த் தனது உடைமைகளுடன் வைக்க... அதை எஜமானி கண்டுவிட்டால்.. மனக்கிலேசம் அவளை வாட்டியது. சிரமப்பட்டு மனதைத் திடப்படுத்திக்கொண்டாள்.

பிறிதொரு இடத்தில் வானவேடிக்கைகளும் நடனங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்த நிகழ்வுகள் அவர்களுக்கு ஊரில் கானிவல் காட்சியை நினைவுக் கொண்டு வந்தது. சன நெரிசல் சற்று அதிகமாக இருந்தது. ஒருவரையொருவர் தவறவிட்டு விடுவோமோ என்ற பீதி ஏற்பட நந்தன் கவிதாவின் கையைப் பற்றி அழைத்து வந்தான். வெளியே வந்து பார்த்தால் பொழுது கருகிக் கொண்டிருந்தது. கவிதா பரபரப்படைந்தாள்

"ஐயோ நேரமாகிவிட்டது நான் வீட்டிற்குப் போகவேணும்"

அவளது கைகளின் ஸ்பரிசம் நந்தனின் உணர்வு களை முருக்கேற்றியதால் அவனது சிந்தனையில் சபலபுத்தி பூதாகரமாகத் தோன்றி அவனை அலைக்கழிக்கத் தொடங்கியது.

"ஏன் கவிதா இவ்வளவு தூரம் வந்திட்டம். இரவைக்கு ஒரு ரூம் எடுத்துத் தங்கீட்டு காலையில போகலாமே"

மனதின் சபலம் வார்த்தைகளாய் வெளிவந்தன.

அங்கு ஒரு எரிமலை வெடிக்கும் என நந்தன் எதிர் பார்க்கவில்லை. கண்கள் சிவக்க கவிதா உருத்திரகாளியாக மாறினாள். அந்நிய நாட்டின் சூழலை உணர்ந்து கொண்டவளாய் வார்த்தைகளை அளந்து வீசினாள்.

"என்னுடைய நட்பின் வரம்பு இதுவரைதான். இனி நீ உன் வழியைப் பார்த்துக்கொள் நான் வருகிறேன்"

அவன் வாங்கிக்கொடுத்த அன்பளிப்பை அவனது கைகளில் திணித்து விட்டு திரும்பிப்பாராமல் பஸ்தரிப்பை நோக்கி நடக்கத்தொடங்கினாள். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகட்டும் எல்லாம்

கிழுவங்கதியால் குச்சிகளால் வீடு கட்டி
கிணற்றடி ஈரமண்ணில் வேலியிட்டு
வாழைநாரில் நீளப்பின்னலிட்டு
அம்மம்மாவின் சேலையுடுத்தி
அம்மாவாய் அவதரித்து....

மண்ணில் சோறு காச்சி
மாவிலையில் கறி காச்சி
பலாவிலையில் பரிமாறி மகிழ்ந்த
குழந்தைக்கால ஞாபகங்கள்.

என் மண்ணின் மீதம்
இன்னும் மறக்காத வாசனையாய்
கண்ணில் ஈரமாய்
கனவுகளில் குழந்தையாய்
காலச்சிறகுகளில் கனமாயும்
கலையாத நினைவாயும்
கடக்கிறது யுகங்கள்.

கனவுக் குதிரையேறி
மனம் விரும்பும் கரையெங்கும்
போயி(யு)றங்கிப் பின்னங்கே
உயிர் நிறை வரம் வாங்கிவர
எனக்கும் ஆசையாய் இருக்கிறது.

நாளைக்குப் பிறகொரு
நூற்றாண்டுக்குப் பின்னும்
என் பேரரின்
பேரர்களின் பிள்ளைகளின்
கனவுக்குள்ளும் இத்துயர்
வேரூறாமல் போகட்டும்.

"விடுதலை"
அதன் பொருளுரையை
நாளைக்கு
என் பேரக்குழந்தைகள்
இயல்பாய் உணர வேண்டும்.

அவர்களுக்காய் இன்றைக்கு
என் எல்லாவற்றையும்
இழக்கிறேன்.
என்னோடே எல்லாத் துயரும்
மண்ணாய் போகட்டும்.

- சாந்தி நேசக்கரம்



# உயிர்

"வயரில்" உயிரேற்றி
கிடக்கிறார் கிழவர் கட்டிலில்.
சலப் பைக்குள்
மஞ்சள் நிறத்தில் கொஞ்சம் மூத்திரமிருந்தது

நெற்றியில் கதிர்காமத்து வீபூதியும்,
தலைமாட்டில் வேப்பிலையும் காவலிருந்தன.

ஓட்ஸ்சும், மாமைற்றும்,
மகி சூப்பும் இன்னும் என்னென்னவோவெல்லாம் அடுக்கியிருந்தது
அருகிலிருந்த மேசையில்.
காலை வந்து
மாலை திரும்பும்
பணிப்பெண்ணுக்கு
மாதம் இருபதாம் சம்பளமென பெருமூச்செறிந்தது
பெரிசொன்று!

வைபரிலும்
வாற்சப்பிலும்
மாறி மாறி நலம் கேட்டனர்
"வயரில் தொங்கும் உயிரின்"
பிள்ளைகள்!

'ஐயா போனா நானும் போகுடுவன்" என்ற அம்மாவின் வார்த்தை கேட்டு
மெய் குலுங்கி
பொய்யாய் அழுத பிள்ளைகளின் பாசம் கண்டு
மெய்யாய் அழுதாள் கிழவி!


"வயரை புடுங்க ஆள் முடிஞ்சிடும்" என
உறவு ஒன்று உளரியது கேட்டு
இன்னுமின்னும் அழுத கிழவி
தாலியை எடுத்து கண்ணில் ஒற்றிய போது
கிழவரின் உயிரை பற்றியிருந்த
"வயர்" உலர்ந்திருந்தது!

- மு.யாழவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். சி. சுப்பிரமணியம் அவர்களின் சமூக விடுதலைப் போராட்டங்களும் தலைமைத்துவமும்



இலங்கையில் சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்டு சமூக உரிமைகளும், மனித உரிமைகளும் மறுக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக, சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக போராடிய ஒப்பற்ற மாபெரும் தலைவர் எம்.சி. சுப்பிரமணியம் அவர்களாவார்.

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, இலங்கைப் பாராளுமன்றம் ஆகிய இந்த நிறுவனங்களின் உறுப்பினராக இருந்து கொண்டு அவர் ஆற்றிய சமூக சேவை அளப்பரியது, சாதியமும், தீண்டாமையும் கோலோச்சி தாழ்த்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும், உயர்குடித் தமிழர்களால் அடிமைகள் குடிமைகளாய் அடக்கி ஆளப்பட்ட நலிவுற்ற பஞ்சம மக்களின் மானிட சமூக விடுதலைக்கு எம்.சி.அவர்கள் அயராது அர்ப் பணிப்புடன் பாடுபட்டார். அவர் களம்பல கண்டவர். இரவும் பகலும் மக்களின் சமூக விடுதலைக்காய் உழைத்தவர். ஏழை எளிய மக்களுக்கும் விவசாயிகள், தொழிலாளிகள் மற்றும் அனைத்துப் பாட்டாளி வர்க்கத்திற்கும் அவர்களின் விடிவிற்காய் இரத்த வியர்வை சிந்திய முற்போக்குச் சிந்தனையாளர்.

எம்.சி.அவர்கள் காந்தியின் அகிம்சைக் கொள்கையினையும், ஈ.வேரா. பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையினையும் நன்கு அறிந்தவர். அவற்றினை விளங்கிக் கொண்டு வாழ்ந்தவர். அதன் பின்னணியில்தான் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தினை அவர் உருவாக்கினார். பின்னர் அது சிறுபான்மைத்தமிழர் மகாசபையாக இணைந்து கொண்டது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஸ்தாபகர்களில் மிக முக்கியமான ஒருவராக எம்.சி.இருந்தார். அவர் அந்த மகாசபை மூலம் எமது தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி, காணி, குடியிருப்பு, வேலைவாய்ப்பு, சமத்துவம், சமூக நீதி என்பவற்றிற்காகப் போராடி பல வெற்றிகளை, மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார். இப்படியான சூழ்நிலையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியையும், மகாசபையையும் வலுப்படுத்தினார்.

*1943*ல் இலங்கை, கம்யூனிஸ்ட் கட்சி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட போது டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, எம்.ஜீ. மென்டிஸ், ஆரியவன்ச குணசேகர, தோழர் கார்த்திகேசன் என்போர் கட்சியின் முக்கிய அமைப்பாளர் ஆனார்கள்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு கிளை. அமைக்க வேண்டிய பொறுப்பினை ஏற்று தோழர் கார்த்திகேசன் இங்கு வந்தார்.

*1944*ல் யாழ்ப்பாணம் வந்த தோழர் கார்த்திகேயன் முற்போக்குச் சிந்தனையோடு இயங்கிக் கொண்டிருந்த தோழர்கள் எம்.சி சுப்பிரமணியம், இராமசாமி ஐயர், டாக்டர் சு.வே.சீனிவாசகம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், அரசடி இராசையா ஆகியோரை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்து செயற்படத் தொடங்கினார். இக்கட்சியானது தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில், செல்வாக்குப்பெறத் தொடங்கியது.

க.சின்னராஜா

கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக விளங்கிய எம்.சி. அவர்கள் அக்கட்சியை வளர்த்தெடுப்பதில் தீவிரமாக உழைத்தவர். சாதிரீதியாக ஒடுக்கப்பட்டு பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு சிறந்த வழிகாட்டி என்பதை அவர் உணர்ந்தார். இதனால் சகல பாட்டாளி மக்களோடும் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி சிறுபாண்மைத் தமிழர் மகாசபையின் தலைமையின் கீழ் பலபோராட்டங்களை நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.சி. அவர்கள் சாதிக்கொடுமையால், பாதிக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர். அதனால் வடபிரதேசத்தில் நிலவிய சாதியத்தினதும், தீண்டாமையினதும் கொடிய அடக்குமுறைகளையும் அடிமை, குடிமைத் தளைக்களையும் நன்கு அறிந்தவர். எனவே சகல ஒடுக்கு முறைகளாலும் சீரழிந்து காணப்பட்ட மக்களை மீட்டெடுப்பதற்காக அவர் அயராது தானும் ஓர் போராளியாக களத்தில் நின்று போராடினார்.

எம்.சி.அவர்கள் ரஷ்சியப் புரட்சி நடைபெற்ற 1917ம் ஆண்டு யாழ்ப்பாணப் பட்டினத்திலே பிறந்தார். அவருக்கு ஐந்து வயதாக இருக்கும் போதே தனது ஆரம்பப் பாடசாலையில் இருந்து படிக்க ஆசனம் கிடைக்காமையால் அப்பாடசாலை சென்று கல்வி பயில தனது எதிர்பைத் தெரிவித்தார். பின்பு அவருக்கு ஒரு ஆசனம்போட ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வினை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியில் இருந்த மெதடிஸ்த மிசன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை முடித்த எம்.சி.அவர்கள், தனது உயர்தரக் கல்வியை மேற்கொள்வதற்காக யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு அவரின் கல்விச் செயற்பாடு களையும் திறமைகளையும் அவதானித்த ஒரு ஆசிரியரான பாதிரியார் “நீ என்ன சாதி” எனக் கேட்டு அவமதித்துள்ளார். இப்படியான சம்பவங்களும், கேவலங்களும், அவமரியாதை களும் சாதிய ஆணவத்திற்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உணர்வை அவரது மாணவப் பருவமே அவருக்குக் கற்பிக்கத் தொடங்கியது என்று துணிந்து கூறலாம்.

எம்.சி. அவர்கள் தனது இளமைக்காலத்திலே பல தரப்பட்ட சாதிய ஒடுக்கு முறைகளைக்கண்டவர். அதனால் தனது தாழ்த்தப்பட்ட சமூகம் அனுபவித்துக் கொண்டிருந்த தீண்டாமைக் கொடுமை மக்களுக்கு எதிராகப் போராடினார். கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் உட்சென்று வழிபட முடியாது. இதனால் எம்.சி. அவர்கள் மக்களை அணி திரட்டியதுடன் தானே தலைமை தாங்கிபல ஆலயக் கதவுகள் திறப்பதற்கு வழி சமைத்தார். தேனீர்க்கடைகளையும், சலூன்களையும் திறக்கப் போராடி வென்றார். யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களுக்கும் சென்று தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்று திரட்டி பல உணவகங்களையும், லோன்றிகளையும் சகல மக்களுக்கும் திறக்க வழிசமைத்தார்.

1941ம் ஆண்டு ஆரியகுளம் சந்தியில் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தை ஸ்தாபிப்பதில் எம். சி. அவர்கள் முன்னின்று உழைத்தார். இதன் மூலம் அயல்கிராமங்களில் வசித்த தாழ்த்தப்பட்ட இளைஞர்களையும் ஒன்று திரட்டி ஐக்கியப் படுத்தினார்.

1942ம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாற்றில் ஓர் முக்கிய படிக்கல்லாக அமைந்த காலமாகும். இக் காலத்தில்தான் முதன்முதலாக வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை உருவாக்கப்பட்டது. இச் சபையின் உருவாக்கத்தில் சுமார் பத்துப்பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களில் எம்.சி. அவர்கள் மிக முக்கியமான செயற்பாட்டாளராக விளங்கினார். அப்பொழுது யாழ் மாவட்டத்தின் பல கிராமங்களில் இயங்கிக் கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களின் ஸ்தாபனங்களை ஒன்று திரட்டி வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை உருவாக்கப் பாடுபட்டு வெற்றியும் கண்டார். இந்த மகாசபையின் உருவாக்கத்தில் எஸ்.ஆர் ஜேக்கப், ஆ.ம.செல்லத்துரை வி.ஜே.அரியகுட்டி, ஜி.நல்லையா, எம்.சி.சுப்பிரமணியம், அ.அந்தோனிமுத்து, டி.கணபதிப்பிள்ளை, எம்.பொன்னுத்துரை, ஏ.சி.பென்சமின் ம.சின்னப்பு என்போர் தீவிரமாக முன்னின்று செயற்பட்டனர். 24.04.1943ல் நடைபெற்ற முதலாவது மகாசபையின் மாநாட்டிற்கு தெல்லிப் பளையைச் சேர்ந்த ஆசிரியரும், கட்டிட ஒப்பந்தகாரருமான யோவேல்போல் அவர்கள் தலைமை தாங்கினார்.

1945 சோல்வரி ஆணைக்குழுவினர் இலங்கை வர இருந்தனர். அதற்கு முன்னதாக மகாசபையின் பெயரை அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை என மாற்றம் செய்யப்பட்டது. இதற்காக எஸ்.ஆர்.ஜேக்கப்பும் சிலரும் திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கத்தவர்களை சேர்த்து வந்தமை குறிப்பிடத் தக்கது. 1944ல் அ.இ.சி.த.மகாசபையின் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. இதற்கு ஏ.பி.இராஜேந்திரா தலைமை தாங்கினார்.

1945ம் ஆண்டு சோல்பரிக் ஆணைக்குழுவினரை அன்றைய பருத்தித்துறைத் தொகுதி உறுப்பினரான ஜி.ஜி பொன்னம்பலம் வடமராட்சிக்குக் கூட்டிச் சென்றார். அப்பொழுது எம்.சி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் பின்தங்கி வாழும் கன்பொல்லைக் கிராமத்தையும், மக்களின் அவல வாழ்வையும் காட்டுவதற்கு சோல்பரிக் குழுவினரை அழைத்துச் சென்றார். இதனால் ஜி.ஜி பொன்னம்பலமும், உயர்சாதி வெறியர்களும் ஆத்திர மடைந்து எம்.சி, டீ.ஜேம்ஸ் ஆகியோரைத் தாக்கமுற்பட்டனர். எனினும் அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பிச் சென்றனர்.

இலங்கை 1948 ல் சுதந்திரம் அடைந்தபின் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எம்.சி.அவர்களின் கம்யூனிஸ் கட்சித் தோழர் பொன் கந்தையா பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றி பெற்றார்.

இந்த வாய்ப்பை எம்.சி. அவர்கள் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தினரர். எமது மக்களிற்கு கல்வி, வேலை வாய்ப்பு, நிலம், வீடு போன்ற பல வசதிகளைப் பெற்றுக் கொடுத்தார். இக்காலகட்டத்தில் சுமார் 15 பாடசாலைகளை எமது மக்களுக்குக் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்தார். அத்துடன் 100க்கு மேற்பட்ட எம்மவர்கள் ஆசிரிய சேவையில் புதிதாக இணைத்து கொள்ளவும் வழிசமைத்தார்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழ் மக்களின் சமூக முன்னேற்ற வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய உயர் சமூக தமிழ்த் தலைவர்கள் என்றால் அது பொன் கந்தையாவையும் தோழர் தர்மகுலசிங்கத்தையுமே குறிக்கும். இவர்கள் இருவரும் உயர் குடியிலே பிறந்து தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்காக தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த உத்தமர்கள். இவர்களோடு எம்.சி. அவர்கள் மிக நெருக்கமாகப் பழகி எமது மக்களுக்கு வேண்டிய உதவிகளையும் பெற்றுக் கொடுத்தார். குறிப்பாக பொன் கந்தையா அவர்கள் எம்.சி. அவர்களுடைய நம்பிக்கைக்குரிய நல்ல நண்பராகத் திகழ்ந்தார்.

“பொன் கந்தையாவினுடைய சகல சமூகப் பணிகளுக்கும் எம்.சி.சுப்பிரமணியம் சுக்கானாக இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் பசுபதி, என்.கே.ரகுநாதன், எஸ்.இராசையா, கே.டானியல், டொமினிக் ஜீவா, எஸ்.செல்லையா கே.தவசிப்பிள்ளை, எஸ்.கணேசன், பி.ஜே.அன்ரனி, ரி.வி, செல்வரட்ணம், வ.சின்னத்தம்பி, கே.தங்கவடிவேல் ஆகியோர் படகோட்டிகளாகத் தொழிற்பட்டனர்" என்று எம்.குமாரசாமி அவர்கள் குறிப்பிட்டதை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

1956 ல் சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. இதன்காரணமாக 09.07.1956ல் நல்லூர் கந்தசாமி கோயில், யாழ் பெருமாள் கோயில், வண்ணார்பண்ணை சிவன் கோயில் என்பன திறக்கப்பட்டன. இந்த ஆலயப் பிரவேசத்தில் எம்.சி.யுடன் மகாசபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

13.04.1957ல் சமூகக்குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பாராளுமன்றத்தில் எம்.சி.யின் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் பொன் கந்தையா பா.உ இருந்தார். இதைப்பயன்படுத்தியே அச்சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

20.10.1958இல் அ.இ.சி.த.மகா சபையின் தேனீர்க் கடைப் போராட்ட அறைகூவல் பிரசுரம் எம்.சி அவர்களால் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக யாழ்.சுபாஸ்கபே உட்பட பல உணவகங்கள் சகல மக்களுக்கும் சமத்துவ மாகத் திறக்கப்பட்டன.

1956 தொடக்கம் 1960 வரை மகாசபை தமது மக்கள் சார்பாக எம்.சி யின் தலைமையின் கீழ் பல சமூக முன்னேற்றங்களைக் கண்டது என்று துணிந்து கூறலாம்.

1970ல் எம்.சி.அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சிபார்சின் பேரில் ஸ்ரீமாவோ அம்மையாரின் அரசு இந்நியமனத்தை வழங்கியது. வட இலங்கையில் சுமார் 40% மேற்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் கள். அப்படியிருந்தும் அவர்களுடைய சமூகத்தில் இருந்து இதுவரை எவரும் பாராளுமன்றத்திற்குச் செல்லவில்லை. இந்த மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற உயர் குடியினர் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றத்திற்காக எதுவும் செய்யவில்லை. இதேவேளை தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருக்கின்ற சில அரசியல் தரகர்களால் மக்கள் பிழையான பாதையில் வழிநடாத்தப்படுவது மிகமிக கவலையானது ஆகும்.

எம்.சி. அவர்கள் தமது பாராளுமன்ற பதவிக் காலத்திலே எமது மக்களுக்குப் பலவழிகளிலும் உதவினார். அரச உத்தியோகங்கள், காணி, குடியிருப்பு வசதிகள், பாட சாலை அபிவிருத்திகள் என்பன முக்கியமானவை. அத்துடன் 1972ல் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தில் சில திருத் தங்களைச் செய்வித்து அதனை வலுவுடையது ஆக்கினார்.

2017ம் ஆண்டு எம்.சி.அவர்கள் பிறந்த நூற்றாண் டாகும். அந்தப் பெரும் விடுதலை வீரரை கௌரவிக்கும் முகமாக உருவச்சிலை ஒன்றினை மகாசபையினர் நிறுவ முன்வந்தமை பாராட்டிற்குரிய விடயமாகும். அத்துடன் அ.இ.சி.த மகாசபையின் பவளவிழா ஆண்டும் இவ்வருடம் தான் என்பதை நினைக்கும் போது நாம் அனைவரும் பெருமிதம் அடைகின்றோம்.

# புரையேறிய புரியாத சமூகம்

கரைந்து செல்லும் காலத் திண்மத்தில்
கரையேறத் துடிக்கிறது மனம்
வாடிய பயிரதில் அறுவடை செய்கிறது
துருப்பிடித்த அரசியல் அரிவாள்கள்
கோடைவானத்தில் கார்முகில் தேடுகிறது
வறுமைக்கோட்டு வாசியின் வயிறு
சாயம் வெளுத்த புடவையில் வண்ணம் தேடுகிறது
கைம்பெண்ணின் ஒளியிழந்த கண்கள்
சாமியில்லா ஆலயத்தில் சூடம் காட்டுகிறது
ஆண்டு வரும் ஆடம்பர ஆன்மீகம்
போதையில் தினம் பாதையில் படிகிறது
இலக்கில்லா இளைஞனின் குருதி
பாதணிகளே பயணத்தில் பாரமென்றெண்ணி
முட்களையணிந்து நடக்கிறது எதிர்காலச் சந்ததி
முடிந்துபோன நூலிற்கு முகவுரை எழுதுகிறது
பிற்போக்குவாதக் கூட்டம்
தொலைக்காட்சிச் சிறையில் சிதறிக்கிடக்கிறது
உடனிருக்கும் உறவுகள்
விஞ்ஞான உலகத்தில் முட்டியுடைகிறது
மெய்ஞ்ஞான வாழ்வு
இத்தனையும் புரையேறித் துடிக்கிறது
புரியாத புதிரான நாம் வாழும் சமூகம்.



கந்தர்மடம் அ.அஜந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.அநாதரட்சகன்



# இன்னொரு கோணம்

மாசி மாதக் காலைப்பொழுது

பனி மூசிப்பெய்து கொண்டிருந்தது.

முற்றத்தில் நிரை கட்டி நிற்கும் விதவிதமான பூச்செடிகளில் படிந்து போயிருந்த பனித்துளிகள் இளவெயிலில் பளபளத்து மனதுக்கு இதமளித்தன. வழமைபோல ரீங்காரமிடும் பறவைகளின் சத்தத்தையும் மேவிக்கொண்டு பக்கத்து குளத்தடிப்பிள்ளையார் கோவில் ஒலிபெருக்கி பக்திப்பாடலை ஒலித்தபடியிருந்தது. அதில் நித்திய ஸ்ரீயின் திருப்பாவைப் பாடல் காற்றில் இழைந்து வந்து சூழலை ஆக்கிரமித்து நின்றது.

அந்த அமுதகானத்தில் லயித்துப்போய்க்கிடந்த திருப்பதி வாத்தியாருக்கு எட்டுமணிக்குக் கூட்டத்துக்குப் போக வேண்டுமென்பது நினைவுக்கு வர அவசரமாக படுக்கையிலிருந்து எழுந்தார்.

நேரம் ஏழுமணியைக் கடந்துவிட்டது.

காலைக்கடன்களை முடித்து குளித்துவிட்டு சாமிக்குப் பூவை வைக்க சிலிர்த்து நின்ற மல்லிகைச் செடியில் பூக்களைக் கொய்து கொண்டார்.

சாமியறையில் பூக்களை வைத்து, விளக்கையும் ஏற்றிவிட்டு ஹோலுக்குள் வந்தார். நெற்றி நிறைய அழுத்திப் பூசிய திருநீற்றுப் பூச்சு, அரையில் நாலுமுளவேட்டி, வேட்டியையும் மீறி வெளியே வழிந்து கொண்டிருந்த பெருத்த தொந்தி, கழுத்தில் கனத்த தங்கச்சங்கிலி எல்லாமே சேர்ந்து கனவானுக்குரிய தோற்றப்பொலிவை அவரில் காட்டியது.

சாமியறையைவிட்டு வெளியே வந்தவரை குசுனிக்குள் அலுவலாயிருந்த சகதர்மினி பவளம் ஏறிட்டுப் பார்த்தாள்.

நேற்று வரதனுடன் நெடுநேரமாக அரசியல் அளந்தது நினைவுக்கு வர,

“என்னப்பா..... இண்டைக்கு ஏதோ கூட்டமெண்டு கதைச்சியள் மறந்து போனியளே....?”

“சா...சா...நான் மறக்கேல்லை”

“சரி... முதலிலை இதைக்குடியுங்கோ...”

கையில் தேநீர் ஆவிபறக்க பக்கத்தில் வந்து நின்றாள் பவளம்.

வாத்தியார் நிதானித்து மணிக்கூட்டைப் பார்த்தார்.

ஒன்பது மணிக்குக்கூட்டம். தட்டிக்கழிக்க முடியாத தலைமைப்பொறுப்புவேறு, யாழ்ப்பாணம் கச்சேரியடியில் பாரதி வீதிக்குப்போகவேண்டும். இங்கிருந்து புறப் பட்டால் போய்ச்சேர ஒரு மணி நேரமெண்டாலும் எடுக்கும். வரதனின் ஓட்ட வேகத்துக்கு முக்கால் மணி நேரம் போதும்.

மனதில் எண்ணிக்கொண்டு, முதலில் சாப்பிட்டு விட்டு தயாராவதெனத் தீர்மானித்தார்.

சுடச்சுடச்சாப்பிடுவதில் அவருக்கு அலாதிப்பிரியம். இந்தக்குளிருக்கு ஒருபிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கலாமென சாப்பாட்டு மேசையில் போய் அமர்ந்தார்.

அவருக்கான பிரத்தியேகமான வெள்ளித்தட்டில் சுடச்சுடத்தோசைகளை வைத்து, ஓரமாகச் சம்பலைப் போட்டு, நடுவே கத்தரிக்காய் குழம்பையும் நீராளமயாக ஊற்றினாள் பவளம்.

சாப்பாடு கமகமத்து ஆவலைத்தூண்டியது. வயிறு முட்ட சாப்பிட்டுவிட்டு, வெளி விறாந்தையில் கிடந்த சாய்மனைக்கதிரையில் சாய்ந்து கொண்டார். உண்ட களையில் சற்று உறக்கத்துக்கும் போய்விட்டார்.

திருப்பதி வாத்தியார் அரசசேவையில் நாற்பது வருட அனுபவமுள்ளவர். வெளிமாவட்டத்தில் பல பாடசாலைகளில் கடமையாற்றிப்பட்டுப் பழுத்தவர். கடைசியாக, சொந்த ஊரில் ஆரம்பப்பாடசாலை யொன்றில், அதிபராக இருந்து ஓய்வு பெற்று மூன்று வருடங்களாகிவிட்டது. அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசியல்வாதிகளை கைக்குள் போட்டுத்தன் காரியங்களை சுளுவாகச் சாதிப்பதில் சமர்த்தர் எனப்பெயரெடுத்தவர். இப்போது தொழில் வீட்டுடன் சிறுகடை வைத்து வியா பாரம். துணைக்கு அப்பப்போ கலியாணத்தரகர் வேலை. பொழுதுபோக்குக்கு ஊரில் கோயில், சனசமூக நிலையத்தில் பொறுப்பான பதவிகள் வேறு, இதைவிட வெளிநாட்டி லிருந்து மகன் அனுப்புகிற பணத்தில் தென்னந்தோட்டங் கள், வயல் எனப்பல ஏக்கர் நிலபுலங்களுக்கு அதிபதியாகி விட்டவர். அவருடைய அரசியல் நாட்டம் என்பது தமிழ்த்தேசிய அரசியல் தான். பழைய தமிழ்க்கட்சி யொன்றின் தூண் எனக்கொண்டாடப்பட்டவர். பின்பு இயக்கங்கள் தலையெடுக்க பதறிக்கொண்டு மகனை வெளிநாடொன்றுக்கு அனுப்பிவிட்டு நிம்மதி கண்டவர்.

மாகாணசபைத்தேர்தல் வந்தபோது சமூகத்தைக் காட்டி அக்கட்சியில் நிற்கப்பெரும் பிரயத்தனங்கள் செய்து தோல்வியடைந்தவர். நீண்ட காலமாக தான் விசுவாசித்த கட்சி கைவிட்டதில் மனம் ஒடிந்துபோனவர். அது சமீபகாலம் வரை அவரை பாதித்துவிட்டிருக்கிறது. தான் நம்பியிருந்த கட்சிக்குப்பாடம் புகட்ட புதிதாக பஞ்சமர் விடுதலை இயக்கத்தை அமைத்து அதன் தலைவராகியும் விட்டார்.

வெளியே கேற்றடியில் ஹோான் சத்தம் விட்டு விட்டுக்கேட்டது.

அது வரதனின் மோட்டார் சைக்கிளின் ஹோான். சொல்லி வைத்தபடி அந்தநேரத்துக்கு வந்துவிட்டான்.

வரதனும் ஒரு காலத்தில் இடதுசாரிக்கட்சி ஒன்றுடன் நெருக்கமாக இருந்தவன். சமூக அக்கறையுடன் சமூகப்போராட்டங்களில் ஈடுபட்டவன். வித்தியாசமாகச் சிந்திக்கப்பழக்கப்பட்டவன். வாத்தியாருக்கு ஒரு வகையில் உறவுக்காரனும் கூட. வீட்டுடன் வெல்டிங்கடை வைத்திருக்கின்றான்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. அவனுக்கு விடுமுறை நாள்.

சற்று உறக்கத்தில் ஆழ்ந்து விட்டவரை பவளம் தட்டிவிட்டாள்.

திடுக்குற்றவர் எதிரே மணிக்கூட்டை நிமிர்ந்து பார்த்தார்.

கால்கள் விறைத்துப்போயிருந்தன. இப்படித்தான் ஒருமுறை திடீரென எழுந்திருக்கப்போய், நிலைதடுமாறி கீழே விழுந்து பிட்டத்தில் அடிபட்ட அனுபவம் விழித்துக்கொள்ள, கால்களை நீட்டி முடக்கிச் சோம்பலை முறித்துக்கொண்டார்.

ஒருவாறு தள்ளாட்டத்துடன் எழுந்து அறைக்குள் போனார்.

தூர இடங்களில் நடக்கும் நல்ல காரியங்களுக்குப் போவதென்றால் அதற்கென பிரத்தியேகமாக உடுத்திக் கொள்வார். போன தடவை மகன் வந்திருந்த போது, எடுத்துக்கொடுத்த வேட்டி சேட் அப்படியே பத்திரமாக மடிப்பில் கிடக்கின்றன. அலுமாரியைத் திறந்து மனதுக்குப் பிடித்துப்போன அதையெடுத்து உடுத்திக்கொண்டு ஆயத்தமானார்.

கம்பீரமான தோற்றப்பொலிவுடன் வெளியே வந்தவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அருகில் நின்ற பவளத்தை மிதப்புடன் ஒரு பார்வை பார்த்துவிட்டு;

"சரிதானை... நான் போட்டுவாறன். வரக் கொஞ்சம் சுணங்கும். நீ கடையைப் பார்த்துக்கொள்...."

"மத்தியானம் சாப்பாட்டுக்கு வந்திடுவியள் தானை..."

"இல்லை அதை நான் அங்கை பாத்துக் கொள்ளுறன். நீ சாப்பிடு"

ஆமோதிப்பது போல பவளம் தலையாட்டினாள்.

வெளியே காத்து நின்ற வரதனின் மோட்டார் சைக்கிளில் ஏறி அவனது தோளினை இறுகப்பற்றிக் கொண்டார்.

பயணத்தில் இடையிடையே வரதனுடன் கதைத்தபடி, கூட்டத்தில் தான் பேசவுள்ளதையும் மனதில் உருப்போட்டபடி வந்தார்.

***

இருவரும் யாழ்ப்பாணத்தை வந்தடைய நேரம் ஒன்பதைத்தாண்டி விட்டது.

எக்கவுண்டன் எட்வேட் வீட்டில் தான் கூட்டம் ஏற்பாடாயிருந்தது. எட்வேட் பஞ்சமர் சாதி ஒன்றிலிருந்து படித்து மேன்நிலைக்கு வந்தவர். பதவியிலும் எதிர்நீச்சல் போட்டு முன்னுக்கு வந்தவர். ஓய்வுபெறும் போது திணைக்களமொன்றில் பிரதம கணக்காளராக உயர்பதவி வகித்தார். சமூகத்தில் எல்லோராலும் மதிக்கப்படுபவர்.

அவரது வீட்டுக்கு வெளியே பலரக வாகனங்கள் மோட்டார்சைக்கிள், கார்கள், ஓட்டோக்கள் என நிறைந்து போயிருந்தன.

வரதன் மோட்டார் சைக்கிளை மதில் ஓரமாக நிறுத்திவிட்டு, திருப்பதி வாத்தியாரின் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளே போனான்.

பஞ்சமர் சமூகத்து பெரும்புள்ளிகளே அங்கு கூடியிருப்பது போன்ற தோரணையில் சூழல் களை கட்டிப் போயிருந்தது.

நாற்பது பேர் வரையில் ஹோலை நிறைத் திருந்தனர். அவர்களில் அநேகர் அரச சேவையை அலங்கரித்தவர்கள். இன்னும் சிலர் பணவசதி படைத்தவர்கள், சமூக அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் என கூட்டம் பொலிவு கண்டிருந்தது.

உள்ளே காலடி வைத்த வாத்தியாரை நோக்கி;

"என்ன தலைவர் சுணங்கிப்போனியள் உங்களைத்தான் பாத்துக்கொண்டிருக்கிறம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என கூட்டத்தின் முன்வரிசையிலிருந்து குரல் வந்தது.

வாத்தியார் குரல் வந்த திசையை நோக்கினார் அதிபர் கணபதிப்பிள்ளை அவரைப் பார்த்துச் சிரித்தார்.

பக்கத்திலிருந்த இராசையாவும் வாத்தியாரைப் பார்த்து தலையாட்டிவிட்டு அருகிலிருந்தவருடன் சீரியசாகப் பேசிக்கொண்டிருந்தார்.

போன தடவை அவரும் தமிழ்க்கட்சியொன்றில் பாராளுமன்றத்தேர்தலில் நிற்க முயன்று அது பயனளிக்காது மனம் நொந்து போயிருக்கிறவர்.

இம்முறை வரவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட முனைந்து நிற்பவர். பஞ்சமர் விடுதலை இயக்கத்தில் எப்படியாவது இடம்பிடித்துவிட வேண்டு மென்ற திடசங்கற்பம் அவரை இங்கே இழுத்துவந்துள்ளது.

கூட்டத்தில் நீண்ட நாட்களுக்குப்பின்னர் சந்தித்துக்கொண்டவர்கள் ஆளையாள் குசலம் விசாரித்து தங்கள் வல்லபங்களை பறைசாற்றிக் கொண்டனர்.

குடாநாட்டின் பல இடங்களிலிருந்தும் முக்கிய மானவர்கள் வந்து சேர நேரம் பத்துமணியாகிவிட்டிருந்தது.

நீண்ட தாமதத்தின் பின் அதிபர் கணபதிப்பிள்ளை யின் இறைவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்டத்தில் சபையோருக்கு முன்னே தலைவர் திருப்பதி வாத்தியார் அமர்ந்திருக்க இருபுறமும் நிர்வாக உத்தியோகத்தர் பத்மநாதன், வங்கி முகாமையாளர் சோதிலிங்கம், விரிவுரையாளர் பரமசிவம், எக்கவுண்டன் எட்வேட், பொறியியலாளர் இராசையா என முன்வரிசை யில் அமர்ந்திருந்தனர். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்று அரசியலிலும் சாதிக்கவேண்டுமென்ற ஆதங்கத்துடன் வந்தவர்கள் போல தம்மைக் காட்டிக்கொண்டிருந்தனர்.

பஞ்சமர் சமூகத்துக்கு வழிகாட்ட வந்த மேய்ப்பர் கள் போல, தமக்குள் பெருமிதம்கொண்டு வரவிருக்கும் தேர்தல்கள் பற்றிய கற்பனையில் தோய்ந்தபடி இருந்தனர்.

தலைவர் கூடியிருக்கும் நோக்கத்தை பேச்சில் வெளியிட்டார்.

"நாங்கள் இங்கு கூடியிருப்பது உங்களுக்குத் தெரியும். வருகிற தேர்தலை எங்கடை பஞ்சமர் விடுதலை இயக்கம் எதிர்கொள்ளவேணும். சனத்தொகையிலை நாற்பது வீதத்துக்கு மேலையிருக்கிறம். ஆனால், எங்கடை சார்பில் கதைக்கிறதுக்கு ஆளில்லை. எங்கடை மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம், உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. பாராளுமன்றத்தில் ஒருவர் கூட இல்லை. நாங்கள் ஐக்கியமாக இருக்க வேணும். பலமாக இருக்க வேணும். எங்களுக்கை பெரிசு சின்னன் பார்க்கக்கூடாது வேற்றுமைகளை மறக்கவேணும். ஒன்றுபடவேணும்.

தனது பேச்சில் பஞ்சமரின் ஒற்றுமையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். உச்ச உணர்ச்சிப்பெருக்குடன் அமைந்த அவரது பேச்சிற்கு சபையில் பலமான கைதட்டுக் கிடைத்தது.

முதலில் இராசையாவைப் பேச அழைத்தார்.

"நியாயப்படி தேர்தலில் எமக்கு நாலு சீற்றெண்டா லும் ஒதுக்கவேணும். போனதடவை கண்துடைப்புக்கு ஒருவரை நிறுத்திப்போட்டு, எங்கடை சனத்தின்ரை வாக்குகளை கொள்ளையடிச்சுக்கொண்டு போனாங்கள், தேர்தல் வரேக்கை மட்டும் எங்களட்டை ஓடி வருகினம். தமிழ்தேசியம், இன ஒற்றுமை, சர்வதேசம் அவதானிக்குது எண்டு பல பொய்களைப்பேசி கெட்டித்தனமாக உசுப் பேத்தி விடுறாங்கள். இன்னுமொரு தந்திரம் செய்யினம். எங்களுக்கை வெல்ல முடியாத ஒருவரைத்தானை போடுறாங்கள் இதுக்கெல்லாம் வாற தேர்தல்களிலை பாடம் படிப்பிக்கவேணும்.

போன தடவை தனக்கு இழைக்கப்பட்ட அநீதியினால் முழுச்சமூகமே நடுத்தெருவுக்கு வந்துவிட்டதென்ற சாரப்பட பேசினார். இதில் பல உண்மைகளும் வெளிப்பட்டது.

"இப்பவும் எங்கட பகுதிகளில் சாதிக்கெண்டு தனிப்பள்ளிக்கூடங்கள் இயங்குது. பல கோயில்கள் திறக்கப் படவில்லை. எங்கடை சனங்கள் வாழுற இடங் களிலை தான் சுடலையளை வச்சிருக்கினம். தகுதியிருந்தும் உயர் பதவியள் கிடைக்கவிடுறாங்களில்லை. தேசிய பாடசாலை களிலை அதிபர் பதவிக்கு எங்கடை ஆள் வரமுடியேல்லை. இதுகளையெல்லாம் யாரட்டைப்போய் முறையிடுகிறது. எங்களுக்கெண்டு எம்.பி.மார் இருந்தால் இதுகள் நடக்குமே"

எக்கவுண்டன் எட்வேட் தனது கருத்துக்களை ஆதாரங்களுடன் முன்வைத்து ஆக்கிரோசத்துடன் பேச்சை முடித்தார். கைதட்டல்கள் மண்டபத்தை அதிரவைத்தது.

ஏனையவர்களது பேச்சிலும் பஞ்சமர் சமூகம் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் வெளிப்பட்டது.

இவற்றையெல்லாம் அவதானித்தபடியிருந்த வரதனுக்கு,

கோழைகள் கூட்டமாகக் கூடிவிட்டால் பலமாகத்தான் பேசுவார்கள்" என்ற ரூமேனிய பழமொழி நினைவுக்கு வந்தது.

பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு தேர்தலில் நிற்பது தான் என்ற கருத்தில் அவனால் உடன்பட முடியவில்லை. அதிபர் கணபதிப்பிள்ளை, பேசியவர்களின் பேச்சின் சாரத்தினைக் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தார். அவை நாளை பத்திரிகைகளில் கட்டமிட்ட செய்தியாக வரவேண்டுமென்பதில் குறியாக இருந்தார்.

முடிவில், பஞ்சமர் விடுதலை இயக்கம் தனி அமைப்பாகப் போட்டியிடுவது, அடுத்த கூட்டத்தில் வேட்பாளர்கள் பட்டியல் தயாரிப்பது, தேர்தல் செலவு களுக்கு வெளிநாடுகளிலுள்ள உறவுகளிடம் நிதி கோருவது என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

காரசாரமான விவாதங்களின்றி கூட்டம் முடிய இரண்டு மணியாகி விட்டிருந்தது.

தலைவர் திருப்பதி வாத்தியார் எதிர்கால வேட்பாளர் கனவை மனதிற்கொண்டு, வந்திருந்தவர் களுக்கு கைகளைக்கூப்பி முகம் மலர்த்தி விடை பெற்றுக்கொண்டார்.

வெளியே வந்ததும், அவரைச்சூழ்ந்து கொண்டவர்களின் கரங்களைப் பற்றி பஞ்சமர் மக்களது ஒற்றுமையின் தேவை குறித்து நியாயங்களைப் புரிய வைத்தார்.

வரதனும் மோட்டார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு றோட்டில் ஏற, வாத்தியாரும் பின்னால் ஏறிக்கொண்டார்.

பாரதி வீதியில் ஏறி, இடதுபக்கம் திரும்பி கச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் வீதியால் வந்து கச்சேரி சந்தியில் மிதந்து ஏ.ஒன்பது வீதியில் பயணித்தனர்.

மோட்டார் சைக்கிள் செம்மணி வெளியைத் தாண்டி நாவற்குழி சந்தி வளைவில் திரும்பி, கைதடிச் சந்திக்கு வந்ததும் இடது கரையிலிருக்கும் "அம்பாள் கபே"யில் நின்றது.

தேவைகளுக்கென யாழ்ப்பாணத்திற்கு வந்து போகின்ற வேளைகளிலெல்லாம், அந்தக்கடையில் தரித்து நின்று பசியாறிச்செல்வது வாத்தியாரின் வழக்கம்.

அந்த வழித்தடத்தில் பயணிப்போரிடையே அந்தக்கடை ஏகப்பிரசித்தமானது. அந்தக்கடையின் வடைக்கும் சம்பலுக்கும் அப்படி ஒரு தனிச்சுவை; தனிரகமானது.

இருவரும் பசியாறிவிட்டு பார்சல் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.

பசிக்களை தீர்ந்த ஆசுவாசத்தில் வாத்தியார் திருவாய் மலர்ந்தார்.

"வரதன்.... எப்பிடியடா கூட்டம் என்ரை பேச்சு எப்படியிருந்தது"

"மாமா... கூட்டத்திலை பேசின உங்கடை பிரச்சினையள் எல்லாம் சரிதான். ஆனால் உங்கடை வழியிலை தான் எனக்கு உடன்பாடில்லை"

"அப்ப வேறை என்ன வழி இருக்குது சொல்லு..."

"இல்லை மாமா எலெக்சனிலை நிண்டு வெல்லேலுமே. வெண்டாலும் எங்கட பிரச்சினைகள் தீர்ந்து விடுமே...."

"என்ன அப்படிச்சொல்லுறாய்"

"இல்லை மாமா, முந்தியும் எங்களுக்கெண்டு எம்.பி. மார் இருந்தவை தானை. இப்பவும் மாகாண சபையிலையும் இரண்டுபேர் இருக்கினம் அவையாலை எங்கடை பிரச்சினையளைத் தீர்க்க முடிஞ்சதோ"

"அட அவங்கள் தங்கட கட்சிக்கு கட்டுப் பட்டவங்களடா அவங்கள் அதை மீறி நடக்கேலாது"

"அப்ப ஏன் எலெக்சன் எலெக்சனெண்டு திரியிறியள். எங்கட சனங்களைக் கூட்டி போராட வேண்டியது தானை"

வரதன் மனம் பொறுக்கமாட்டாமல் நிதானமாகக் கூறினான்.

"அட நீ இப்பவும் அந்தக் காலத்திலை நிக்கிறியடா. இப்ப போராட ஆர்வரப்போகினம். எங்கடை சனங்களும் படிச்சுக்கிடிச்சு இப்ப மேலை வந்திட்டுதுகள். சாதியைச் சொல்லவும் வெக்கப்படுகினம். எலெக்சனுக்கு வாக்குப் போட்டுப் பழகிவிட்டுதுகள். அதுதான் அதுகளின்ரை வழியிலை போகவேணும்"

"மாமா இப்பவும் எங்கடைசனம் புத்தூரிலை போராடுதுகள் கேள்விப்பட்டனீங்களோ"

"ஓமடா கூட்டத்திலையும் யாரோ சொன்னதா ஞாபகம்" மக்கள் குடியிருப்புக்கு மத்தியிலை இருக்கிற மயானங்களை அகற்றக்கோரி சத்தியாக்கிரகம் நடக்குதாம்"

"ஏன் மாமா அது நியாயமான போராட்டந்தானை இண்டைக்கு இருபத்தாறு நாளா நடக்குது. உங்கடை கூட்டத்திலை ஒருத்தர் கூட அதைப்பற்றி அக்கறையா கதைக்கேல்லையே வாங்கோவன் நாளைக்கு அதைப்போய் பார்ப்பம்"

"அது தம்பி ஒரு சமூகத்துக்கை நடக்கிற பிரச்சினையடா. அதுக்கை நாங்கள் போய் தலையிடக் கூடாதெண்டு தான்..."

"ஏன்...? அதுகளும் எங்கடை சமூகந்தானை இரு பகுதியோடையும் கலந்துபேசி தீர்த்து வைக்கிற பொறுப்பு எங்களுக்கு இருக்குது. அதிலை தலையிடத்தானை வேணும்"

"வரதன் இப்ப அதிலை போய் நிண்டால் இரண்டு பகுதியையும் பகைக்க வேண்டி வரும். பிரச்சினை நீதி மன்றத்துக்கும் போட்டுதாம். அங்கை நிறையச் சனமிருக்கடா. அதுகளின்ரை வாக்குகளை நாங்கள் இழக்கிறதோ..."

"அப்ப உங்கடை சிந்தனையெல்லாம் எலெக்சனைப் பற்றித்தான்..."

"ஓமடா வரதன்.... இதிலை நாங்கள் வெண்டு காட்ட வேணும்"

என தீர்க்கமாகக் கூறிவிட்டு இருக்கையில் தனதுடலை சம நிலைப்படுத்திக் கொண்டார்.

வரதனின் பட்டறிவுக்கு வாத்தியாரின் பேச்சி லிருந்த கபடமும், போலித்தனமும் புரியாததல்ல. மேலும் அவருடன் பேச்சை வளர்க்க மனம் ஒப்பாமல் மௌனம் காத்து வந்தான்.

வீடு திரும்பும் வழிநெடுகிலும் திருப்பதி வாத்தியாருக்கு தனது பேச்சும், அந்தக் கரகோசமும் தான் அவர் நினைவை ஆக்கிரமித்தபடி இருந்தது. தன்னை விட மெத்தப்படித்தவர்கள், பதவி பட்டங்களில் உயர்ந்தவர்கள் இருந்த கனமான சபை அது. அவர்கள் அநாவசியமாகத் தன்னைப் பாராட்டுவார்களா என அடிக்கடி எண்ணிக்கொண்டார்.

தனக்குக் கிடைத்த பெருமையின் மகிழ்ச்சியை பவளத்துக்குச் சொல்லிப் பகிர்ந்து கொள்ள மனம் துரு துருத்தபடி இருந்தது. முன்னரும் இப்படியான தருணங் களில் அவள் அகமகிழ்ந்து போனது நினைவுக்கு வர சினிமாப்பாடலொன்றை முணுமுணுத்தபடி வந்திறங்கினார்.

***

திருப்பதி வாத்தியார் வீடு வந்து சேர மதியம் கடந்து விட்டிருந்தது.

நீண்ட தூரப்பயணம் அவருக்கு சற்று அசதியைக்கொடுத்தது. வரதனின் கையைப் பிடித்தபடி நடந்து வந்து விறாந்தையில் கிடந்த கதிரையில் சாய்ந்து கொண்டார்.

காலையிலிருந்து தன்னுடன் நிழலாகத் தொடரும் வரதனை நன்றியுடன் பார்த்து தன்னருகில் அமரவைத்தார்.

அவர்களைக் கண்டதும் பவளம் வந்து கலாவதி நெடுநேரமாகக் காத்திருப்பதைக் கூறிவிட்டு குசுனிக்குள் அலுவலாச் சென்றாள்.

ஹோலுக்குள் எட்டிப்பார்த்தார். அவரது தங்கை ஏதோ சிந்தனையில் செற்றிக்குள் புதைந்து போயிருந்தாள்!

அவள் திருப்பதி வாத்தியாரின் கூடிப்பிறந்த ஒரே தங்கை. சங்கானையில் ஒரு ஆசிரியருக்கு வாழ்க்கைப்பட்டு குடியும் குடித்தனமுமாகி அங்கேயே நிரந்தரமாகி விட்டவள்.

கணவன் இறந்தபின், குடும்பத்தில் நல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டது எதுவென்றாலும் அண்ணனைக் கலந்து பேசி முடிவெடுப்பது தான் கலாவதியின் வழக்கம்.

"பிள்ளை... கலா, நீ எப்ப வந்தனி என்ன திடீரெண்டு பேசாமல் பறையாமல் வந்திருக்கிறாய். ஏதும் விசேசமே?"

"நான் அண்ணை மத்தியானமே வந்திட்டன். நீதான் இந்த வயதிலையும் எலெக்சன் கூட்டம் அது இதெண்டு திரியிறாயாம். எல்லாம் அண்ணி சொன்னவ..."

கலாவதி சலித்துக்கொண்டவளாகக் கூறினாள்.

"உனக்கும் போட்டுக்குடுத்திட்டாளே சரி.. அதுகிடக்கட்டும் நீ வந்த விசயத்தைச்சொல்லு"

அவசரங்காட்டினார் வாத்தியார்.

"இல்லை அண்ணை, அது வந்து..."

என தயங்கிய படி பக்கத்தில்இருக்கும் வரதனைப் பார்த்துவிட்டு தயக்கத்துடன் அவரைப் பார்த்தாள்.

"எடி... அவன் வரதன். கதிரவேலு குஞ்சியின்ரை பேரன். எங்கடை உறவுக்காறன் தான். இப்ப வயசான காலத்தில எங்களுக்கு உதவி ஒத்தசையா இருக்கிற பொடியன். எங்கடை குடும்பத்திலை ஒருத்தனாகி விட்டவன். நீ பயப்படாமல் சொல்லு"

"அது அண்ணை எங்கடை மூத்தவன் அகிலனுக்கு இந்தப் பகுதியிலை இருந்து சம்பந்தமொண்டு வந்திருக்கு. அவனுக்கும் வயது வந்திட்டுது. அந்தப்பிள்ளையும் அவனோடை மன்னாரிலை ஒண்டாப்படிப்பிக்குதாம்"

"அப்பிடியே சங்கதி. இதிலையிரு பாப்பம்.."

பக்கத்திலிருந்த கதிரையைக் காட்டி அமர வைத்தார்.

"வரணிப்பக்கமாம். பிள்ளைக்குத் தகப்பனும் இல்லையாம். குடும்பமும் கொஞ்சம் கஸ்டமாம் அதுதான் விசாரிப்பமெண்டு வந்தனான்"

"வரணியோ.... அதார் எனக்குத்தெரியாமல்... எங்கடையாக்கள் அங்கை..."

"அம்மன் கோயிலுக்கு வடக்காலை இருக்கிறவையாம் தகப்பன் செல்வராசாவாம்"

"அட செல்வராசா மெக்கானிக் அவன் வன்னியில போய் செத்தவனல்லே.. ஆ அந்தப்பகுதியே...."

"பிள்ளையும் நல்ல குணசாலியாம் கெட்டிக்காரியாம். அகிலனும் அதை விரும்புகிறான் போலை கிடக்கு"

"உன்ரை மேன் நல்ல இடத்திலை தான் பாத்திருக்கிறான். போயும்....போயும்.. அந்த........"

திருப்பதி வாத்தியாரின் பேச்சில் ஏளனம் இழையொடி அவளை அருவருப்புடன் பார்த்தார்.


"......................."

கலாவதியின் முகத்தில் இருள் படிந்தது. பேயறைந்தவள் போலானாள்.

"எங்களுக்கை எத்தினை பிள்ளையள் இருக்கு சீதனபாதனத்தோடை பட்டதாரிப்பிள்ளையள் நிறைய இருக்குதுகள். என்னட்டை அதுகளின்ரை குறிப்புக்கள் எல்லாம் கிடக்கு. ஓமெண்டால் சொல்லு"

"அதண்ணை.... அகிலனும் விரும்போனுமல்லை"

"அடி அவங்கள் வேறையாக்களடி.... அது எங்களுக்கு சரிப்பட்டு வராது. அவங்கள் "என்" பாட்டி யடி... அது தான் "நானா"ப்பகுதியடி...."



வாத்தியார் தரகர் வேலையால் வாலாயமாகிப்போன சாதிகளைச்சுட்டும் ஆங்கில எழுத்துக்களைக் கூறிவிட்டு தங்கையை ஊடுருவிப் பார்த்தார்.

"அண்ணை.... அவர் இருந்தால் உதொண்டு பார்க்கமாட்டார் உதுகளைப்பார்த்தால்..."

"எடி எங்கடை உறவுகளை எங்களுக்கை தான் வைக்கோணும். உன்ரை புரியன் அந்தக்காலத்திலை கட்சியிலை சேர்ந்து சாதி ஒழிப்பு அடிதடி எண்டு திரிஞ்சவனுக்கு இதெல்லாம் விளங்காது. அவன் உன்னையும் பிள்ளையையும் பழுதாக்கிப்போட்டு போய்ச்சேர்ந்திட்டான்"

"......................."

"நான் சொல்லுறன் உந்தச் சம்பந்தம் எங்களுக்கு ஒத்துவராது. இதை உன்ரை மேனுக்குப் போய்ச்சொல்லு பொம்பிள்ளை பாக்கிறாராம்.....பொம்பிள்ளை..."

திருப்பதி வாத்தியார் மீண்டும் சினந்து பேசிவிட்டு விறுக்கென எழுந்து சென்றார்.

"அது தானை, எங்கடை சாதிசனத்திட்டை முகங்குடுக்கேலுமே சபை சந்திக்கு நாங்கள் போறேல்லையே...."

கதவின் ஓரமாக நின்று இதையெல்லாம் அவதானித்த படி பவளம் வெடுக்கெனக் கூறிவிட்டு கணவனைப் பின்தொடர்ந்தாள்.

கலாவதியால் எதுவுமே பேசமுடியவில்லை. வாயடைத்துப்போயிருந்தாள். கூடவே கணவனின் நினைவு வர, நடந்தவைகளை ஜீரணிக்க முடியாதபடி வைராக்கியத்துடன் எழுந்து நின்றாள்.

காலையிலிருந்து திருப்பதி வாத்தியாரை நிழலாய்ப்பின்தொடர்ந்த வரதனுள் அவரின் இன்னொரு முகமும் அசிங்கமாக உருவெடுத்து நின்றது.

ஆனாலும் வாத்தியாரின் நடத்தை அவனுள் அதிர்வைக்கொடுக்கவில்லை. அவன் உதட்டில் மெல்லிய புன்னகை படர்ந்தது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலி



மேமன்கவி

# மூத்த இலக்கியவாதி ஏ.இக்பால் காலமானார்

ஏ. இக்பால்(11.02.1938). அம்பாறை, அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகவும் களுத்துறை, தர்காநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர். இவர் அக்கரைப்பற்று றோமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் கல்வி கற்றார். ஆசிரியராகக் கல்விச் சேவையை ஆரம்பித்த இவர், தமிழ்ப் பாடநூல் ஆலோசனை சபை உறுப்பினராகவும், இஸ்லாமியப் பாடநூல் எழுத்தாளராகவும், ஆசிரியக் கலாசாலையில் வருகைதரு விரிவுரையாளராகவும், கல்வியியற் கல்லூரியில் தமிழ் போதனாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவர் மட்டக்களப்புத் தெற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயலாளராகவும், முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும், தர்க்காநகர் பதிப்பு வட்டப் பதிப்பு உதவியாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

லப்கி, அபூஜாவித், கீர்த்தி, கலா போன்ற புனைபெயர்களைக் கொண்ட இவர், தனது பதினாறாவது வயதில் எழுத்துத்துறைக்குள் பிரவேசித்து 1959 இல் புதன் மலர் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றுள்ளார். இலங்கைத் தேசியப் பத்திரிகைகளிலும், முக்கியமான சஞ்சிகைகளிலும் மாத்திரமின்றி எக்ஸில், முஸ்லிம் முரசு, பிறை, நடை, தீபம் முதலிய பிற நாட்டுச் சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. இவர் முஸ்லிம் கலைச்சுடர் மணிகள், மௌலானா ரூமியின் சிந்தனைகள், மறுமலர்ச்சித் தந்தை, பண்புயர் மனிதன் பாக்கீர் மாக்கார், கல்வி ஊற்றுக் கண்களில் ஒன்று, நம்ப முடியாத உண்மைகள், பிரசுரம் பெறாத கவிதைகள், ஏ. இக்பால் கவிதைகள் நூறு, இலக்கிய ஊற்று (13 கட்டுரைகளின் ஊற்று), மாயத் தோற்றம், வித்து, மெய்ம்மை, புதுமை முதலான நூல்களையும் கல்வி, இலக்கியம், மொழி, வரலாறு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். 2002 இல் தமிழ் நாட்டில் இடம்பெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு நாட்டாரியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்துள்ளார். இலக்கியத் துறைக்கும் அப்பால் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை வானொலி தமிழ் - முஸ்லிம் சேவைகளில் பங்களிப்பு செய்து வந்துள்ளார்.

இவர் "மறுமலர்ச்சித் தந்தை" என்ற நூலுக்காகச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றுள்ளார். இலக்கிய உலகில் இவரது ஆளுமையையும், இவர் ஆற்றிய சேவையையும் பாராட்டிக் கவிஞர், இலக்கியமணி, கலாபூசணம், இலக்கிய வாரிதி, இலக்கிய விற்பன்னர், தமிழ் மாமணி முதலான பட்டங்களை அரசு, தகுதிசார் தனியார் நிறுவனங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன. ஏ.இக்பால் அவர்கள் 60களுக்கு பின்னான ஈழத்து இலக்கியப் பரப்பில் பல்வேறு வழிகளில் பங்காற்றிச் சென்றுள்ளார். முற்போக்கு இயக்கமும் முஸ்லிம்கள் என்ற போக்கில் கணிசமான பங்களிப்பினை இன்ஸான் போன்ற பத்திரிகைகளிலும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் இணைத்துச் செயற்பட்டதன் மூலம் பங்காற்றிச் சென்றுள்ளார். அன்றைய கால கட்டத்தில் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தில் புரையோடிப் போன அறியாமை சிந்தனைகளுக்கும் மேலாதிக்கக் கருத்துகளுக்கு எதிராகத் தன் ஆய்வுகள் வழியாகவும், சிந்தனைகள் வழியாகவும் முன் வைத்து வந்துள்ளார். அத்தோடு இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் கலை இலக்கியம் கல்வி துறைச்சார்ந்த பங்களிப்புகளை அடையாளப் படுத்தும் வகையில் ஆக்கங்கள் தந்து சென்றுள்ளார்.

குறிப்பாக ஈழத்துத் தமிழ் நாவல் துறையின் முன்னோடிகளில் ஒருவரும் கல்வித்துறை மறுமலர்ச்சியை ஏற்படுத்திய வருமான அறிஞர் சித்தி லெப்பை பற்றிய அவரது பதிவுகள் குறிப்பிடத்தக்கது.

மறையும் வரை சமகால நவீன தமிழ் கலை இலக்கிய இயக்கத்துடன் தொடர்புபடுத்தி கொண்டு அதன் போக்குகளை பற்றி தன் அவதானத்தை ஆய்வுகள் விமர்சனங்கள் வழியாக பதித்து வந்துள்ளார். அவர் பரந்த தீவிர வாசகராகவும் கலை இலக்கியம்,வரலாறு, கல்வித்துறை சார்ந்த பெரும் தகவல்களை தன் வசம் கொண்டவராக இருந்தார். ஒரு நூலகம் அமைக்கும் அளவான நூல்களை சேகரித்து தமக்கு வைத்து சென்றுள்ளார். அவரது மறைவு ஈழத்து தமிழ் இயக்கத்திற்குப் பெரும் இழப்புதான்.





**நூல்**
ஆதித்தாய்
(25 சிறுகதைகள்)
**ஆசிரியர் :** தேவகாந்தன்
**வெளியீடு :** ஜீவநதி
**விலை :** 500/-




**நூல்**
சதுரங்க வேட்டை
(3 நாடகங்கள்)
**ஆசிரியர் :** சிவ.ஏழுமலைப்பிள்ளை
**வெளியீடு :** ஜீவநதி
**விலை :** 300/-




**நூல்**
நீரின் நிறம்
(கவிதைகள்)
**ஆசிரியர் :** க.சட்டநாதன்
**வெளியீடு :** மறுபாதி
**விலை :** 250/-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைக்கை நிறுத்தி விட்டு பூட்டிக்கிடந்த அந்த ஆளில்லா வீட்டின் கேட்டைத் திறந்தான் அன்வர் ஜான்.

முதல்நாள் மாலையில் இருந்து எரிந்து கொண்டிருக்கும் விளக்குகளை அணைப்பதற்காக முன்புறக் கதவைத் திறந்து சுவரிலிருந்த ஸ்விட்ச் போர்டில் கைவைக்கப்போன அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

இந்த தடவையும் மாமாவின் அறை விளக்கின் ஸ்விட்ச் அணைக்கப்பட்டிருந்தது. நேற்று காலையிலும் இதே போல அது மட்டும் அணைக்கப்பட்டிருந்தது. அதற்கு முதல் நாளும் அவ்வாறு இருந்தது அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஒரு நிமிடம் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனால் ஏதோ தப்பு என்று புரிந்தது. மெல்லப் பின்னால் திரும்பிப் பார்த்தான்.

மாமாவின் நாற்காலி, அவர் கடைசியாய்ப் படுத்திருந்த கட்டில், படுக்கை விரிப்புகள், தலையணைகள், தலைமாட்டில் எப்போதும் வைத்திருக்கும் டோர்ச் லைட் முதல் எல்லாமே சரியாகத்தான் இருந்தது. முதன் முதலாக இலேசான பயம் நெஞ்சைக் கவ்வியது.

இது எப்படிச் சாத்தியம்?

“ஏறத்தாழ ஒரு வாரமாகப் பூட்டிக்கிடக்கும் வீட்டிற்குள் என்னைத் தவிர வேறு யார் வந்திருப்பார்கள்?” வீட்டைச்சுற்றிலும் பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தன. க்ரில் வைத்த யன்னல்கள் கதவுகளெல்லாம் யாரும் உள்ளே வரமுடியாதபடி நன்றாகத்தான் பூட்டப்பட்டிருந்தன.

“ஒருவேளை நான்தான் நேற்று மாலையில் மாமாவின் அறை விளக்கை மட்டும் தவறுதலாக அணைத்துவிட்டுச் சென்றிருப்பேனோ.. அப்படியே இருந்தாலும் இதற்கு முன்னரும் இரண்டு தடவை எப்படி அந்த ஸ்விட்ச் மட்டும் அணைந்திருந்தது..?”

தீராக்குழப்பத்தோடு வீட்டை மீண்டும் பூட்டிவிட்டு பைக்கை கிளப்பி அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தான். மற்றவர்கள் இன்னும் வந்திராத காரணத்தால் அலுவலகம் வெறிச்சோடிக் கிடந்தது. ஒரு வாரம் கழிந்து வந்ததால் வேலை எதுவும் ஓடவில்லை. கம்யூட்டரை ஒன் செய்துவிட்டு அது இயங்கும் வரையில் தலையைக் கைகளால் தாங்கிக் கண்களை மூடிக்கொண்டிருந்தான்.

எத்தனை முயன்றும் அவனால் மாமாவின் நினைவுகளிலிருந்து மீள முடியவில்லை. தோற்றத்திலும் நடத்தையிலும் ஒரு சிங்கத்தைப்போல கம்பீரமாக வாழ்ந்தவர். கடைசி வரையிலும் தன்னுடைய வேலையைத் தானே செய்து முடிக்க வேண்டும் என்பதில் தீரா வேட்கையுடனிருந்தவர். இன்னொருவரின் உதவி ஒத்தாசையில் தங்கியிருக்க விரும்பாத பாசாங்குகளில் நம்பிக்கையற்ற நேர்மையான மனிதர். சுற்றி வளைக்காமல் எதையும் நேர்படப்பேசுபவர். அதையே மற்றவர்களிடமும் அவர் எதிர்பார்த்த காரணத்தால் அவரது சொந்த பந்தங்கள் பொதுவாக அவரை நெருங்குவதில்லை. அவரும் அவர்களுடைய தொந்தரவை விரும்புவதில்லை.

மனைவி இறந்து பிள்ளைகள் வெளிநாட்டில் குடியேறிய பின்பும் இந்த வீட்டில் கடைசி வரையிலும் தனியாகத்தான் வாழ்ந்திருந்தார். கடைசி காலத்தில் மாமாவுக்கு எல்லாமே அன்வர் ஜான்தான். அலுவலகத்துக்கு புறப்படும் வழியில் வந்து பார்த்துவிட்டுச் செல்வது மதிய இடைவேளையில் அவருக்குத்தேவையான பொருட்களை டவுனிலிருந்து வாங்கிக்கொடுப்பது வேலைமுடிந்து வந்து அவருடன் இருந்து பேசிக்கொண்டிருப்பது அல்லது டீவியில் டிஸ்கவரி சேனல், கிரிக்கட் மெட்ச் பார்ப்பது என்று கடந்த மூன்று மாதங்கள் ஏறக்குறைய அவருடன்தான் அவனுடைய நாளின் பெரும்பகுதி கழிந்தது. அதிலும் இறுதி இருவாரங்கள் அவருக்கு மிகவும் இயலாதிருந்த காரணத்தால் அலுவலகத்திற்கு லீவு போட்டு விட்டு முழுநாளும் அவருடனேயே தங்கியிருந்தான். அப்பொழுதும் கூட அவர் தன்னை விட்டுக் கொடுத்ததில்லை.

# அன்பே வா அருகிலே!

மூதூர் மொகமட் ராபி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் பிடிச்சுக் கொள்ளவா மாமா..?"

"தேவையில்ல.. நான் போவன்!"

"தனியா அள்ளிக் குளிப்பீங்களா... நான் வேணுமென்டா உள்ள வந்து அள்ளி ஊத்தட்டா?"

"இல்ல.. தேவையென்டா உன்னக் கூப்பிடுவன்!"

இதுதான் மாமா!

ஒருகாலத்தில் தான் பணிபுரிந்த நிறுவனத்தை நிர்வாகத் திறமையாலும் நேர்மைத்திறனாலும் கலக்கியவரா கதிரையில் இருந்து எழுந்து கொள்வதற்கும் கட்டிலைச் சென்றடைவதற்கும் அப்படிச் சிரமப்பட்டார் என்று நினைக்கவே அவனுக்கு கஷ்டமாக இருந்தது.

பகல் வேளையில் மின் விளக்குகளை எரியவிடுவது மாமாவுக்கு அறவே பிடிப்பதில்லை. அதிலும் அவர் எப்போதும் படுத்திருக்கும் இந்த அறையின் விளக்குகளை எரிய விடவே மாட்டார். யாராவது தவறுதலாக ஸ்விட்ச்சைப் போட்டு விட்டால் கூப்பிட்டு அணைக்கச் சொல்வார் அப்படி யாரும் இல்லையென்றால்கூட அவரே மெல்ல எழுந்து வந்து அதை அணைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். அப்படியானால் ஒருவேளை..?

"ஹேய், யூ..? யூவ் கம் பேக்..!"

உற்சாகமாகக் கூவி அன்வரின் சிந்தனையைக் கலைத்தவன் தினேஷ். பக்கத்து சீட் இளைஞன். "ஆ யூ ஓல் ரைட் மேன்?" என்றபடி என் கேசத்தைக் கலைத்துவிட்டு ஹெல்மெட்டை வைப்பதற்கு இடம் தேடினான்.

அதற்குள் மற்றவர்களும் வந்து சேர்ந்து, "ஓ ஐம் ஸொரி ஜான்.. யூ ஓல் ரைட்? இட்ஸ் ஓகேயா.. ஈஸி..ஈஸி பீ ச்சியர்புல்" என்று என்னைத் தேற்றும் நோக்கில் முதுகிலும் தோளிலும் தட்டிக்கொடுத்தபடி அவனைக் கடந்து பரபரப்பாக தங்கள் இருக்கையிலமர்ந்து கம்ப்யூட்டர்களில் ஆழ்ந்தார்கள்.

மதிய உணவு இடைவேளைக்கு சற்று முன்னர் செல் போன் சிணுங்கியது. "Madam" என்று ஒளிர்ந்தது திரை.

"ஜான், ப்ளீஸ் கம் டு மை கேபின்"

"ஓகே மேடம்"

கம்ப்யூட்டரை தூக்கத்திலாழ்த்திவிட்டு எழுந்தான். கதவைத் திறந்து கொண்டு அவன் நுழைந்ததும் புரட்டிக் கொண்டிருந்த பைல்களை மூடிவிட்டு, "கம்.. கம் இன். பீ ஸீட்டட்" என்று புன்னகைத்தார் மிஸஸ் அருணா சிவச்சந்திரன், திணைக்களத்தின் பணிப்பாளர்.

அன்வர் அமர்ந்ததும் கைகளிரண்டையும் தன் தாடைக்குக் கொடுத்து சில வினாடிகள் மௌனமாக எங்கோ பார்த்தவாறிருந்தார். பின்பு ஏஸியின் சன்னமான ரீங்காரத்தைக் கலைத்து, "எல்லாம் கேள்விப்பட்டேன் ஜான், ஐம் ஸோ ஸொறி.. என்னால அங்கிளோட ப்யுன்ரலுக்கு வரேலாம போயிட்டுது. யூ நோ, ஐ வாஸ் இன் கலம்போ அட் த டைம்."

"இட்ஸ் ஓகே மேடம். ஸ்டாஃப் எல்லாரும் வந்திருந்தாங்க.. தேங்ஸ்"

"இப்ப எப்படியிருக்கு உங்க கண்டிஷன்? ஆ யூ ஓல்ரைட் தேவையென்டா இன்னும் ஒரு வீக் லீவ் எடுத்துக் கொள்ளுங்க. உங்க ப்ரொஜெக்ட் எல்லாம் தினேஷ்க்கிட்ட கொடுத்திருக்கிறன்.."

"இல்ல மேடம் வீட்டில இருந்தா கஷ்டமாயிருக்கு.. தவிர.."

"சொல்லுங்க.."

"மாமா எவ்வளவு பெரிய கஷ்டம் வந்தாலும் தளராம நிதானமா நிமிர்ந்து நிப்பாங்க. அவர் மருமகனா நானும் இருக்கணும்"

"தட்ஸ் இட்! அதுதான் வேணும். நீங்க போய் வேலையைப் பாருங்க. மீட் தினேஷ் என்ட் வேர்க் டுகெதர்"

அலுவலக நேரம் முடிவடைந்ததும் எல்லோரும் போய்விட்டிருந்தார்கள். கம்ப்யூட்டரை ஓஃப் செய்துவிட்டு எழுந்திராமல் ஆசனத்திலேயே அமர்ந்திருந்தான் அன்வர் ஜான். வழமை போல போகும் வழியில் இறங்கி மாமா கடைசியாய்த் தங்கியிருந்த ஆளில்லா வீட்டிற்குச் சென்று விளக்குகளைப்போடுவதற்கு நினைத்தான். ஆனாலும் காலையில் அவதானித்த ஸ்விட்ச் விடயம் இலேசான கிலியைத் தரவே சற்றுத் தயங்கினான். நேரே ஊருக்கே போய்விடலாமா என்று கூட யோசித்தான்.

இல்லை.. மாமா வாழ்ந்த அந்த வீடு இருட்டில் கிடக்கக் கூடாது!

"என்ன ஜான் இன்னும் போகேல்லயா..? ஆ யு ஓல்ரைட்?" என்று கேட்டபடி அறையைப்பூட்டிவிட்டு வெளியே போகத்தயாராக வந்தார் மிஸஸ் அருணா.

"இல்ல.. யெஸ் மேடம்.. போகத்தான்.." என்று உளறிக்கொட்டியபடி எழுந்து நின்றான்.

"நோ! நீங்க இன்னும் சரியாகல்ல. அப்பிடித்தானே ஜான்? வாங்க எங்கேயாவது வெளியில போய் இருந்து பேச லாம்.." என்றவாறு க்ரவுண்ட் ப்ளோருக்கு லிப்ட் பட்டனை அழுத்தினார். வேறுவழியின்றி பின் தொடர்ந்தான்.

ரெஸ்டோரண்டில் யுனிபோம் அணிந்திருந்த வெயிட்டர் இரண்டு கப் டீயை அவர்களின் மேசையில் வைத்துவிட்டுப் புன்னகைத்து விலகினான்.

"ஐம் நொட் ஒன்லி யுர் பொஸ். ஐம் யுர் வெல் விஷர் டூ. ஓகே? சொல்லுங்க ஜான் ஹவ் கேன் ஐ ஹெல்ப் யூ?"

"...."

"ஓல் ரைட் யு ஆ ஸ்டில் மிஸ்ஸிங் யுர் அங்க்கிள். அதுதானே ஜான் உங்க பிரச்சினை? ஆனா எத்தனை காலத்துக்குத்தான் அவரையே நினைச்சிட்டிருக்கலாம்..?"

"அதில்ல மெடம் இப்ப பிரச்சினை!" என்றான்.

"தென் வாட் எல்ஸ்?"

ஒரு நிமிடம் யோசித்து, பூட்டியிருக்கும் வீட்டில் இரண்டு மூன்று நாட்களாக நடந்து வருவதை ஒன்றும் விடாமல் கூறினான் அன்வர். அவன் சொல்வதையெல்லாம் ஆச்சரியத்துடன் ஆவலாகக் கேட்டுக்கொண்டிருந்தார் மிஸஸ் அருணா, அவருடைய முகத்தில் இலேசான புன்முறுவல் தோன்றியது.

"ஏன் மேடம், இந்த ஆன்மா அது இதெல்லாம் பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"டோண்ட் பீ ஸில்லி. அதெல்லாம் ச்சும்மா! அப்பிடி ஏதுமிருக்க வாய்ப்பே இல்ல ஜான். கடவுள் என்றது கூட வெறும் நம்பிக்கைதான். ஒவ்வாருத்தருக்கு ஒவ்வொண்ணு. சிக்மண்ட் ப்ரெய்ட் சொல்றது போல எல்லாம் நம்ம எண்ணங்களும் பிரமைகளுந்தான்." என்றார் சிரித்தபடியே.

"என்ன மேடம், நீங்களே இப்பிடிச் சொல்றீங்க..?" என்றான் அவருடைய நெற்றிக் குங்குமம் விபூதியைப் பார்த்தவாறு.

"ஏன் உங்களுக்கு நம்பிக்கை இருக்கா?"

"ஒருநாள் நடந்தா பரவாயில்ல மேடம். தொடர்ந்து மூன்று நாள் அதுவும் மாமா எந்த நாளும் ஓஃப் பண்ணச் சொல்லும் அந்த ஸ்விட்ச் மட்டும் எப்பிடி தானாக ஓஃப் ஆகுது?"

"ஜான்.. நீங்க தனியாவா அந்த வீட்டுக்குப்போய் லைட்களை போடுறீங்க?"

"ஓம் மேடம். வீட்டாக்கள் எல்லாரும் இன்னும் ஊர்லதான் இருக்கிறாங்க. இப்போதைக்கு வர மாட்டாங்க!"

"நான் கேட்டது அதில்ல. நீங்க இனி அங்க தனி யாகப் போகாதீங்க. யாரையாவது ஒருத்தரை துணைக்கு கூட்டிட்டுப்போய் அந்த ஸ்விட்ச்சுகளைப்போடுங்க ஓஃப் பண்ணுங்க.."

"எதுக்கு மேடம், நீங்கதான் எதுவுமே இல்லன்றீங்களே..?"

"நோ! தட்ஸ் நொட் மை பொயிண்ட் ஜான். நீங்க அந்த ஸ்விட்சைப் போடுவீங்கதானே.. அதை உங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைக்கு வாறவரும் பார்க்கிற மாதிரி போடுங்க. மறுநாள் காலையிலயும் அவசியம் அவரோடதான் அங்க போங்க. அவரோட முன்னிலையிலயே ஸ்விட்ச்சை செக் பண்ணுங்க.."

"ஏன் மேடம்? என் மேல நம்பிக்கையில்லயா..? நான் என்ன பொய்யா சொல்றேன்?"

"இல்ல.. அதில்ல விஷயம். முதல்ல நான் சொல்றபடி நீங்க இதைச் செய்ங்க. அதுக்குப்பிறகு என்னவாகுது என்று பார்ப்போமே" என்றார் தீர்க்கமாக.

"ஆனா, இந்த விஷயம் வேறு யாருக்கும் தெரிய வேணாமே மேடம்?"

"ஓஹோ அப்பிடி ஒண்ணுருக்கா? நோ ப்ரொப்ளம், நானே வாறேன். கமான் லெட்ஸ் கோ!" என்று எழுந்து காரை நோக்கி நடந்தார் மிஸஸ் அருணா.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் இருவரும் அங்கு போய் இறங்கினார்கள்.

பூட்டியிருந்த கேற்றைத் திறந்து உள்ளே நுழைந்த போது மாலை ஐந்தரை மணியைத் தாண்டியிருந்தது. வீட்டை நன்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டு, "நீங்க நாய் ஏதும் வளர்க்கிறதில்லயா.. ஜான்?" என்று கேட்டார் அருணா.

"இருந்திச்சு.. பாவம், இப்ப ஒரு மாதத்திற்கு முன்னால தான் லொறியில அடிபட்டுச் செத்துப்போனது.. ஏன் மேடம்?"

"இல்ல.. இப்பிடி பக்கத்துல யாருமே இல்லாத தனி வீட்ல இருக்கிறதால கேட்டேன்"

கதவைத் திறந்து சுவரில் இருந்த சுவிட்சில் கை வைக்கப்போன என்னைச் சட்டெனத் தடுத்தார். "வேணாம், முதல்ல ஸ்விட்ச்சுகளைக் கொஞ்சம் செக் பண்ணுவோம்" என்று ஒரு தேர்ந்த துப்பறிவாளரைப்போல வீட்டைப் பார்வையாலேயே அலசிய பின்பு சகல விளக்குகளையும் பல முறை எரிய விட்டு அணைத்து சரிபார்த்தார் மிஸஸ் அருணா.

"ஸ்விட்சஸ் ஓகே.. நோ சான்ஸ் போர் செல்ஃப் ரிலீஸிங். லெட்ஸ் ஸ்விட்ச் ஒன் த லைட்ஸ் ரைட் நவ்" என்றபடி அவரே மாமாவின் அறையின் மின்குமிழையும் மற்ற விளக்குகளையும் எரிய வைத்தார்.

சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தபின்பு அங்கிருந்து வீட்டை நன்றாகப் பூட்டிவிட்டு காரிலேறி மீண்டும் அலுவலகத்திற்கே வந்து சேர்ந்தார்கள்.

அன்வர் ஜான் பைக்கை ஸ்டார்ட் செய்தான்.

"ஜான், காலைல அங்க போகாம நேரே ஒஃபிசுக்கே வாங்க. ரெண்டு பேருமா போய் வீட்டைத்திறக்கலாம் ஓகே?"

"ஓகே ஷ்வர் மேடம்!" என்று புறப்படப்போன அவனை காரிலிருந்தபடியே, "ஜான் ஒரு நிமிஷம்" என்று அழைத்தார்.

"யெஸ் மேடம்"

"நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களா ஜான்?"

"கேளுங்க மேடம்" என்றான் புரியாமல்.

"சரி, ஒப்பனாகவே கேக்கிறேன்.. ஒருவேளை நீங்கதான் உங்களையறியாம அந்த ஸ்விட்ச்சை ஓஃப் பண்றீங்களா ஜான்?"

"ஓ மை காட். என்ன மேடம், இப்பிடியொரு சந்தேகம் உங்களுக்கு?" என்றான் பதறியடித்து.

"இல்ல, இப்பிடியான கேஸ்கள்ல சிலபேர் தங்களுக்கு விருப்பமானவங்கள்ற ஆசையை அவங்கள அறியாமலே நிறைவேத்துறமாதிரி நடந்து கொள்வாங்களாம். இதைப் பற்றி நான் நிறைய படிச்சிருக்கிறேன். ஹேவ் யூ ரீட் டொக்டர் ஏப்ர ஹாம்கோவூர், த ஃபேமஸ் டிடெக்டிவ் எண்ட் சைக்கோலொஜிஸ்ட்?"

"நோ மேடம்"

"ஐம் எ பிக் ஃபேன் ஒவ் ஹிம். பரவாயில்ல.. எதுக்கும் அந்த வீட்டுத் திறப்புகளை இன்டைக்கு நீங்க கொண்டு போக வேணாம் ஜான். இட்ஸ் ஒன்லி ஜஸ்ட் மை ரிக்வெஸ்ட். ஒஃபிஸ்ல வச்சுட்டுப் போங்க. சரிதானே?"

"நீங்க ஆரம்பத்திலருந்தே என்னைச் சந்தேகப்படு றீங்க மேடம். ஓகே திறப்புகளை நீங்களே வச்சிருங்க. இந்தாங்க!" என்று நீட்டினான் ஜான், சிறிது கோபத்துடன்.

"வெல், கீ எனக்கிட்டயே இருக்கட்டும். மோர்னிங் நீங்க வந்து சேர்ந்ததும் ரெண்டுபேரும் அங்க போய்ப் பார்க்கலாம் குட்நைட் ஜான்!" என்றபடி காரைக்கிளப்பிக் கொண்டு சென்றார் மிஸஸ் அருணா.

மறுநாள் பொழுது விடிந்தது.

ஊரிலிருந்து அலுவலகத்துக்கு பைக்கில் புறப் பட்டான் அன்வர். வழக்கத்தை விட ஒருமணி நேரம் தாமத மாகி விட்டிருந்ததால் மெயின் ரோட்டை விலக்கி அலுவலகத் துக்கு போகும் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்தான். அந்த வழியில்தான் மாமா இருந்த வீடும் இருந்தது. அதைத் தாண்டிச் செல்லும்போது பைக்கின் வேகத்தைக் குறைத்து நோட்டமிட்டதில் விடிந்த பின்பும் வெளிப்புற விளக்கு கள் எரிந்து கொண்டிருப்பது தேக்கு மரங்களினூடாகத் தெரிந்தது. மிஸஸ் அருணா கேட்டுக்கொண்டது போல இருவருமாக வந்து அணைப்பதுதான் சரியானது என்று நினைத்துக்கொண்டு அலுவலகத்தை வந்தடைந்தான்.

*நேரம் 09:26*

மிஸஸ் அருணாவின் அறையின் கேர்ட்டுன்கள் விலக்கப்படாமலிருந்ததில் இன்னும் அவர் வந்திருக்க வில்லை என்று தெரிந்தது. தினேஷ் அன்வருக்காகக் காத் திருந்தான். அவனுடன் சேர்ந்து புரொஜக்ட் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டதில் நேரம் போனதே தெரியவில்லை.

டீ தருவதற்காக ஒஃபிஸ் பையன் வந்தபோதுதான் நேரத்தைப் பார்த்தான் ஜான். 10:15 என்றது அவனுடைய டிஜிட்டல் வாட்ச்.

"தினேஷ், இன்னுமா மேடம் வரல்ல?" என்று கேட்டான்.

"அவங்க இன்டைக்கு எட்டரைக்கே வந்திட்டாங் களே. நீ வாறதுக்கு பத்து நிமிஷத்துக்கு முதல்தான் காரை எடுத்திட்டு எங்கேயோ அவசரமா போனாங்க." என்றான்.

ஷோல்டர் பேக்கிலிருந்து போனை விடுவித்தான் அன்வர். மிஸஸ் அருணாவிடமிருந்து 6 மிஸ்ட் கோல்கள் கிடந்தன. இரவு போனை ஸைலண்ட் மோடில் போட்டிருந்தது சட்டென ஞாபகம் வந்தது.

உடனடியாக மிஸஸ் அருணாவுக்கு கோல் எடுத்தான். பதிலில்லை. விடாமல் எடுத்துக்கொண்டே யிருந்தான். தொடர்ந்து ரிங் போய்க்கொண்டேயிருந்ததே தவிர அவர் எடுக்கவேயில்லை. எங்கோ தப்பு என்று புரிய சட்டென எழுந்து கொண்டான். "யேய், ஜான்.. எங்கடா இதை முடிச்சுத் தராமப் போற.. என்ன விஷயம்" என்று பதறிய தினேஷை விலக்கி லிப்டைப்புறக் கணித்து படிகளில் தாவி இறங்கி பேஸ்மென்டுக்கு வந்தான். ஒரே தாவில் பைக்கை எடுத்துக்கொண்டு அந்த வீட்டை நோக்கிப் பறந்தான்.

வீதியோரத்தில் மிஸஸ் அருணாவின் கார் அநாதையாக நின்றிருந்தது.

வீட்டைச்சுற்றிலும் வெளிப்புற விளக்குகள் இன்னும் எரிந்து கொண்டிருந்தன. பைக்கை நிறுத்தி திறந்துகிடந்த கேட்டை ஓட்டமும் நடையுமாகத் தாண்டினான். முன்புறக் கதவு மெலிதாகத் திறந்திருந்தது. சட்டென நிதானித்து மெல்ல கதவை நெருங்கினான். சாவித்துவாரத்தில் திறப்பு அப்படியே இருந்தது. கதவை ஷூ காலால் மெதுவாக விலக்கி உள்ளே எட்டிப் பார்த்...

அங்கு கடைவாயில் மெல்லிய இரத்தக்கோடு வழிந்திருக்க கண்கள் நிலைக்குத்தியபடி மிஸஸ் அருணா தரையில் வீழ்ந்து அசைவின்றிக்கிடக்க மாமாவின் அறை விளக்கின் ஸ்விட்ச் மட்டும் அணைக்கப்பட்டிருந்தது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் வெல்லுவோம்

நாங்கள் வெல்லுவோம்,
நாங்கள் வெல்லுவோம்,
நாங்கள் வெல்லுவோம், ஒரு நாள்.

ஆ, மனதின் ஆழத்தில்,
நம்புகின்றேன் நான்
நாங்கள் வெல்லுவோம், ஒரு நாள்.

கைகோத்துச் செல்வோம்
கைகோத்துச் செல்வோம்
கைகோத்துச் செல்வோம், ஒரு நாள்.


ஆ, மனதின் ஆழத்தில்,
நம்புகின்றேன் நான்
நாங்கள் வெல்லுவோம், ஒரு நாள்.

அமைதியில் வாழ்வோம்,
அமைதியில் வாழ்வோம்,
அமைதியில் வாழ்வோம், ஒரு நாள்.

ஆ, மனதின் ஆழத்தில்,
நம்புகின்றேன் நான்
நாங்கள் வெல்லுவோம், ஒரு நாள்.

நாங்கள் அஞ்சற்கோம்
நாங்கள் அஞ்சற்கோம்
நாங்கள் அஞ்சற்கோம், இந் நாள்

ஆ, மனதின் ஆழத்தில்...



பீற் சீகர் (Pete Seegar, 3.5.1919 - 27.1.2014)
மாட்டின் லஹூதர் கிங் தலைமையில் 1960களில் அமெரிக்க நிறத் தீண்டாமைக்கெதிராக நடந்த குடியுரிமை இயக்கப் பேரணிகளிற் தவறாமற் பாடப்பெற்ற புகழ்மிக்க பாடல்.
பீற் சீகர் அமரிக்காவின் அதி முக்கிய போரெதிர்ப்பு இயக்கப் பாடலாசிரியரும் பிரபல பாடகருமாவார்.)
தமிழில் - சி.சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலை சிப்

- தனி ஒருவன்-

சத்தி வரும்
சித்தியடைந்த கதையைக் கேட்டால்...
புலமைப்பரிசில் பரீட்சை
மனனம் செய்தே
மண்டைக்குள் ஏறு(ற்)ம்
ஆறு இஞ்சி ஆணி

பரீட்சை, பயங்கரவாதம்!
பயிற்சிப் புத்தகங்கள்
புதினா போட்ட சூடான கஞ்சியாய்
சுடச்சுட தொண்டைக்குள்
இறக்கப்படுகின்றன.

இதுவும் ஒரு கற் "பீத்தலா"?
கற்றலினால்தான் மூப்படைய வேண்டும்

ஆனால்,
இங்கே புத்தகப் பாரத்தினால்
மாணவிகள் பூப்படைந்து போக
சிறு மாணவன்களும்
பருவமடைகின்றனர்.

இது, ஆரம்பக் கல்வி மீது
வருடத்துக்கொருமுறை
தவறாமல் அரசு போடும்
அணுகுண்டுத் தாக்குதல்.

தினந்தினம் திறந்த வெளிகளிலும்
பதுங்கு குழிகளிலும்

படைப் பயிற்சிகளும்
பகிரங்கமாகவும்
குடும்பத்துடனும்
நடந்தேறுகின்றன.

பயிற்சி இருந்தும்
படைபலம் இருந்தும்,
என்ன பிரியோசனம்?

இங்கே மாணவர்கள்
அகதிகளாக்கப்படுகின்றனர்.

நிவாரணம் இல்லை
நிம்மதி இல்லை
உறங்க முடியாமலும்
ஓராண்டு உண்ண முடியாமலும்
ஒடுங்கிக் கிடக்கின்றனர்.

இந்த வகுப்பறை கல்விக்கு
அரசு வைத்த பெயர்
"பிள்ளை நேயப்(நோய்ப்) பாடசாலை"

அசுரர் நாம் வைப்போம் பெயர்
ஊசியை திணித்து ஏற்றும்
"நவீன கோழிப்பண்ணைகள்".

"கழுதாவளைக் கத்தரிக்காய்"
சிறு மரத்தில் பெரிய காய்வரும்
"நவீன விவசாயம்"
உடன் தயாராகும் "உதவாத பாஸ்பூட்"
"பிளாஸ்ரிக் – முட்டை, அரிசி"

மருந்தடித்து பழுக்கவைக்கும்
மஞ்சல் பழங்களைப் போல்
இந்தப் பிஞ்சுகளுக்கும்
கல்வி ரசாயனங்கள்
தெளிக்கப்படுகின்றன
அழுகாமலிருந்து அப்படியே
நீண்ட ஆயுள் இல்லாமல்
நிம்மதி இழந்து சுருங்கிக்கிடக்கிறது.
புத்திக்காகத்தான் சித்தி

இங்கு
சித்திக்காகத்தான் புத்தி
கொள்ளை லாபம் பெறும் குருக்களுக்கு
இந்த மாணவர்"கள்" நல்ல
முதலீட்டுப் போதை.

"ஆட்டோ"க்களும் "ஸ்கூட்டி"களும்
அவ்வப்போது அள்ளுகின்றன.

பிள்ளைகளை அடகு வைத்தும்
அடக்கி வைத்தும் போதிக்கும்
இந்த மந்திரத்துக்குப் பெயர்
புலமைப்பரிசிலாம் !?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.லெட்சுமணன்

# மலையக அரங்கியல் களம் (பன்முக நோக்கு)

பிரித்தானிய சாம்ராஜ்யத்தை வளப்படுத்தும் நோக்கில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மக்கள் கூட்டம் இலங்கை அரசியலில் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்ற சொற்றொடர் உருவாக்கத்திற்கு காரணமாகினர். சுமார் 200 வருட தடம் பதிவு பாய்ச்சலில் இருப்புக்கான உத்தரவாதம் நோக்கிய நகர்வு பல தடைகளை யும், தடங்களையும் கொண்டமைந்ததுடன் தென்னிந்தியாவி லிருந்த புலம் பெயர்வு, பின்னாளில் இந் நாட்டிலிருந்தான புலம் பெயர்வு என்றவாறு அமைகிறது. புலம்பெயர் இலக்கியத்திற்கு காலத்தால் முற்பட்ட ஓர் சமூகமாக மலையக சமூகம் விளங்குகிறது. இந்திய வம்சாவளி என்ற சொற்றொடர் செல்வாக்கு வலு குறைந்த நிலையில் "மலையகம்" என்ற பதம் வேரூண்டி செல்லும் வகையில் பிரயோகத்திற்கு வந்தது.

இரு நூறு வருட கால பாய்ச்சலில் ஏற்பட்ட அனுபவங் கள் பல்வேறு துறைகளிலும் துறைவாரியாக ஆய்வுக்குட் படுத்தப்பட்டுள்ளன. அவ் ஆய்வுகளுக்குரிய சான்றுகளாக கலை இலக்கியம் தொடர்பான ஆய்வுகளின் முடிவுகள் வரலாற்றையும் வாழ்வியலையும் புலப்படுத்துமாற்றை காணலாம். இலங்கையினுடைய அரசியலில் ஓரங்கட்டப்பட்ட நிலையில் துர்ப்பாக்கிய சம்பவங்கள் மலையக மக்களினுடைய வாழ்வியலோடு வரலாறாக்கப்பட்டுள்ளது. இம் மக்கள் கூட்டம் தொடர்பான ஆய்வுகள் விரிவு படுத்த வேண்டிய தேவைக் குள்ளாகியுள்ளது. காலம் கடந்த பின்புதான் இலங்கை கலை இலக்கிய செல்நெறியில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. தமிழர்களுக்குள்ளேயே ஓரங்கட்டப்பட்ட பார்வையில், கலை இலக்கிய துறைகளில் ஒப்பிட்டு பார்க்காத அளவு பிற்படுத்தப்பட்ட சமூகமாக எண்ணக்கரு உருவாக்கம் வேரூண்டியிருந்தது. அந்த வகையில் கால மாற்றம் ஈழத்து தமிழ் இலக்கியத்தில் தவிர்க்க முடியாதவொன்றாக மலையக கலை இலக்கியம் விளங்கியது.

கிடைத்த தகவல்களைக் கொண்டு முடிந்த முடிவாக தீர்ப்பு கூறிய ஆய்வாளர்கள், பேராசிரியர்களின் குறுகிய வட்ட சிந்தனை எழுத்துக்களை திருத்தி எழுத வேண்டிய நிர்பந்த மும் ஏற்பட்டது. இச் சூழ் நிலையின் பின்பே மலையக இலக்கியத்திற்கு அங்கீகாரம் கிடைத்து. இவ்வகையில் மேலெழுந்த பார்வை அல்லாமல் தூரநோக்கோடு ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு "மலையக இலக்கியமே புது ரத்தம் பாய்ச்சியது" என்றவாறு கருத்து முன்வைக்கப்பட்டது. இக் கருத்தை முன்வைத்தவர்கள் தொடர்பில் அண்மைக் கால மாக வேறுப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. மலையக இலக்கியம் தொடர்பில் பேராசிரியர் கைலாசபதி அவர்களின் அணுகுமுறைகள் சிறப்பிற்குறியதாகும். பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் க. அருணாசலம், பேராசிரியர் செ.யோகராசா அவர்களதும், சம காலத்தில் பேராசிரியர் துரை மனோகரன் பேராசிரியர் வ.மகேஸ்வரன் ஆகியோரின தும் ஆய்வுகள் பல்கலைகழக மட்டத்திலிருந்து வெளியாகின.

மலையக கலை இலக்கியம் தொடர்பான சுயாதீன ஆய்வுகளே அதன் காத்திர உள்ளடக்கத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஏனைய ஆய்வுகளை விட இந்த அரங்கியல் தொடர்பான ஆய்வு முடிவுகள் தான் மலையகத்தை பாதித்த ஓர் விடயமாக முனைப்பாகிறது. இலங்கையினுடைய நாடக வரலாற்றை சிங்கள நாடக வரலாறு, தமிழ் நாடக வரலாறு என வகைப்படுத்தும் சாரார் மலையக நாடகத்துறை தொடர்பில் கவனத்தில் எடுத்திராத துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. காலமாற்றம் அவ் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இலங்கையினுடைய நாடக வரலாற்றில், வளர்ச்சியில் எந்த வகையிலும் மலையக அரங்கியல் முயற்சிகளும் சளைத்தவைகள் அல்ல. ஏனைய சமூக நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளோடு ஒப்பீட்டு பார்க்கின்ற போது அவைகளை விஞ்சும் வகையில் "நாடக துறையில் மலையகம்" என்ற எண்ணக்கரு காத்திரம் பெறுவதாக அமைகிறது.

மேற்குறித்த விடயத்தை முன்நிறுத்தி சான்றுகளை முன் வைக்கும் நோக்கத்தை கொண்டதாக இக் கட்டுரையின் உள்ளடக்கம் அமையும். மேலும் மலையக கூத்துகளின் பிரயோகத்திற்கு அடுத்த கட்டமாக உருவான நாடக முயற்சிகள் தொடர்பான பார்வையும் இக் கட்டுரை உள்ளடக்கத்தோடு இணைத்துக் கொள்வதோடு, கூத்துக்களை அரங்கமயப் படுத்தும் முயற்சிகள் தொடர்பான பதிவுகளையும் உள்வாங்கிக் கொள்ளும்.

சமய சடங்குகளில் இருந்து தமிழ் நாடகம் உருவாகியது, என்பது பொதுவாக ஆய்வாளர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். சமய சடங்குகளின் போது பார்வையாளர்கள், பங்குபற்றுனரை மகிழ்விக்க ஆடிய ஆட்டங்கள் பிறிதொரு வகையில் நிகழ்த்துகலைகளாக வளர்ச்சி கண்டுள்ளன. சமய சடங்கு மரபுகளையும் நிகழ்ந்துக் கலை அம்சங்களையும் இணைத்துக்கொண்ட வகையில் கூத்துகள் உருவாகின. இக் கூத்துக்கள் புராண கதைகளை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டன. கூத்து, விலாசம், வசாப்பு, சபா என்ற வகையில் பரினாமம் பெற்று இசை நாடக வருகையின் பின்னர் நவீன நாடகங்கள் என்ற வகையில் வளர்ச்சியடைகின்றன.

இந்தப் பின்னணியில் இலங்கையினுடைய அரங்கியல் வளர்ச்சியில் இரண்டு பிரிவுகளில் நாடக வளர்ச்சி பற்றி பார்க்கின்ற வழமை நிலவுகின்றது. மேற்கத்தேயர்களின் வருகையின் பின்னர் தான் நாவல் இலக்கியம் கீழைத்தேய நாடுகளில் அறிமுகமாகின்றது. அவ்வாறே அரங்கியல் தொடர்பான முனைப்பும் இவர்களுடைய வருகையின் பின்னரே பரிணாமம் பெறுகிறது. மேற்கத்தேயர்களின் வருகையின் முன்னர் இலங்கைக்கேயுரிய வகையில் கூத்துக்கள் கையாளப்பட்டுள்ளது, தொடர்பில் கருத்துக்கள் முன்வைப்பவர் களும் உள்ளார்கள். இருந்த போதிலும் கூத்து தொடர்பில் தென்னிந்தியா முன்னோடி என்ற வகையில் தென்னிந்தியாவை தாயகமாக கொண்டிருந்த மக்கட் கூட்டமான மலையக தமிழர்கள் தாயக பூமியிலேயே அரங்கியல் தொடர்பான எண்ணக்கருவோடு தொடர்புபட்டவர்கள் என்பது வெளிப்படையான உண்மையே.

பிழைப்பு நோக்கம் கருதிய புலம் பெயர்வு என்ற போதிலும் தலைமுறை வாழ்க்கையை கடந்த நிலையிலேயே கடல் கடந்த பயணம் நோக்கி விரைந்தனர். சமய சடங்குகளில் தன்னை ஈடுபடுத்தி கொண்ட ஓர் சமூகம் தென்னிந்தியாவில் இருந்த புலம் பெயருகின்ற நிலையில், மன்னார் இறங்குதுறை தொடக்கம் மாத்தளை ஊடாக மலையக பயணத்தில் நிறைவு காண்கின்றார்கள். வீதி ஓரங்களிலேயே மலையகத்திலுள்ள புராதன மாரியம்மன் ஆலயங்கள் காணப்படுகின்றன. (உ-ம்) மாத்தளை, நாவலப்பிட்டி, கம்பளை, கடியன்லென ஆலயங்களை குறிப்பிடலாம். இவ் ஆலயங்களின் வரலாறும் இந்திய வம்சாவளி மக்களினதும் வருகையின் வரலாறும் சமகாலத்திற்குரியதாகும். இம் மக்கள் கூட்டத்தினரும் சமய சடங்குகளில் தொடர்புபட்டவர்கள் என்ற வகையில் அரங்கியல் தொடர்பாகவும் ஈடுபட்டவர்கள் என்பது திண்ணமாகும். இந்த வகையில் மலையக அரங்கியல் களம் என்ற பார்வையும் நீண்ட கால வரலாற்றையும் கொண்டுள்ளது என்பது தெளிவாகும்.

ஐரோப்பியர்களின் வருகையின் பின்னர் இலங்கையில் நாடகத்துறை வளர்ச்சியடைந்தது. தமிழ், சிங்கள நாடகங்கள் என்ற வகையில் அவற்றை வேறுபடுத்தி பார்க்கலாம். ஐம்பதுகளுக்கு பின் தேசிய நாடக மரபு என்கிற கோட்பாடோடு பேராசிரியர் மௌனகுரு அவர்களின் ஆய்வுத் தகவல்கள் முக்கியமாகிறது. 1950களின் பின்பே தேசிய நாடக மரபு என்ற எண்ணக்கரு உருவாகிறது. சிங்கள தேசிய மரபை பேராசிரியர் சரச்சந்திர இனம் காண்பதாகவும், தமிழ் தேசிய நாடக மரபை பேராசிரியர் சு.வித்தியானந்தன் இனம் காண்பதற்கான முனைப்பில் ஈடுபடுவது தொடர்பில்லான பங்களிப்பை கூறுகிறார். சம காலத்திலேயே தமிழர்களின் நாடக மரபில் மலையக தமிழர்களின் நாடகங்கள் தொடர்பில் பாராமுகமாக இருந்தமை, அறியாமை கவலைக்குரியதாகும்.

பிரித்தானியருடைய ஆதிக்கத்தில் இந்த நாட்டில் இருந்த பூர்வீக தமிழ், சிங்கள பாரம்பரியத்தவர்களை ஆட்சிக் குட்படுத்துவது என்ற எத்தனிப்பு மட்டுமே மேலோங்கி யிருந்தது. மாறாக பிரித்தானியர் ஆதிக்கத்தில் முதல் சுரண்டலுக்கும் உட்படுத்தி அடிமைகளாகவே அணுகப்பட்ட சமூகத்தவர் களிடமிருந்தே எதிர்ப்புணர்வு மேலோங்கியிருக்க வேண்டும். அதற்கு துணைபோன கங்காணிதனங்களுக்கு எதிராக போர்க்குண பாய்ச்சலில் அமைத்த நாட்டார் பாடல் வரிகள் குறிப்பிடத்தக்கவைகளாகும். இலங்கையில் ஏனைய பிரதேச நாட்டார் பாடல்களில் அழகியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மாறாக மலையக நாட்டார் பாடல்களிலே எதிர்ப்புணர்வு மேலோங்கியிருப்பது தெட்டத் தெளிவான சாட்சியங்களாகும்.

1875 இல் இந்தியாவின் அசாம் மாநிலத்தில் தேயிலை தோட்டங்களில் தொழிலாளர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக நாடகம் மேடையேற்றப் பட்டுள்ளது. சரண் சட்டோபாத்யாய என்ற நாடக செயற் பாட்டாளரினால் தேயிலைத் தோட்டத்து துரைமார்களின் நிலைக் கண்ணாடி (The mirror of Indigo Planters) என்ற நாடகமே இவ்வாறு மேடையேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிரிட்டிஸ் ஆட்சியாளர்களினால் நாடக அரங்காற்றுகைச் சட்டம் (Dramatic Performance Act of 1876) அமுலாக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஸ் ஆட்சியின் போது இந்த சட்டம் அமுலில் இருக்கின்ற காலத்தில் தான் நடேசய்யரின் செயற்பாடு மலையகத்தில் ஊடுருவுகிறது. மக்களுக்கு தெளிவுபடுத்தி அடக்குமுறைகளுக்கு எதிராக சமூக அணியை திரட்டும் பணியில் ஈடுபடுகிறார். இவ்வாறு சமூக அணிதிரட்டலுக்கு அவர் கலை, இலக்கிய துறைகளையே பிரதானமாக பயன் படுத்துகிறார். இவரோடு இணைந்த வகையில் மீனாட்சியம்மா வினுடைய செயற்பாடும் குறிப்பிடத்தக்கதாகும். 1937 இல் நடேசய்யரின் "தொழிலாளர் அந்தரபிழைப்பு" நாடக நூல் வெளியாகிறது. இதுவே இலங்கையில் வெளியான முதல் அரசியல் நாடக நூலாகிறது. இவரது சமகாலத்திலே நாடக பாடல்கள் மீனாட்சியம்மையால் இயற்றப்பட்டுள்ளன. இந்த மீனாட்சியம்மாள் இலங்கையின் பெண் கவிஞர்களின் முன்னோடிகளில் ஒருவராகவும், மலையக பெண் கவிஞர் களின் முன்னோடியாகவும் கொள்ளப்படுகின்றார்.

முப்பதுகளில் உருவான இந்நாடக நூல், நாடகத்தை உள்வாங்கிக்கொள்கின்ற சமூகம் நோக்கியே படைத்திருக்க முடியும். எனவே இதன் மூலம் மலையக மக்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பதுகளுக்கு முற்பட்ட காலத்திலும் நாடகம் தொடர்பான பாரம்பரியம் கையாளப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. ஏலவே கூறப்பட்டதற்கமைய 1950களின் பின்பே தேசிய நாடக மரபு தொடர்பான கவனம் தொடர்பில் வலியுறுத்தப்படுகிறது. வரலாறுகளை மட்டும் போதிக்கும் நாடகங்கள் தேசிய மரபாக உயர்த்திப்பார்க்கும் போது, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான செயற்பாடாக அமைந்த நாடகங்கள் கவனத்திற்குற் படுத்தாமை தொடர்பில் கவனத்தை செலுத்த வேண்டும்.

தெளிவான சிந்தனையில் நடேசய்யரின் நாடக நூலுக்கான முன்னுரை வரிகள் பின்வருமாறு அமைகின்றது. "இந்தியாவும் சரி இலங்கை மலாய் நாடுகளும் சரி பிரிட்டிஸ் முதலாளிகளுடைய சௌகரியத்ததிற்காக ஆட்சி செய்யப்படுகிறதென்பது மிகையாகாது. இலங்கை, மலாய் நாடுகளிலுள்ள நிலங்களை இந்திய தொழிலாளர்களைக் கொண்டு பண்படுத்தி இரு நாட்டவர்களுக்குமில்லாமல் 6000 மைல்களுக்கப்பாலுள்ள ஒரு நாட்டிற்கு கொண்டு போகப்படு கின்றது என்பது உண்மை. இந்நாடுகளில் இருந்து வரும் அரசியல் முறை காரணமாக ஐரேப்பிய வர்க்கத்திற்கு விரோதமாகச் செயற்படும் எவ்விதக் கிளர்ச்சியும் பயனற்றதாகப் போய்விடும் என தொடர்கிறது. எனவே இந்த வரிகளில் இலங்கையினுடைய தேசிய நலன் பற்றிய சிந்தனை மேலோங்கியுள்ளதை அறியலாம். இந்நாடக எழுத்துருவாக்கம் தொடர்பில் எந்த தேசிய நாடக மரபு குறித்தும் பேசப்படாமைக் கான காரணம் என்ன என்பது அறியப்படாத ஒன்றாகும். நாடக வடிவத்தின் பரினாம வளர்ச்சி கட்டங்கள் மலையக நாடகங்களிலும் பிரதிபலித்து வந்துள்ளன. இந் நிலையில் அரசியல் குறித்த நாடக முயற்சிகளில் இலங்கை நாடக வளர்ச்சியில் மலையக நாடகங்களே முன்னோடியானது என்பது குறிப்பிடத்தக்கது.

1930 களில் இலங்கை இந்திய போக்குவரத்து வசதிகள் தடையின்றி இருந்த கால கட்டத்தில் தோட்டங்களுக்கு இந்தியாவிலிருந்து புலவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், பாடகர்கள் வருகைத் தந்துள்ளனர். இவர்களது பாடல்கள், உரைகள், புராணக்கதை கூறல் என்பன பெரியகங்கானியின் வீட்டுத்திண்ணையில் அரங்கேற்றப்பட்டது. இந்த அங்கம் கூட பார்சிய கப்பனிகளுடைய அரங்கு மூன்று பக்கமும் மூடிய நிலையில் பிரதான பக்கம் மாத்திரம் திரைச்சீலையால் மூடப்பட்டிருக்கும். இங்கு ஒரு பக்கம் சுவரினால் மறைக்கப்பட்டு மூன்று பக்கங்கள் பார்வையாளர்களின் பார்வைக்குட் பட்டிருக்கும். இதன் தொடர்ச்சி நிலையில் அரங்குகள் அமைக்கப்பட்ட முறைப்பற்றியும், நுட்பங்கள் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். மேலும் இந்திய கலைஞர்களை பின்பற்றி இங்குள்ளவர்களும் இக் கலை முயற்சியில் ஈடுபடுகின்றார்கள்.

### அரங்க அமைப்புகள்

பிரித்தானியர்களின் ஆட்சியில் அமைக்கப்பட்ட இந்த லயன்முறைகள் குறிப்பாக மலையக மக்களின் அரங்கிற்கான அடித்தளமாகிறது. லயன்களில் எல்லோருடைய முன் அறைகளும் (ஸ்தோப்பு) திறந்த நிலையில் இருக்கும். இது ஒன்றுகூடும் சூழலை ஏற்படுத்திய அமைப்பு. இதனூடாக கருத்து பரிமாற்றம் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இரவு உணவு வேளை மகிழ்வை தருவதாக அமையும். ஓர் வீட்டில் சமைத்தது ஒரு கறி. அனைவரும் சாப்பிடுவது ஏழு, எட்டு கறிகளுடன் ஆகும். இது மலையக மக்களிடத்தே இருந்த கூட்டு வாழ்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். கருத்து பரம்பலோடு கலை வளர்ச்சிக்கும் ஏதுவான வீடமைப்பு முறையாக இருந்தமை கவனத்தில் எடுக்க வேண்டும். இச் சமூகமயம் மலையக அரங்கியலில் அரங்க அமைப்பு வடிவில் தலையானதாக கணிக்கப்படல் வேண்டும்.

ஆரம்ப காலங்களில் பெரிய கங்காணியின் வீட்டுத் திண்ணை, கோயிலில் அமைக்கப்பட்ட திண்ணை, கொழுந்து மடுவத்தில் அமைக்கப்பட்டுள்ள திண்ணைகளில் இவ்வாறான கதாபிரசங்கங்கள், புராண நாடக கதைகள் என்பன போதிக்கப் படுகின்றது. இத்திண்ணை எமது வாழ்வியலோடும் தொழிலோடும் மிக தொடர்புடையதாக அமைகின்றது.
இதனை வலியுறுத்தும் வகையில் தான்

"திண்ணைய திண்ணைய கூட்டுங்கடி
தெருவுத் திண்ணைய கூட்டுங்கடி"

என்ற மலையக நாட்டார் பாடல் வரிகள் கவனிக்கத்தக்க தாகும்.

பின்னாளில் நாடக மேடை அமைக்கும் நுட்பங்களில் வளர்ச்சி நிலை ஏற்படுகிறது. பெரிய மரங்களை தறித்து அவைகளைப் பயன்படுத்தி கூடாரம் அமைத்து அக் கூடாரத்தின் உள்ளே மேடை அமைக்கப்பட்டுள்ளது. இந்த மேடையை அமைப்பதற்கு வீடுகளில் உள்ள கதவுகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. வீடுகளில் உள்ள கதவுகளை வைத்து கிடையாக அடுக்கி உயரமான மேடைகள் அமைக்கப்பட்டமையும் குறிப்படத்தக்கது. இம் மேடையை அமைப்பதிலும் கூட்டு முயற்சியும் ஒருங்கிணைந்த சமூக செயற்பாடும் குறிப்பிடத்தக்கது. திரைச்சேலைகளால் முறையாக அழகியல் உணர்வோடு மறைத்தல், திரைச் சேலைகளை காட்சி பிற்புலத்திற்கு ஏற்ற வகையில் காட்சிப் படுத்தல், காட்சிகளை வரைதல் என்ற வகையில் நிபுணத்தவம் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. காட்சிகளுக்கான ஒலி, ஒளி அமைப்பில் பல நுட்பங்கள் கையாளாட்டுள்ளன. மின்சூல் (Touch) கொண்டு பெயர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பந்தம் பெற்றோல் மெக்ஸ் என்பன ஒளி அமைப்பில் மிக நுட்பத்தோடு பயன்படுத்தப்பட்டுள்ளன. பின்னாளில் நாடக அரங்குகள் அமையப்பெற்றுள்ளன. அவ்வாறு அமைந்த அரங்குகள் ஹட்டன் "மஹாவிஷ்ணு" மண்டபம், லிந்துலை லோடன் சாப்பு ஆகியன நிரந்தரமாக நாடகங்களை அரங்கேற்றும் மண்டபங்களாக விளங்கின. இந் நாடக அரங்குகளில் புராண நாடகங்கள், நவீன நாடகங்கள் என்பன மேடையேற்றப்பட்டுள்ளன.

### நாடகங்களில் பபூ ன் பாத்திரம்

நுட்பங்களோடு நாடக செயற்பாடுகளில் முக்கியத் துவம் பெற்ற பாத்திரமாக பபூன் பாத்திரம் விளங்குகிறது. கதையை நகர்த்துவதிலும் காட்சிகளை சித்திரிப்பதிலும் இந்த பபூன் பாத்திரம் இன்றியமையாதவொன்றாகும். காட்சிகளுக் கான இடைவெளியை தொய்வின்றி முன் நகர்த்துவதில் இந்த பபூன் பாத்திரம் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது. இது குறித்து மு.சிவலிங்கம் தனது நாட்டார் பாடல் தொகுப்பு நூலில் சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். உளவியலை அறிந்து சமயோகிதமாக கருத்துக்களை முன் வைக்கும் இப் பாத்திர பயன்பாடு மலையக நாடகங்களில் கருத்தியல் பரம்பலுக்கு உந்து சக்தியாக விளங்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்திற்காக வளர்த்த கலைகள்

இந்திய சபாக்களினதும் மற்றும் நாடகவியலாளர்களின் வருகை இத்துறை தொடர்பில் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தியது. அவ்வாறு வருகைத் தந்தவர்களுள் சங்கரதாஸ் சுவாமிகள், கிட்டப்பா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவ்வாறு இவர்களது நாடகங்களில் பார்வையாளர்கள் என்ற நிலையிலிருந்து தாங்களும் நாடகத்துறை ஈடுபாட்டாளர்களாக மாறுகின்றார்கள். இத்துறை சார் ஈடுபாடு பின்னாளில் ஓர் வளர்ச்சி போக்கினை ஏற்படுத்தியது. கதை எழுதுதல், அரங்கம் அமைத்தல், பாத்திரமேற்று நடித்தல், இயக்குதல், இயக்கத்தில் உதவி என்ற வகையில் திறன்களை மலையக இளைஞர்கள் வளர்த்துக் கொள்கிறார்கள்.

நாடகங்களில் இசை முக்கிய இடம் வகிக்கின்றது. நாடகங்களில் தப்பு, உடுக்கு, சங்கு, சேங்கண்டி, உறுமி, மேளம், சர்ப்பினாப்பெட்டி, நாதஸ்வரம், சர்பினா ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, நாடகம் என்பது ஒரு கூட்டு முயற்சி என்ற வகையில் தனித்தனியே இசை கலைஞர்களும் உருவாகின்றார்கள். இது கேள்வி ஞானத்தின் விளைவாக அமைந்த விடயமாகிறது.

காட்சிச் சீலைகள் அமைப்பில் பலர் ஈடுபடுகிறார்கள். முயற்சியும்,பயிற்சியும் பல ஓவியர்களை உருவாக்குகின்றது. இவ்வாறு உருவான ஓவியர்களுள் கொண்டய்யராஜாவின் ஓவியம் பற்றி மல்லிகை சி. குமார் சிலாகித்து கூறுவார். சாமிமலை பிரதேச கலைஞர்கள் தொடர்பில் பெ.விஜேகோபால் அவர்களது தேடல் கவனிக்கத்தக்கதாகும். இவ் ஓவிய கலைகளை போலவே ஒப்பனை கலைகளிலும் கேள்வி ஞானத்தில் வளர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். குறிப்பாக நாடகங்களில் பெண் பாத்திரங்களுக்குறிய ஒப்பனை நுட்பங்கள் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இப் பெண் பாத்திரங்களில் இனங்காணமுடியாத வகையில் ஆண்களே வேடம் தரித்துள்ளனர்.ஆடை வடிவமைப்பு, பின்னணி காட்சி அமைப்பு, நேர முகாமை என்ற வகையில் நாடக முயற்சிகளில் சிறப்பிற்குரியவர்களாக திகழ்ந்துள்ளார்கள்.

ஐம்பதுக்கு முற்பகுதியில் நடத்தப்பட்ட நாடகங்கள்

ஐம்பதுக்கு முற்பகுதியில் அபிமன்னம் சுந்தரி, பிரகலாதா, வள்ளி திருமணம், சத்தியவான் சாவத்திரி, நல்ல தங்காள், பவளக்கொடி போன்ற நாடகங்கள் அரங்கேற்றப் பட்டுள்ளன. அட்டன் பிரதேசத்தில் ஆ.முத்தையா மாஸ்டரின் அசோகமாலா குறிப்பிடத்தக்கது. மகாபாரதம் இராமாயணம் போன்றவை நாடகமாக்கப்பட்டு வாரத்தில் ஒரு நாள் என்ற வகையில் தொடர் நிகழ்ச்சியாக இடம்பெறுவதுண்டு. கதையம்சம் பகுதி பகுதியாக நடித்து இறுதி காட்சியின் பின்னர் பட்டாபிஷேக நிகழ்வு இடம்பெறும். இதன் வழியில் வந்த நிகழ்வாக தோட்டங்களில் இராமர் பஜனை வழிபாட்டு முறைகளை கொள்ளலாம். தற்போது சில தோட்டங்களில் இராமாயணம் பாத்திரங்கள் பங்கெடுக்கும் வண்ணமே மார்கழி மாத பஜனை நிகழ்வு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.இவ் இராம வழிப்பாட்டு முறையோடு வளர்ந்த கலைகள் குறிப்பிடப்பட வேண்டும். பாடல் புனையும் திறன், பாடல் பாடும் திறன், பாடல் ஊடாக கதை கூறும் திறன் என்பன ஈடுபாட்டாளர் களிடம் வளர்ச்சியுற்றமை சிந்திப்பிற்குரியதாகும். இவ்வாறான பின்னணியிலேயே கூத்துக்களில் தேவர் சபை அரங்காக அமைக்கப்படும் முறையையும் காணலாம். மாநா மருதை நாடக சபா, வேல் நாயர் குழுவினர், சிங்கத்தர் சாய்ப்பு கம்பனி, ராஜகோபால் கம்பனி, கமலா டாக்கிஸ் ஆகிய கம்பனியின் நாடகங்கள் தொடர்பில் சுப்பையா இராஜசேகரன் கூறுவார்.

ஐம்பதுகளுக்கு முற்பட்ட காலத்தில் குறிப்பிட்ட வகையிலான நாடக காணப்பட்டமையை அவதானிக்கலாம். இலங்கை நாடகத்துறையை இரு பிரிவுகளுக்குள் மட்டுப் படுத்தி பார்த்த ஆய்வாளர்களின் முடிவுகளுக்கமைய 50 களுக்கு பின்னர் தான் இலங்கை தேசிய மரபுகள் பற்றி முனைப்பு பெறுகிறது. ஆனால் மலையக நாடகங்கள் சமூக விடுதலை நோக்கிய நகர்வினை கொள்கிறது. இவ்வாறே வட கிழக்கு புலத்தில் சாதி வேறுபாடுகளை முன் நிறுத்தியும் அங்கே வர்க்க ஏற்றத்தாழ்வு குறித்து சித்தரிப்புக்களையும் அப்பிரதேச நாடகங்களில் காணலாம். மாறாக மலையக நாடகங்கள் வர்க்க அடக்க முறைகளை உடைக்கும் வகையிலான செயற்பாடுகளை வலியுறுத்துவதில் முன்னோக்கி நிற்பதை காணலாம். இவ்வாறான சித்தரிப்புக் களில் அமைந்த நாடகங்கள் பல மேடையேற்றப்பட்டன. அவ்வாறு மேடையேற்றிய நாடகங்கள் அத் தோட்டத்துக்குள் மட்டுமே வரையறுத்துக் கொண்ட நிலை துரதிஸ்டமாகும். பெருநாள் என்றாலோ திருவிழா என்றாலோ நாடகம் இன்றியமையாததாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நாடக இயக்குனர்கள் “மாஸ்டர்” “வாத்தியார்” என சிறப்புடன் அழைத்தமை குறிப்பிடத்தக்கது. கேள்வி ஞானத்தால் வளர்த்த கலை பின்னர் மாஸ்டர்களுடைய வழிப்படுத்தலி னாலும் வளர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐம்பதுகளில் எழுந்த நாடகங்களில்

1. வட்டக்கொடை மடக்கும்பரை தோட்ட- வள்ளுவர் மன்றம் “மறுமலர்ச்சி”
2. வட்டக்கொடை புதுக்காடு “நச்சுக்கோப்பை” போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

திராவிட இயக்க நாடக மரபு

1932 இல் ஈ.வே.ரா பெரியார் இலங்கை விஜயத்தை மேற்கொள்கிறார். இதன் பின் இலங்கை சுய மரியாதை இயக்கம் செல்வாக்கு பெறுகிறது. தென்னிந்தியாவிலிருந்து திராவிட மரபு நாடகங்களின் செல்வாக்கோடு அறிஞர் அண்ணா, மு.கருணாநிதிஆகியோரின் நாடகங்களும், அவ்வாறான பாணியில் அமைந்த நாடகங்களும் மேடை யேற்றப்பட்டுள்ளன. ஐம்பதுகளில் வெளியான நாடகங்களில் கருணாநிதியின் “நச்சுக்கோப்பை” மலையகத்தின் பல பகுதி களிலும் நடிக்கப்பட்டுள்ளது. திராவிட இயக்க கருத்துக்களை வெளிக்கொணறும் வகையிலான நாடகங்களில் சாதிய எதிர்ப்பு, மூடநம்பிக்கைகள் எதிர்ப்பு, மறுமணத்தை வலியுறுத்தல், சீதனக்கொடுமை, பொதுவுடமை போன்ற கருத்துக் களை முன்நிறுத்தி நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. தென்னிந்திய சினிமாவின் தாக்கமும் இக்கால நாடகங்கள் பெரிதும் காணப்பட்டது.

இந் நிலையில் பல நாடகங்கள் மலையக சமூக பின்னணியில் உருவாகின்றன. அவ்வாறான நாடக செயற்பாட்டாளர்களில் மு.அ.வேலழகன், தமிழோவியன் க.ப லிங்காதாசன், சே. இராமசாமி, எம்.ஏ.அப்பாஸ் ஆகியோர் குறிப்பிடதக்கவர்களாவர். ஐம்பதுகளில் நாடக நூல்கள் பல வெளியாகியுள்ளன. எம்.ஏ அப்பாசின் “கள்ளத்தோணி” “துரோகி” “மூட்டையை கட்டுங்கள்” ஆகிய நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கதாகும். இந்த நாடகங்கள் பல பிரதேசங்களில் மேடையேற்றப்பட்டுள்ளன. "கள்ளத்தோணி" சர்ச்சைகளை ஏற்படுத்திய நாடகமாகும். தலைநகரிலும் மேடையேற்றப் பட்டுள்ளதாக அந்தனி ஜீவா குறிப்பிடுகிறார். 1953 கு.க.சே. இராமசாமி அவர்களின் "கண்ணீர்" நாடக பிரதியாக்கம் குறிப்பிடத்தக்கதாகும். இந் நூலுக்கு சி.பி சிற்றரசு மதிப்புரை எழுதியுள்ளமை குறிப்பிடத்ததாகும். இக்காலத்தில் மேடையேற்றப்பட்ட இராவணன் இயக்கிய "கங்காணி மகள்" நாடகம் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இக் காலகட்டத்தை தொடர்ந்து மலையக கவிதை இலக்கியம் தொடர்பிலான பார்வையில் மலையக வீதிப்பாடல் யுகம் முனைப்பாக்கப்படுகிறது. சமூக அடக்கு முறைகளுக்கு எதிரானதும் அநீதிக்கு எதிரானதுமான குரல் வீச்சுப்பெறுகிறது. சினிமாப் பாடல்களில் மெட்டுக்களிலே பாடல் புனையப்படு கிறது. வீதிப்பாடலாசிரியர்கள் வசை மொழியில் உள்ளதை உள்ளவாறே ஆட்சியாளர்கள், அடக்குமுறையாளர்களுக்கு எதிராக போர்க்குண பாய்ச்சலை மேவுவதைக் காணலாம். இது திராவிட மரபு சார் நாடக தொடர்பு ஓர் காரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கையின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம்**

தேசிய விடுதலை புரிதலுக்கான கால சூழ்நிலை வாய்ப்பாக அமைகிறது. சோல்பரி அரசியலமைப்பு மலையக தமிழர்களுக்கு சாதகமாகியது. இன உணர்வு குறித்த சிந்தனை பாராளுமன்றத்தில் திருப்தியான அளவு மலையக பிரதிநிதிகள் உள்வாங்கப்படுகிறார்கள். பிரித்தானியர் ஆட்சியில் கிடைத்த வாய்ப்பில் படித்தவர்கள் உருவாகிறார்கள். இதன் விளைவு மத்தியதர வர்க்கம் தோற்றத்திற்கான பின்னணியில் விடுதலை குறித்த சிந்தனை முனைப்பு பெறுகிறது. தேசிய வாதங்கள் குறித்த கோரிக்கையை நாடகத்துறையும் வழியுறுத்துவதற் கான முயற்சிகளும் மோற்கொள்ளப்படுகிறது. தேசிய தலைவர்கள் உருவாகிறார்கள். தமிழ் தேசிய தலைவர்கள் மேட்டுக்குடி மேதாவி தனத்தில் உறுதிப்படுத்த வேண்டியதை உதறித்தள்ளிவிடுகிறார்கள். இனங்களுக்கிடையிலான உத்தர வாதம் குறித்த வாய்ப்பை தாரைவார்க்கிறார்கள். இக்கால கட்டத்தில் நடேசய்யரின் தீர்க்கமான சிந்தனை மருத்தளிக்கப் படுகிறது. நடேசய்யரின் வர்க்க ரீதியில் யோசித்தும் மலையக சமூகம் குறித்தும் யோசித்த நிலையில் தேசிய இறைமைக்கு பாதகமில்லாத யோசனையை முன் வைத்தவராக இருக்கிறார். நடேசய்யர் தொடர்பில் சிங்கள, தமிழ் தேசியவாதங்கள் சரியான புரிதலை ஏற்படுத்தியிருக்குமானால் தேசிய தலைவர்களில் ஒருவராக நடேசய்யர் கொள்ளப்பட்டிருப்பார். சோல்பரி யாப்பின்படி மலையக பிரதிநிதிகளும் பூர்வீக தமிழர் பிரதிநிதிகளும் சிங்கள மக்களும் திருப்திகரமான வகையில் பிரதிநிதிகளைப்பெற்றிருந்தனர். இதையொத்த அரசியலமைப்பு இருந்திருக்குமானால் கூட இனப்பிரச்சினை இந்த அளவில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்காது.

இருந்த போதிலும் மலையக மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்பு நிலைகளை பாராமுகமாக தமிழ் தலைவர்கள் மேதாவிதனமாகவே முடிவெடுத்தார்கள். இது பற்றி கலாநிதி ந.ரவீந்திரன் குறிப்பிடுகையில் 1937ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட உள்ளூராட்சி சபை சட்டத்தில் மலையக மக்களின் வாழ்விட உரிமைகளை மறுக்கும் வகையில் பிரதேச அமைப்பு களுக்கான வாக்குரிமையை பறிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.1937 இல் உள்ளூராட்சி சபையிலும் 1946 இல் பாராளுமன்றத்திலும் இவ் வகையில் அரசியல் உரிமை மறுக்கப்பட்டமையானது ஒரு ஆளுமை மிக்க தேசிய இனமாக மலையக மக்கள் அணித்திரள்வதைக் தடுப்பதற்கான உத்தியாகவே அமைந்திருந்தது.

| வருடம் | சிங்களம் | ம.தமிழர் | தமிழர் |
|---|---|---|---|
| 1931 | 65% | 15.4% | - |
| 1946 | - | 11.08% | 11.00% |
| 1953 | - | 12.00% | 10.09% |

1964 ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு பின் 1981 இல் சிங்கள மக்கள் 74.2%

அதனைத் தொடர்ந்து பல்வேறு வகையில் இன சுத்திகரிப்பு லாவகமாக மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக குடும்பக்கட்டுப்பாடு என்ற பெயரில் இன அழிப்பை மலையக மக்களிடத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

குடும்பக்கட்டுப்பாட்டு முறையை பொறியாக வைத்து இன அழிப்பிற்கும் இந்த நாடகத்தை சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. அவை ஒளிப்பதிவாக்கி தோட்டவாரியாக காண்பிக்கப்பட்டு குடும்பங்களின் மனோநிலையை மாற்றுகின்ற காரியத்தில் வெற்றி காண்கிறார்கள். இச் செயற்பாட்டிற்கு எவ்வாறு இச் சமூகத்தில் உள்ளவர்களை பயன்படுத்துகிறார்கள் என்பதை செ. தழிழ்ச்செல்வனுடைய "கோடரிக்காம்புகள்" சிறுகதை பதிவு செய்திருப்பதைக் காணலாம்.

இந்த பின்னணியில் எவ்வாறு ஒரு சமூகம் அழிவ தற்கு திட்டமிடப்பட்டதோ, அந்த சமூகம் சம்மந்தமாக காற்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோ, அவ்வாறே நடேசய்யரின் செயற்பாடுகளும் கண்டுக்கொள்ளப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாவது தேசிய இன அந்தஸ்தை பெற வேண்டும் என்பதற்காக மலையக மக்கள் தொடர்பான அடிச்சுவடுகள் மறைக்கப்பட்டது. அதுவே மலையக நாடகங்களுக்கும் இடம்பெற்றது என்பதை உறுதியாக கூறலாம்.

**அறுபதுகளுக்கு பின் மலையக நாடக சூழல்**

மலையக இலக்கியத்தில் 60 களுக்கு பின் படைப் பாக்கத்தில் பாரிய முன் நகர்வு ஏற்படுகிறது. பல அமைப்புக்கள் உருவாகின்றன. நாடகத்துறை ஈடுபாடு அதிகரிக்கின்றது. வீதிப்பாடல் யுகம் முனைப்பு பெறுகிறது. 60களின் முற்பகுதி களில் மண் பிடிப்புடன் பல நாடகங்கள் மேடையேற்றப்படு கின்றன. 1964 சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தம் மண்ணை விட்டு பிரிந்து செல்ல வேண்டிய கட்டாயத்திற்குற்படுகிறது. இவ் வெறுப்புணர்வை வீதிப்பாடல்கள் நன்கு புலப்படுத்துகின்றன. நாடகத்துறை செயற்பாட்டாளர்கள் புலம் பெயருகின்ற நிலையில் உறவுகள் நட்புகள் பிரிக்கப்படுகின்றன. கூட்டு முயற்சியில் செயற்படுத்தும் நாடக பங்களிப்பில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. உரிமை அற்றவர்கள் என்ற நிலையில் மனவெழுச்சிகளை படைப்புகளினூடாக அறியமுடிகிறது. நகர்புறங்களில் நாடகங்கள் சில அரங்கேறுகின்றன. அவ்வா றான நாடகங்களில் 1962 கொட்டகலை மணிக்கவத்தை தோட்டத்தில் "தாயகவிடுதலை" 1963 இதே தோட்டத்தில் "பொன்முடி" பதுளையில் 1963 இல் தமிழோவியனின் "தியாகி" போன்றன குறிப்பிடத்தக்கவைகளாகும். தலவாக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைப்பூ தோட்டத்தை சேர்ந்த குமாரசுவாமி வாத்தியாரும் பல நாடகங்கள் மேடையேற்றியுள்ளார். ஆ. முத்தையா மாஸ்டர் மற்றும் மாத்தளை இராஜரட்ணம் ஆகியோரது நாடகங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இராஜரட்ணத்தின் "அன்பின் வெற்றி" கண்டி, அட்டன் இடங்களில் மேடை யேற்றப்பட்டதோடு நாவலியூர் சொக்கநாதனின் "சிங்ககிரி செல்வி" என்ற நாடகமும் கண்டியில் மேடையேற்றப் பட்டுள்ளது. இதன் பின்னணியில் க.ப. சிவம் மற்றும் மாத்தளை கார்த்திகேசு ஆகியோரின் பங்களிப்புகள் விதந்து கூறப்படுகின்றன. நாவலியூர் செல்லத்துரையின் தொடர்போடு சிலோன் சின்னையா அவர்களது நாடகதுறை ஈடுபாடு குறிப்பிடத்தக்க தாகும். கே. ஏ. இராமன் "பெண்முடி", "ஏழைக்கும் பசிக்கும்" போன்ற நாடகங்களை மேடையேற்றியுள்ளார். அறுபதுகளை தொடர்ந்து எழுபதுகளில் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளது. இக்காலத்தில் மாத்தளை பிரதேச நாடக ஈடு பாட்டாளர் களின் பங்குபற்றுதல் குறித்து மாத்தளை கார்த்தி கேசு குறிப்பிடுவார். மாத்தளை கார்த்திகேசுவின் "காலங்கள் அழிவ தில்லை", "களங்கம்", "ஒரு சக்கரம் சுழல்கிறது" ஆகிய நாடகங்கள் குறிப்பிடத் தக்கவைகளாகும்.



மலையக மக்களின் அன்றாட பிரச்சினையை மேடைக்கு கொண்டு வந்ததில் திருச்செந்தூரனுடைய பங்களிப்பு பற்றி மாத்தளை கார்த்திகேசு வியந்து கூறுவார். திருச்செந்தூரன் பற்றிய குறிப்பில் இல.நாகலிங்கம் 1964 ம் வருடம் மலைநாட்டு நல் வாலிபர் சங்கம் மலையக நாடக விழாவை நடத்தியுள்ளமையை குறிப்பிடுவார். இவருடன் செயற்பட்டவி.ரி. தர்மலிங்கம் புத்தாக்க சிந்தனையோடு மலையக அரங்கியலில் தனித்துவமான இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. மேலும் இரா. சிவலிங்கம் அவர்களுடைய சமூக செயற்பாடுகளும் நாடகத்துறை சாதகமான ஓர் இடத்தை பெற்றமை கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இந் நிலையில் மலையக கலை இலக்கிய பேரவை செயற்பாட்டாளர்களில் ஒருவரான அந்தனி ஜீவாவின் நாடகத்துறை தொடர்பான செயற்பாடுகள் வலுவூட்டுகிறது. சு. முரளிதரனின் நாடகப் ஈடுபாடும் குறிப்பிடத்தக்கது.அந்தனி ஜீவாவின் "அக்கினி பூக்கள்", சு. முரளிதரனின் எழுத்துரு வாக்கத்தில் "ஒன்று எங்கள் ஜாதியேவ. செல்வராஜின் "மலைகளை பேச விடுங்கள்" "எரிதழல் கொணர்க" போன்ற நாடக எழுத்துருவாக்கங்கள் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. மலையக பாடசாலைகளின் விருத்தியான செயற்பாடுகளில் ஓர் அம்சமாக இந்த அரங்க செயற்பாடுகள் முக்கிய கணிப்பிற்குரியதாகும்.

நாடகத்துறை ஆர்வலர் இல. நாகலிங்கம் அவர்களது இத்துறை தொடர்பான ஈடுபாடு கவனத்தில் கொள்ள வேண்டி யுள்ளது. இவரது ஈடுபாடும் பொகவந்தலாவ பிரதேசத்தில் குறிப்பாக ஒலிரோசரி வித்தியாலயத்தில் கற்கை நெறிக்கான களத்தை ஏற்படுத்தி தந்ததில் மிக முக்கியவொருவராக கொள்ளப்படுகிறார். க.பொ.த உயர்தரத்தில் "நாடகமும் அரங்கியல்" பாடத்தை மாணவர்கள் கற்பதற்குவாய்ப்பு இவரால் ஏற்படுத்தப்படுகிறது. இதன் பின்னணியில் நாடக அரங்கியல் நெறியை பல்கலைக்கழகத்தில் கற்பதற்கு உள்வாங்கப்படு கிறார்கள். கற்கை நெறியாக மலையகத்துடன் ஆற்றுகைகளை ஒப்பிட்டு பார்வையை செலுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. "சேறும், சகதியும் நுளம்புக் கடியும்,சிறுவர் துன்புறுத்தல்களும், பசியாலும்; மறைமுக அடக்கு முறை யாலும் நேரடி நெருக்குதல் களாலும் ஆளாகியுள்ளோரை தம்மைத் தாங்கு பவர்களாக சொல்பவர்களே சுய நலங்களுக்காக ஏமாற்றி வருவதை போட்டுக் காட்டுவதில் மலையக அரங்கங்கள் கவனம் செலுத்துகின்றன. என்ற இல. நாகலிங்கம் அவர்களது ஜெகன் சுகுமாரின் "காட்சியும் ஒரு கண்ணகித்தான்"என்ற நாடக தொகுப்பு நூலின் முன்னுரை வரிகள் குறிப்பிடத்தக்கது.

கலைஞர் ஜெகன் சுகுமாறனின் நாடகத்துறை பங்களிப்பு பற்றி விரிவான பார்வைக்குட்பட்டதாக அமைகிறது. நாடகத்தை தொகுப்பு நூல்கள் வெளியிட்டு அசாத்தியமான துணிவுடன் இவர் இத்துறையில் பரிணமிப்பது குறிப்பிடத்தக்கதாகும். நூறுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியும் இயக்கியும் மேடையேற்றியுள்ளார். இந் நாடகங்களை தொகுதி களாக்கியும் வெளியிட்டுள்ளார். இவரின் "காமாட்சியும் ஒரு கண்ணகிதான்" நாடகங்களின் தொகுப்பு நூல் இந்தியாவின் மணிமேகலை பிரசுரத்தில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. தொலைக்காட்சி நாடகத்திலும் ஆர்வத்தை கொண்ட இவர் 74 இலேயே "துணிந்தால் துக்கமில்லை" என்ற தொலைக்காட்சி நாடக முயற்சியும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். "சுடரும் சூறாவளியும்" என்ற நாடகத்தினூடாக இத்துறைகளில் களமிறங்கி சமகாலத்திலும் நாடக ஈடுபாட்டில் தடம்பதித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். அண்மைக்காலங்களில் திரைப்பட முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளுக்கு பின் நாவலப்பிட்டி, அட்டன் தளங்களில் இருந்து செயற்பட்ட மறுமலர்ச்சி மன்ற செயற்பாடுகள் கலை இலக்கியங்களை ஊடகமாகக் கொண்டு சிந்தனை மாற்றத்திற்கான பணியை ஆற்றியமை குறிப்பிடத் தக்கது. திரு. அருளானந்தம் அவர்களின் தலைமையில் இணைந்திருந்த மறுமலர்ச்சி மன்ற செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கதாகும். குணமூர்த்தி அந்தோனிமுத்து, சித்தி பரீடா, என்டன் கிறிஸ்டோபர் போன்ற கலைஞர்களின் பங்களிப்பு சிறப்பிடம் பெறுகிறது. குறிப்பாக அன்டன் கிறிஸ்டோபர் நாடகத்துறையில் மிகுந்த விற்பன்னராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் மலையக மக்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு இசைநாடகம், கவி நாடகம் என்ற வகையில் நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டவாரியாக சென்று அங்குள்ள மக்களை வைத்தே கலைநிகழ்வுகளை மேடையேற்றியுள்ளார்கள். கலைத் திறமையுடையவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் பணியினையும் மறுமலர்ச்சி மன்றம்ஆற்றியமை குறிப்பிடத் தக்கதாகும். இம்மன்ற செயற்பாடுகளில் மலையக நாடகங்கள் பெற்றிருந்த இடம் முக்கிய கவனிப்பிற்குறியதாகும். ஒல்லாந்து தேசத்தை சேர்ந்த திருமதி. ரீத் அவர்களும் இணைந்து செயற்பட்டார்.திருமதி. ரீத் திரு.அருளானந்தம் அவர்களது மனைவியாவார்.

கண்டி சத்தியோதய நிறுவனம் மலையக மக்களின் பால் அக்கறையுடன் செயற்பட்ட நிறுவனமாகும். அந்நிறுவன செயற்திட்டங்களில் நாடகத்திற்குரிய முக்கியத்துவத்தையும் வழங்கி செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பின்னாளில் கண்டி சமூக அபிவிருத்தி மன்றம், மனித அபிவிருத்தி ஸ்தாபனம் ஆகிய நிறுவனங்கள் கண்டியை தளமாகக் கொண்டு செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. மனித அபிவிருத்தி ஸ்தாபனம் மனித உரிமைகள் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீதி நாடகங்களை சூரியா வீதி நாடகக் குழுவை அமைத்து ஆற்றுகை செய்து வந்துள்ளன. இதற்கான பயிற்சி பட்டறைகளை வழங்கி இந்நாடகங்களை தங்கள் செயற் பாட்டு பிரதேசங்களில் நடத்தி வந்துள்ளது. அறுபதுகளுக்கு பிற்பட்ட காலங்களில் செங்கொடி சங்க புரட்சிகர கலை இலக்கிய குழுவினர் “கீமன் கூத்து” என்ற பெயரில் தெருக் கூத்துக்களையும் மேடை நாடகங்களையும் ஆற்றி வந்தமை தொடர்பில் தோழர் ஓ.ஏ இராமையா விபரிப்பார்.

கண்டி சமூக அபிவிருத்தி மன்ற செயற்பாடுகளில் குறிப்பாக எமது பாரம்பரிய நிகழ்த்துக்கலைகள் தொடர்பிலும் முக்கிய பங்காற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். புசல்லாவை இராமன் துறை தோட்டத்தில் பயிற்சிக்கான கூடம் ஒன்றினை யும் மலையக அருங்காட்சியகத்தையும் பேணி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இன்று 33வது திருத்த சட்டம் தொடர்பில் பேசப்படுகின்ற விடயத்தில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் இவ் அமைப்பினரின் பங்களிப்பு சிறப்புக்குரிய தாகும். “நல்லாட்சி” என்ற சொற்பதத்தை வலியுறுத்தி அவர்களது செயற்பாடு அமைந்திருந்தது. வீதி நாடகங்கள், நாடக பயிற்சி பட்டறைகளை நடாத்துதல் போன்ற செயற்பாடு களில் முக்கிய பங்காற்றியுள்ளது. இலங்கையின் பிரபல நாடக கலைஞர்களை இணைத்தும் தமிழகத்தில் “பிரளயன்” போன்ற நாடக செயற்பாட்டாளர்களையும் அழைத்து பயிற்சி பட்டறை களை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. மலையக வாசுதேவன் , மகேஸ்வரன், சந்தனம் சத்தியநாதன் போன்றோரும் குறிப்பாக பேராதனை பல்கலைகழக மாணவர்களையும் இணைத்துக் கொண்டு தோட்டங்களில் வீதி நாடகங்கள் ஊடாக சுருத்தி யலை பரப்பியமை குறிப்பிடத்தக்கதாகும்.

எண்பதுகளுக்கு பின் இயக்க செயற்பாடுகள் என்பது இலங்கையினுடைய ஜனநாயகத்தில் விரோதமாக ஆக்கப்பட்ட துர்ப்பாக்கிய நிலைமை தொடக்கப்பெறுகிறது. வட கிழக்கில் மேட்டுக்குடி வாதத்திற்குஎதிராக கிளர்ந்தெழுந்த இயக்கங் கள் இனப்பிரச்சினையால் முட்டிமோதிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள். அப்போராட்டத்தில் பலிக் கடாக்களாக ஆக்கப்பட்ட வரலாற்றிலும் மலையகம் கனிசமான பங்கினை தனதாக்கிக்கொண்டுள்ளது. தென்னிலங்கையில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியின் எதிர் நடவடிக்கை முனைப்பு பெறுகிறது. இந்த இடத்தில் ஆட்சியாளர்கள் இன ஒழிப்பு என்ற முனைப்பிலிருந்து வர்க்க அழிப்பு என்ற நோக்கிலான பாய்ச்சலில் தடம்பதித்து வெற்றி காண்கிறார்கள். அடிமட்டத்திலிருந்து கல்வி கற்று மாற்று சிந்தனையோடு செயற்பட்ட சிங்கள இளந்தலைமுறையினர் அழிக்கப்பட்டனர். வடகிழக்கு தென்னிலங்கையில் ஏற்பட்ட இரு வேறுபட்ட நோக்கங்களைக் கொண்ட போராட்டங்களின் விளைவு 90 க்கு பின் ஐக்கிய தேசிய கட்சியின் அதிகார கட்டமைப்பு படிப்படியாக உடைந்து 94ம் ஆண்டளவில் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது.

இப் போராட்ட சூழலில் வடகிழக்கு இயக்கங்கள் மலையகத்தில் ஊடுருவுகின்றன. நோக்கம் தெரியாத தூண்டலுக்குள் சிக்கிக்கொண்ட இளைஞர்கள் சிலர் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களைப்போல அழிக்கப் பட்டனர். பலர் சிறைகளில் அடைக்கப்பட்டனர். வழிப்படுத்தல் தவறு பல வகையில் மலையக மக்களின் வாழ்வியல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எதிர்வாத சிந்தனையில் மலையக மக்கள் முன்னணி இயக்கம் எதிர்நீச்சலோடு உருப்பெறுகிறது.

மக்கள் விடுதலை முன்னனி போராளிகள் அரசாங்கத்தை எச்சரிக்க வேண்டும் என்பதற்கான தூர நோக்கற்ற செயல் மலையக மக்களின் வாழ்வாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய உண்மையை சரிவர நம்மவர்கள் புரிந்ததாக இல்லை. மக்கள் விடுதலை முன்னணியினர் பெருந்தோட்டங்களில் தாக்குதல்களை நடாத்தினர். பெருந் தோட்ட மக்கள்யாக்கம் “ஜனவசம” காரியாலயங்கள், தொழிற்சாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன. பெருந்தோட்ட பொறிமுறையினை பலவீனப்படுத்துவதில் ஜே.வி.பி யினரின் பங்களிப்பு குறித்த கசப்பான உண்மையை ஞாபகப்படுத்திக் கொள்வதில்லை. தற்போதுள்ள “நல்லாட்சி” அரசாங்க அமையப்பெற்றதன்பின் தற்போதைய ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக்க மலையக மக்களின் தொழிற்சங்க அரசியல் செயல்முறைகளைப் பற்றிய விமர்சன கண்ணோட்டத்தில் பாராளுமன்றில் உரை ஆற்றியிருந்தார். இதன் பின்னணியில் நல்லாட்சியின் பங்காளர்களின் பங்களிப்புக்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. எது எவ்வாறாக இருப்பினும் மக்கள் விடுதலை முன்னணிக்கு இவ்வாறான உண்மையை எடுத்துச் சொல்லும் வகையில் எந்த பதில் உரைகளும் அமையாமை கவலைக்குறிய விடயமாகும். மேற்குறித்த போராட்ட செயன்முறையால் மலையக மக்களின் வாழ்வியல் சமூகத்தாக்கம் கலை இலக்கிய பண்பாட்டு பின்புலத்தை நெறிப்படுத்திக் கொள்வதில் பல தாக்கங்களை ஏற்படுத்தி வந்துள்ளன. பெருந்தோட்டங்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு தோட்டங்களை அண்மித்து இராணுவ முகாம் களை அமைத்ததோடு தோட்ட இளைஞர்களுக்கு இராணுவ முகாம்களில் தோட்டங்களில் சம்பளம் வழங்கி பயிற்சி வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சிகளின் போது உளரீதியான அணுகுமுறைகளோடு இயக்க செயற் பாடுகள் ஸ்தம்பிதமடையச் செய்யப்பட்டது. தோட்டங்கள் தோறும் இயங்கிய அமைப்புகள் இதன்பின்னர் படிப்படியாக வலுவிழந்தமை கவனிக்கத்தக்கதாகும்.

இவ்வாறான பின்னணியில் பார்க்கின்றபோது இயல்பாக மண்சார்ந்து உருவாகும் நாடக படைப்புகளில் ஓர் தேக்கத்தை ஏற்படுத்தியது. தனியே நாடகங்களுக்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலை மட்டுமல்ல ஏனைய கலை இலக்கிய முயற்சிகளும் இவ்வாறான நிலையிலே தான் இருந்தன. நிர்மாண படைப்புக் கள் கூட மண்ணை விட்டு வெளியே வந்து பார்வையாளன் என்ற நிலையிலும் தொழில் நிமித்தம் வருகை தந்த வடகிழக்கை சேர்ந்த எழுத்தாளர்களினால் படைக்கப் பட்டுள்ளன. அப்படைப்புக்களை உற்று நோக்குவதன் வாயிலாக இதனை அறியலாம்.

நாடகத்துறையை வளர்ப்பதில் இராப்பாடசாலை களின் பங்குபற்றல் பெரும் பங்கை ஆற்றியுள்ளது. முறைசார வகையிலான அமைப்பை கொண்டிருந்தாலும் மலையக கல்வி வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய நிறுவன முறையாக இவ் இராப்பாடசாலைகள் விளங்குகின்றன. இப்பாடசாலைகளை நடாத்தியவர்கள் கலைத்துறையில் திறன் படைத்தவர் களாகவே விளங்குகின்றனர். கலை விழா, சரஸ்வதி பூஜை, ஆகிய நிகழ்வுகளில் மேடையேற்றுவதற்காக நாடகங்கள் பயிலப்பட்டு வந்துள்ளன. இராப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களை வைத்து நாடகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறான இராப்பாடசாலையை நடாத்திய ஆசிரியர்கள் மலையகத்தில் பலர் இருக்கின்றனர். எடுத்துக்காட்டாக நாவலப்பிட்டி இம்புல்பிட்டி கல்லாறு பிரிவில் ஆர்.இராஜ ரட்ணம், எம்.ரட்ணசபாபதி ஆகியோர் நடாத்திய கலைமகள் இராப்பாடசாலையின் பங்களிப்பை குறிப்பிடலாம். இவ்வாறு பல இராப்பாடசாலை ஆசிரியர்கள் குறித்த பதிவுகள் தேட வேண்டிய அவசியம் நிலவுகிறது.

90 களில் சீடா திட்டம் வருகையின் பின்னர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. பயிற்சி நிலையங்களில் ஆசிரியர் கள் நாடக செயற்பாடுகளில் ஈடுபட்டனர். யதன்சைட் ஆசிரியர் கலாசாலை, ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றில் உள்வாங்கும் ஆசிரிய பயிலுனர்களில் தமக்கிடையே கருத்துக்களை பரிமாறிக்கொள்கின்ற தக்க சூழ்நிலை உருவா கிறது. ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரியில் சிவ.இரா ஜேந்திரன், சு.முரளிதரன், வ.செல்வராஜா ஆகிய நாடகத்துறை ஈடுபாட்டாளர்களின் வழிப்படுத்தல் செயற்பாடுகளும் வலு சேர்க்கின்றது. யதன்சைட் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் ஜே.சற்குருநாதன், சு.முரளிதரன், போன்றோரின் வழிப்படுத்த லும் குறிப்பிடதக்கது. குறிப்பாக இராகலை, பொகந்தலாவ பிர தேசத்தில் பாடசாலைகளில் இத்துறையில் வளர்ந்த மாணவர் கள் இக் களங்களில் தடம் பதித்துள்ளார்கள். இவ்வாறான ஆசிரியர்களில் அகமட் "வெளிச்சம் வெளியே இல்லை" நிஸாம், ஜேம்ஸ்வக்டர், ஹெலன், ராமையா, போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாடசாலை நாடக செயற்பாடுகளில் 1993 இல் "வெளிச்சம் வெளியே இல்லை" என்ற நாடகம் ஏற்படுத்திய தாக்கம் பல எதிர்வினைகளை ஏற்படுத்தியது. தமிழ் மொழித் தினப் போட்டிகளில் இருந்தே நாடக போட்டி இணைத்துக் கொள்ளப்படவில்லை. மிக நீண்ட காலத்தின் பின்பு நாடகம், தமிழ்த் தினப்போட்டி, சுற்று நிரூபத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது. சுற்று நிரூபத்தில் தலைப்பும், கதையம்சம் குறித்த வரையறையும் இருந்தமையால் மலையக பாட சாலைகளிலும், மலையக சமூகத்திற்குரியதான பிரச்சினை களை முதன்மைப்படுத்தி நாடகங்கள் அமைக்க முடியாமல் இருந்தது. இருந்த போதிலும் விடயப்பரப்பிற்கு ஏற்ற வகையில் பாடசாலை மட்டங்களில் இருந்து நாடகத்துறையில் வளரு வதற்கு ஏற்ற சூழல் காணப்பட்டமை கவனிக்கத்தக்கது.

பாடசாலைகளுக்கப்பால் கலாசார அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய மட்ட போட்டிகளில் ஜெகன் சுகுமாறன், வே.தினகரன், காளிதாஸ், கார்த்திக், மலையக வாசுதேவன் போன்ற ஆளுமைகள் தடம் பதித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மக்கள் "களரி" அமைப்பினூடாக காளிதாஸ் மற்றும் பொகந்தலாவை பிரதேச நாடகத் துறையில் ஈடு பாட்டா ளர்கள் தடம் பதித்து வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

2014ம் ஆண்டு தமிழ்மொழித்தின போட்டியில் சிறு கதைகளை மையமாகக் கொண்டு நாடகங்கள் அமைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கமைவாக உருவான நாடகங்களில் எட்டியாந்தோட்டை கருணாகரன், நாவலப் பிட்டி அ.லெட்சுமணன் ஆகியோர் நெறியாள்கை செய்த நாடகங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் கவனத்திற்குரியதாகும். எட்டியாந் தோட்டை கருணாகரன் தெளிவத்தை ஜோசபினுடைய "மீன்கள்" சிறுகதையினை நாடகமாக மாற்றி "லயன்" முறையில் உள்ள சிக்கலை மேடைவடிவத்தில் காட்டியிருந்தார். அ.லெட்சுமணன் 1964 ம் ஆண்டு மலையக மக்களை ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் ஊடாக துண்டாடப்பட்டும் தாயக பூமியிலிருந்து புலம்பெயர நிர்பந்திக்கப்பட்ட வேதனை உணர்வுகளையும் இந்நாடகத்தில் பதிவாக்கியிருந்தமை பலரது கவன ஈர்ப்பை பெற்றிருந்தது. அந் நாடகத்தில் அமைந்த வசனங்களில்

"காடுகள் அழிக்க வந்தோம் - மீண்டும்
எமது விளை நிலங்கள் காடுகளாவது
முன்னோக்கிய நகர்வா? பின்னோக்கிய நகர்வா?
என்பதோடு
மீண்டும் ஒவ்வொரு சந்தியிலும் வேலைக்காக
நின்றுக்கொண்டிருக்கிறோம்.
இதற்கு தீர்வே இல்லையா!

போன்ற வசனங்கள் பலவகையில் சிந்தனை கிளர்ச்சியை ஏற்படுத்தியமை தொடர்பில் பார்வையாளர்களின் கருத்து முன்வைக்கப்பட்டது. இது பாடசாலையைத் தவிர்ந்த ஏனைய பொது மேடைகளிலும் அரங்கேறியமை குறிப்பிடத் தக்கதாகும்.

புதிய பண்பாட்டு அமைப்பினர் நடத்திய மலையக நாடக விழாவும், அவ்விழா தொடர்பில் வெளியிட்ட "செங்கீற்று" பதிவு நூலும் முக்கியத்துவம் வாய்ந்தது. மலையகத்திலிருந்து பல பாகங்களில் இருந்தும் நாடகங்கள் போட்டியில் மேடையேறியது. (ஹொலிரோசரி) பொகவந்தலா பிரதேசத்திலிருந்து அரங்கேறிய நாடகம் போட்டியில் முதலாம் இடம் பெற்றது. இந் நாடகம் பேசிய மலையக சமகால பிரச்சினைகள் கவனிப்பிற்குரியதாகும். இந் நாடகத்தில் ஜெகன் சுகுமாரன், கடியன்லென வஸந்தன், ஆகியோரின் ஆளுமைகளும் வெளிப்படுத்தப்பட்டது.

செம்மலர் நாடகக் குழுவினுடைய நாடகங்களும், நாடக செயற்பாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. மலையகத்தின் சமகால பிரச்சினைகளை மையப்பொருளாக்கி அவற்றை வீதி நாடகங்கள் ஊடாக கருத்து பரிமாற்றல் மேற்கொள்ளப்பட்டது. இதனுள் இணைந்த கலைஞர்கள் புதிய ஜனநாயக கட்சியை சேர்ந்தவர்கள். தேசிய கலை இலக்கிய பேரவையின் செயற்பாட்டில் இணைந்துக் கொண்டவர்களும் உள்வாங்கியிருந்தார்கள். இச்செயற் பாட்டுடன் சிவ.இராஜேந்திரன், ஜெ.சற்குருநாதன், இராகலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னீர் வே.மகேந்திரன், சுகேஷணன் ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். சிவ.இராஜேந்திரன் அவர்களது நாடகத்துறை ஈடுபாடு குறித்த பதிவை "நிகர்" 6வது இதழில் காணலாம்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சமகாலத்தில் பல்கலைக்கழக அரங்கில் இவர்களுடைய நாடக சித்தரிப்புக்கள் குறித்து விரிவுரையாளர் திரு.சந்திர குமாரின் பதிவுகள் சிறந்த ஆவணமாகும். பல்கலைக் கழகத்திற்கு வெளியே வந்த பின்பு "அடையாளம்" என்ற அமைப்பின் ஊடாக இவர்களது நாடக செயற்பாடு களும் குறிப்பிடத் தக்கது.

புதிய பண்பாட்டு அமைப்பின் பொன்பிரபாகரன், பிரேம் குமார், ஆகியோர் அரங்கில் தொடர்பில் கொண்டுள்ள ஆர்வம், ஈடுபாடுகள்



கடந்த வருடம் பிரான்ஸில் இடம்பெற்ற உலகத் தமிழ் நாடக விழாவுக்கு இவ் அமைப்பின் கலைஞர்களும் அழைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அழைக்கப்பட்ட மற்றொரு அணி பேராசிரியர் மௌனகுரு அவர்களது தலைமையிலான அணியாகும். இரண்டு அணிகளுக்கும் விசா அனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். உலகத் தமிழ் நாடக விழாவை முன்னிறுத்தி "நிகர்" சிறப்பிதழ் வெளிவந்தது. அவ் இதழ் மலையக நாடகத்துறை தடங்களை ஆவணப்படுத் தும் செயற்பாட்டை முனைப்பாக்கியிருந் தமை குறிப்பிடத் தக்கதாகும். உலகத் தமிழ் நாடக விழாவில் நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் பெற்ற வாய்ப்பின் பின்னணியில் பின்வரும் விடயம் அமைந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

பொகவந்தலாவ பிரதேசத்தில் நாடகத் துறையின் வாயிலாக கருத்தியல் பரப்புதல் சிறப்பிடம் பெறு கின்றது. இப்பிரதேச நாடக செயற்பாட்டாளர் கள் மக்கள் "களரி" இயக்கத்துடன் இணைந்து நாடக முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளில் பின்னணியில் பொன் பிரபாகரன், பிரேம்குமார் ஆகியோரது பங்குபற்றல் குறிப்பிடத்தக்கது. மேலும் இத்துறைதொடர்பில் ஆய்வுகளிலும் ஆவணப்படுத்தும் முயற்சிலும் இவர்களது பங்களிப்பு குறிப்பிடத் தக்கது

கொட்டகலை காளிதாஸ் இத்துறையில் முழுநேர செயற்பாட்டாளராக விளங்குவது தேசிய அமைப்புகளுடன் இணைந்து சமகாலத்தில் பங்களிப்பு செய்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எட்டியாந்தோட்டை கருணாகரன் சமூக மாற்றத்துக்கான முனைப்பு செயற்பாட்டாளராக இனங்காணப் பட்டவராகிறார். இவர் கருத்தியலை பரப்புவதற்கு பிரதான ஊடக மாக நாடகத் துறையை பயன்படுத்துகிறார். பாடசாலை மாணவர்களுக்கு முற்போக்கான சிந்தனையை ஏற்படுத்துவ தோடு நாடகத்துறையில் இளந்தலைமுறையினரை நெறிப்படுத்தும் ஒருவராக திகழ்வது இவரது சிறப்பம்சமாகும்.

தொலைக்காட்சி நாடகங்கள் அவ்வப்போது உருவாகி யுள்ளன. பிரபலமாக பேசப்பட்ட "மலையோரம் வீசும் காற்று" உருவாக்கத்தில் "பசியாவரம்" கே.கோவிந்தராஜ் அவர்களது பணி சிறப்பானது. அண்மைகாலங்களில் "காவேரி" "பாட்டி சொன்ன கதை" போன்ற தொலைக்காட்சி நாடகங்கள் குறித்த கவனமும் இன்றியமையாததாகும்.

வானொலி நாடகங்கள் பி.நல்லுசாமி, புசல்லாவை நீ.தர்மலிங்கம், ஆகியோரது பங்களிப்பு விரிந்த பார்வைக்குட் பட்டதாகும். இலங்கை ஒலிப்பரப்பு கூட்டுத்தாபன மலையக சேவை (வானொலி) பல நாடகங்களை ஒலி பரப்பியுள்ளது. என்.எஸ்.எம்.இராமையா, நாடகத்துறையிலும் பங்களிப்பு செய்துள்ளார். இவரது "ஒரு மின்னல்" நாடகம் வானொலியி லும், மேடையிலும் களம் கண்டுள்ளது.

அண்மைக்காலமாக நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் செயற்பாட்டாளர்களின் இத்துறை தொடர்பான ஆர்வமிக்க செயற்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

பிரான்சிலிருந்த திரு.எம்.அரியநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "உடல்" இதழில் அ.லெட்சுமணன் எழுதிய "காமன் கூத்து" பன்முக நோக்கில் எனும் தலைப்பில் வெளி யான கட்டுரையின் தாக்கமாகவே இவ் அமைப்பினருக்கு இவ் வாய்ப்பு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இவ் அமைப்பின் முக்கிய பங்காளராக அமரர் ந.சாம்பசிவமூர்த்தி செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கூத்துக்களை அரங்கிற்கு கொண்டு வரும் நிலைக் குறித்து வேறுப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. கற்கை நெறியாக கூத்து பரிணாமம் பெற்றுள்ள நிலையில் மேடைவடிவத்திற்கு கூத்தை மாற்றியமைத்தல் அவசியமானதென பலரும் கருத்துக்களை முன்வைப்பார்கள். திருச்செந்தூரன், வி.டி.தர்மலிங்கம், ஆகியோர் மலையக கூத்துக்களை மேடைவடிவத்திற்கு கொண்டுவருவதில் ஈடுப்பட்டவர் களாவர். பின்னாளில் பாடசாலை விழாக்களில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்படு கிறது. மேலும் தமிழத்மொழித்தினப் போட்டிகளில் மாகாண மட்டத்தில் மாத்திரம் வரையறுத்து போட்டி நிகழ்வாக நடாத்தப்பட்டது.

பின்னாளில் ஆசிரியர் பயிற்சி நெறி கூடங்கள், ஆசிரியர் பயிற்சி கலாசாலை,கல்வியற் கல்லூரி ஆகியவற்றில் மலையக கூத்துக்களை மேடை வடிவத்திற்கு கொண்டும் செயற்பாடு முனைப்பு பெறுகிறது. இம் முயற்சியில் பிரான்ஸிஸ் ஹெலன்,வே. இராமர், நா. சாம்பசிவமூர்த்தி, பொன் பிரபா கரன், பிரேம்குமார், ஆகியோரின் பங்களிப்பு கவனிக்கத் தக்கது. இச் செயற்பாடுகளுக்கு பின்னணியில் சு. முரளிதரன், வ. செல்வராஜா ஆகிரியோரது பங்களிப்பு அமைந்துள்ளது. அண்மைக்காலமாக இவ் வடிவமைப்பில் "பொன்னர் சங்கர்" கூத்தை வடிவமைப்பதில் வேலாயுதம் ஸ்ரீகனேசின் பங்களிப்பு சிறப்பானதாகும். செம்மொழி மாநாட்டில் மலையக கலைஞர் ஹெலன் தலைமையில் காமன்கூத்தை அரங்கேற்றம் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். மலையக முக்கூத்துக்களை யும் அரங்கமயப்படுத்தும் முனைப்பில் பலர் ஈடுப்படுகின்ற நிலையில் அதனை ஆய்வுக்குட்படுத்தியும், ஆவணப்படுத்தும் பலரது பணி குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களால் போற்றப்பட்ட மரபு நாடக வடிவங்களை ஆவணப்படுத்தும், ஆய்வுக்குட்படுத்தும் பணி காலத்தின் அவசிய தேவையாகும். மு. சிவலிங்கம் அவரது மலையக நாட்டார் தொகுப்பு நூலில் அப்பணியை ஆற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. "பவளக்கொடி" தொடர்பாக தவச்செல்வத்தினின் பார்வை குறிப்பிடத்தக்கது. இவ்வாறே வே. இராமனுடைய எழுத்துக்களிலும் அதனை காண முடிகிறது.

நாடகத்துறை தொடர்பில் சு. முரளிதரன், ஜெ. சற்குருநாதன், சுப்பையா இராஜசேகரன், மத்தளை கார்த்திக்கேசு, மாத்தளை வடிவேலன், அந்தனி ஜீவா, சிவ இராஜேந்திரன் (நேர்காணல்), இல – நாகலிங்கம், ராஜ்சிவா, அ. லெட்சுமணன், ஆ. முத்தையா மாஸ்டர், மல்லிகை சி. குமார், விஜேயகோபால், ஒ.ஏ. இராமையா அகியோரது எழுத்துருவாக்கம் இத்துறை தொடர்பிலான பதிவுகளாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்துறை தொடர்பான ஆவணப்படுத்தல் செயற்பாட்டு தூண்டலில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு – 2011 (சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்), கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடாத்திய உலகத்தமிழ் இலக்கிய விழா – 2012 ஆகிய விழாக்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இம் மாநாடுகளில் இத்துறையோடு தொடர்புபட்ட கட்டுரைகளை முன்வைத்தவர்களில் மு. சிவலிங்கம், பொன் பிரபாகரன், அ. லெட்சுமனன், இரா.நித்தியானந்தன் ஆகியோரது பணி கவனத்திற்குரியதாகும்.

அண்மையில் நடந்த இலக்கிய சந்திப்பு நிகழ்வில் பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற அரங்கியல் ஆய்வரங்கில் மலையக நாடகங்களின் முக்கியத்துவம் குறித்த தலைமையுரையும், சிரேஷ்ட விரிவுரையாளர் சந்திரகுமார் "மலையக நவீன நாடகங்கள் குறித்த பார்வையும்" அ. லெட்சுமணன் "மலையக நாடகங் களின் பிற்புலம் குறித்த பார்வையும்" அரங்கின் கவனத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இவை சர்வதேச அரங்குகளிலே முன்வைக்கப்பட்ட பதிவுகள் என்ற வகையில் சிறப்பிடம் பெறுகிறது.

உதயம் நிறுவனம் வெளியிட்ட "இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும்" என்ற நூலின் உள்ளடக்க கட்டுரைகளும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். அண்மைக்காலமாக தினக்குரல் மலையக பார்வையில் மலையக நாடக பாரம்பரியம் தொடர்பில் யோகேஷன் பதிவுகளை ஆவணப்படுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. மலையக தமிழாராய்ச்சி மாநாட்டு ஆய்வு அரங்குகளில் மலையக அரங்கியல் தொடர்பான ஆய்வுரைகளின் பதிவுகளும் முக்கிய ஆவணமாகும்.

## முடிவுரை

ஈழத்து நாடகத்துறையில் மலையகம் காத்திர பங்காற்றியுள்ளது. அப் பங்களிப்பு குறித்து ஆவணப்படுத்தாமை, ஆய்வுக்குட்பட்ட ஆய்வாளர்கள் அப் பங்களிப்புகளை அறியாமை, அறிய முற்படாமை, அறிய ஆவல் இல்லாமை அதனை ஒருபொருட்டாக எண்ணாமை போன்ற காரணங்கள் ஈழத்து நாடக வரலாற்றில் மலையக நாடகத்துறைக்கு பெரும் சவாலாக அமைகிறது. இத் துறையில் ஓரங்கட்டப்பட்ட நிலையில் மலையக நாடகத்துறை முயற்சிகள் கையாளப்பட்டுள்ளமை அறிய முடிகிறது. மலையக நாடக பாரம்பரியம் இரு நூறு வருட காலத்திற்கு முற்பட்டது. தென்னிந்தியாவின் பூர்வீகத்தின் இணைப்பிற்குறிப்பட்டது. தொப்புள்கொடி உறவுக்கு சமமானது.

புலம்பெயர்வின் பின் இந்த சூழல் தந்த படிப்பினைக்கு அமைவாக புதிய கலாசாரத்துடன் இவ் அரங்கியல் முயற்சிகள் கையாளப்பட்டு வந்துள்ளன. இவ் அரங்கியலில் கூத்து வடிவங்கள் கூட ஏரெடுக்க படாத நிலையில் கால மாற்றம் தக்க வாதங்களினால் அதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே மலையக நாடக பாரம்பரியம் குறித்தும் ஓரங்கட்டியவர்கள் இன்று ஓரளவாவது கவனத்தை செலுத்துகின்ற தன்மைகளை அவதானிக்கமுடிகிறது. நாடகம் கருத்தியல் பரப்புதலுக்கான சிறந்த ஊடகமாக திகழ்கிறது. கூட்டு முயற்சியில் அணி சேர்ந்து இயங்கும் துறையாக அமைவதால் இயக்க செயற்பாடுகளுக்கு காத்திரத்தை வழங்குவதில் முக்கியத்துவம் பெறுகிறது.


ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தை அதன் மரபு சார்ந்த கலைகளின் வரலாறே நிர்ணயிக்கிறது. அதுவே மனித சமூகத்தின் வரலாறுமாகும் என்ற "உடல்" இதழின் கூற்றுக்கு அமைய மலையக தமிழர்களின் வரலாற்றை காத்திரப்படுத்துவதற்கு இச்சமூகம் சார் கலைப்பண்பாட்டு புரிதலை சரியான வகையில் ஆவணப்படுத்தவேண்டியது காலத்தின் நிர்பந்தமும் ஆகும். அந்த வகையில் மலையக நாடகத்துறை பங்களிப்பு குறித்த ஆவணப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் சமகால பிரச்சினைகளை வெளிப்படுத்தியும் அவற்றுக்கான தீர்வு நோக்கிய சிந்தனையை பரப்புவதற்கு இத்துறையை பிரயோகத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். வாழ்வியலையும் ஆவணப்படுத்தும் வகையில் இத்துறையை பயன்படுத்துவதற்கு இத்துறை செயற்பாட்டாளர்கள் உணரவேண்டியதும் அவசிய தேவையாகும்.

1. நாடகத்துறை தொடர்பான ஆளுமைகள், பங்களிப்பு, நுட்பமுறைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
2. நாடகங்கள் ஊடாக ஏற்படுத்திய கருத்தியல் தொடர்பில் ஆராய்தல்.
3. நாடகப்பாடல்களை ஆவணப்படுத்தல் அதன் உட் கருத்துகளை வெளிப்படுத்தல்.
4. நாடகங்களை நூலுருவில் ஆவணப்படுத்துவதோடு மீளவும் மேடையேற்றம் செய்தல்.
5. நாடகங்கள் தொடர்பில் விரிவான கலந்துரை யாடல்களை மேற்கொள்ளல்.
6. தேசிய, சர்வதேசிய வளர்ச்சிப் போக்குடன் ஒப்பிட்டு மலையக நாடகங்களின் போக்கினை கொண்டுச்செல்லல்.
7. பயில் நிலைக்குரிய நாடகக் களங்களை உருவாக்குதல்.

போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு முன்னகர்த்துவது இத்துறைக்கு ஆற்றுகின்ற பணியாக அமையும்.

மலையகத்தில் ஆங்காங்கே பல பகுதிகளில் இத்துறை ஆய்வாளர்கள் செயற்படுகின்ற போதும் மாறுப்பட்ட கருத்துக்களுக்கு அப்பால்சில குறுகிய வட்ட மனப்பாங்குகள் விரிசலை ஏற்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது. அச் சிந்தனைகளை உடைத்தெறிந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மலையக நாடகத்துறைக்கு ஆற்றுகின்ற பெரும் பங்களிப்பாக அமையும். இதனூடான கருத்து பரிமாற்றல்களுடன், நுட்பங்கள், விடயங்கள், குறித்த புரிதலையும் ஏற்படுத்த முடியும். ஒன்றிணைந்த கலந்துரையாடல் ஊடாகவும் மலையக நாடகத்துறையை காத்திரத்துடன் முன்னகர்த்த முடியும் என்பது திண்ணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கைநாட்டு

சூரன். ஏ. ரவிவர்மா

பூவரசடி என்ற அந்தக் கிராமத்தில் உள்ள அனைவரும் கறுத்தானின் வீட்டில் குழுமி இருந்தனர். அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர். பூவரசடியின் நல்ல காரியங்கள் அனைத்தும் கறுத்தானின் வீட்டில் தான் அறிமுகமாகின. கறுத்தானின் அயராத முயற்சியினால்தான் கிராமத்து மக்கள் அனைவரும் தலை நிமிந்து நிற்கின்றனர். பூவரசடியைப் பற்றி பத்திரிகைகளில் செய்திகளும் படங்களும் பிரசுரமாவதற்கு கறுத்தானின் சிந்தனைதான் முக்கிய காரணம்.

சுமார் முப்பது குடும்பங்கள் வசிக்கும் அந்தக் கிராமத் தின் தலைவராக கறுத்தானையே அனைவரும் கருதுகிறார்கள். பூவரச மரங்கள் சூழ இருப்பதால் அந்தக்கிராமத்தை பூவரசடி என அழைக்கிறார்கள். ஆனால்,ஒரு கிராமத்துக்குரிய அடிப்படை வசதிகள் எவையும் அங்கு இல்லை. அங்குள்ள மக்கள் அனைவரும் கூலி வேலை செய்கிறார்கள். அங்குள்ளவர்கள் சிறு வயதிலேயே கூலி வேலைக்குப் போவதால் கல்வியைப்பற்றிய அக்கறை அவர்களுக்கு இருக்கவில்லை. படிக்கவேண்டும் என்ற ஆர்வம், படிக்கவில்லை என்ற கவலை எதுவுமே அவர்களுக்கு இல்லை.

படித்தவர்களுக்குக் கிடைக்கும் மதிப்பையும் மரியா தையையும் கண்ட கறுத்தான் தனது மகனை கூலி வேலைக்கு விடாமல் அருகில் உள்ள கிராமத்துப் பாடசாலைக்கு அனுப் பினார். தனது வயதுச் சிறுவர்கள் அனைவரும் கூலி வேலைக்குப் போக தான் மட்டும் படிக்கப்போவதை அவமானமாகக் கருதி னான் கறுத்தானின் மகன் கந்தன். பாடசாலையில் அவனை யாரும் மனிதனாகக் கருதவில்லை. அவனுடைய ஊரைப் பற்றியும் அவனுடைய சமூகத்தைப் பற்றியும் தரக் குறைவாகக் கதைத் தார்கள். கறுத்தான், கந்தன் என்ற பெயர்களைக் கேவலப்படுத்தி னார்கள். ஆசிரியர்களும் கந்தன் மீது அக்கறை காட்டவில்லை.

பாடசாலை வாழ்க்கை நரகலோகம் போல இருந்தது பாடசாலைக்குச் செல்லும் போதும் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும்போதும் அழுதழுது அவனது கண்கள் சிவந்திருக்கும். கந்தன்படும் துயரத்தைக் கண்டு தாயார் மனம் வெதும்பினார் கந்தனைப் படிக்கவிட வேண்டாம். கூலி வேலைக்கு விடும்படி கணவன் கறுத்தானிடம் கெஞ்சினாள் அவளது கெஞ்சல்களுக்கு கறுத்தானின் மனம் இரங்கவில்லை. விருப்பம் இல்லாமல் பாடசாலைக்குச் செல்வதால் கந்தனால் படிப்பில் சரியாகக் கவனம் செலுத்த முடியவில்லை. பரீட்சையில் கந்தன் எழுதிய விடைகள் தற்செயலாகச் சரியானதால் எல்லாப் பாடங்களிலும் பத்துக்குக் குறைவான புள்ளிகள் எடுத்து வகுப்பில் கடைசிப்பிள்ளையானான்.

தன்னால் படிக்க முடியவில்லை என்று கறுத்தான் கவலைப்படவில்லை. இரண்டாம் தவணையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டது. பரீட்சையில் புள்ளிகள் அதிகமாகப் பெற்றான். மூன்றாம் தவணையில் அதிசயம் நிகழ்ந்தது. பன்னிரண்டாம் பிள்ளையான கந்தன் வகுப்பேற்றம் செய்யப் பட்டான். கந்தனால் நம்பமுடியவில்லை. தான் எதிர்பார்த்தது நடந்து விட்டதென தகப்பன் கறுத்தான் சந்தோஷப் பட்டான். புலமைப்பரிசில் பரீட்சையில் கந்தன் சித்தியடைந்தபோது அவனுடைய படத்துடன் பூவரசடி கிராமத்தைப் பற்றிய செய்திகள் ஊடகங்களில் இடம் பிடித்தன. சின்ன வயதிலேயே கந்தனின் உயர் நிலையை எண்ணி வியந்த பூவரசடிக் கிராமத்தில் உள்ளவர்கள் தமது பிள்ளைகளையும் கூலி வேலைக்கு அனுப்பாது பாட சாலைக்கு அனுப்பினார்கள். இப்போது பூவரசடி கிராமத்துச் சிறுவர்கள் யாருமே கூலி வேலைக்குச் செல்வதில்லை.

கந்தனைப் பார்த்து ஏளனம் செய்த மாணவர்களும் அலட்சியம் செய்த ஆசிரியர்களும் அவனுடைய திறமையைப் பார்த்து அதிசயித்தனர். கந்தனின் பல்கலைக்கழகப் பிரவேசம் அந்த ஊருக்கு புதிய வெளிச்சத்தைக் கொடுத்தது. கந்தனைத் தொடர்ந்து பூவரசடி கிராமச் சிறுவர்கள் படிப்பிலும் விளையாட்டிலும் சாதனை செய்தனர்.

கந்தனுக்கு வேலை கிடைத்ததால் பூவரசடிக் கிராமம் மகிழ்ச்சியில் திளைத்தது. கந்தனை வழி அனுப்புவதற்காக அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் அங்கு கூடியிருக்கின்றனர். அழகான சற்று விலை உயர்ந்த பேனையை கந்தனிடம் கொடுத்த கறுத்தான், அந்தப் பேனையால் முதன் முதலில் கையெழுத்திட வேண்டும் எனக் கூறினான். கையெழுத்து வைக்கத் தெரியாத பரம்பரை என்ற அவப்பெயரை நீக்கிய கந்தன் தகப்பனின் வேண்டுகோளை நிறைவேற்றுவதாக உறுதியளித்தான்.

உயர் அதிகாரியின் முன்னால் அமர்ந்திருந்தான் கந்தன். அவன் கொடுத்த ஆவணங்களைப் பார்த்தபின் சில பத்திரங்களைக் கந்தனிடம் கொடுத்தார். தகப்பன் கொடுத்த புதிய பேனையினால் படிவங்களை நிரப்பிய கந்தன், கையெழுத்திடும் போது கண்கலங்கினான். கந்தனைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருந்த அந்த அதிகாரி அவனுக்கு வாழ்த்துத் தெரிவித்து சில ஆலோசனைகளும் கூறினார். கந்தனை அழைத்துச்சென்ற அந்த உயர் அதிகாரி அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு அவனை அறிமுகப்படுத்தினார். அறி முகப்படலம் முடிந்தபின்னர் கந்தனின் இருக்கையில் அவனை இருத்திவிட்டு அவர் தனது அறைக்குச் சென்றுவிட்டார்.

அந்த அலுவலகத்துக்குப் புதியவரவான கந்தனுடன் அந்த அறையில் இருந்தவர்கள் கதைத்துக் கொண்டிருந்த போது உள்ளே வந்த ஒருவர்,

“சேர். நீங்கள் தானே புதிசா வந்தவர்” என கந்தனைப் பார்த்துக் கேட்டார். கந்தன் தலையாட்டினார்.

“சேர் .என்னோடை ஒருக்கா காட் ரூம் வரை வர முடியுமா?” என கந்தனிடம் கேட்டுவிட்டுப் பதிலை எதிர் பார்க்காது சென்றான். கந்தன் அவரைப் பின்தொடர்ந்து சென்றார் அலுவலக வாயிலுக்கு. அவர் அங்குள்ள சுவரில் பொருத்தப்பட்டிருந்த சிறு பெட்டியைக் காட்டி.

“சேர் இதுதான் பிங்கர் பிரின்ற் மெஷின். நீங்கள் உள்ளுக்கு வரேக்கையும் வெளியிலை போகேக்கையும் உங்கடை பெருவிரலை இதிலை பதியவேணும். இதை வைச்சுத்தான் ரிஜிஸ்ரர் மாக் பண்ணுவினம். நேரம் பிந்தினால் நோபே விழும்” எனக்கூறிக் கொண்டே அதில் இலக்கங்களை தெரிவு செய்து கந்தனின் வலது கை பெரு விரலையும் இடது கை பெருவிரலை யும் மூன்று முறை பதிந்தார். கையெழுத்தை விடப் பெறுமதி யானது கைநாட்டுத்தான் என்பதை இலத்திரனியல் நிரூபித்துள்ளதை கந்தனால் உணர முடிந்தது.

கந்தன் தான் வேலை செய்யும் பகுதிக்குப் போகும் போது இடது கையால் பொக்கறைத் தடவிப்பார்த்தார். கையெழுத்து வைப்பதற்காகத் தகப்பன் கொடுத்த பேனை முள்ளாகக் குத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரியக்காவின் கடைசி மகளுக்கு இண்டைக்கு இரண்டாந் தண்ணி வார்வையாம்.

மிகப் பெரிசாக அட்டகாசம் பண்ணாமல் வீட்டிலேயே சொந்தக்காரரோடை அளவான கொண்டாட்டம் எண்டு கேள்வி. சுற்றுவட்டாரத்திலை உள்ள எங்கடை காதுகளிலையும் சினிமாப் பாட்டுகள் வந்து விழுகுது.

ஈஸ்வரியக்கா இப்ப இருக்கிற வசதியான நிலைமைக்கு பெரியளவிலை டீங்காகக் கல்யாண மண்டபத்திலை செய்திருக்கலாம். இரண்டு பெடியங்களும் ஜேர்மனியிலை. இவள் சாமத்தியப்பட்ட ஒருத்திதான் பெம்பிளைப் பிள்ளை.

ஓரளவுக்கு நெருக்கமான ஆக்களுக்குச் சொல்லிச் செய்கிறா போல கிடக்கு. ஆனால் எனக்குச் சொல்லேல்லை. இப்ப எனக்கும் அவவுக்கும் சரியில்லை.

நான் ஈஸ்வரியக்காவுக்கு ஒண்டுவிட்ட தங்கச்சி. ஒருநாள் வீட்டை வந்தா...

"எடி பிள்ளை சந்திரா... உன்னட்டை ஒரு பெரிய உதவி கேக்க வந்திருக்கிறன். மறுத்துப்போடாதை பிள்ளை. என்ரை மூத்தவனுக்கு ஜேர்மனிக்குப் போறதுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு.

"ஆ... சொல்லுங்கோ பெரியக்கா"

பேரின்ரை தாய்மாரும் கூடிப்பிறந்ததுகள். என்ன ஒற்றுமையா வாழ்ந்ததுகள். அவள் உதவி செய்யிறதுக்குச் சாக்குப்போக்குச் சொல்லி மறுத்துப்போட்டாள். இந்த நேரத்திலை கை கொடுத்து தூக்கிவிடாத உவளோடை இனிச் சீவியகாலத்துக்கு சகவாசம் வேண்டாமெண்டு முடிவெடுத்துப் போட்டன். நீ... நீதான். இந்த உதவியை வாழ்நாளிலை மறக்கமாட்டன்."

"சரி பெரியக்கா... போய் அலுவலைப் பாருங்கோ..."

நகை வாங்கி மூண்டு வரியமாயிட்டுது. மூத்தவன் போய் ஒண்டரை வருஷத்திலை அடுத்தவனுக்குக் கிடைச்ச சந்தர்ப்பத்தையும் விடக்கூடாதெண்டு அவனையும் ஜேர்மனிக்குக் கூப்பிட்டாச்சு. தாய்... அதுதான் எங்கடை பெரியம்மா படுக்கையிலை இருக்கிறா ஏதும் ஒண்டு நடந்திட்டா சவத்தை வச்சு அழுகிறதுக்கு வீடு வாசல் வசதியில்லையெண்டு வீட்டை நீட்டி அகட்டி பெருப்பிச்சு பாத்துறூமும் கட்டினா... பிறகு...

"சந்திரா... டியே சந்திரா... "

கேற்றுக்கு வெளியிலே யாரோ கூப்பிட்டுக் கேட்க என்ரை நினைவுகள் தடைப்படுகுது.

வெளியே போகிறன். இரண்டு பிள்ளையளுடனும் மணிமேகலை டாம்பீகமாக வெளிக்கிட்டபடி... மணிமேகலையும் நானும் ஒண்டுவிட்ட சகோதரங்கள் எண்டாலும் ஒண்டாகப் படிச்ச ஒரு வயதுக்காரர் எண்ட படியால் சிநேகிதிகள் மாதிரித் தான்.

# கைம்மா(ற்)று

கொற்றை பி. கிருஷ்ணானந்தன்

அதுதான் பிள்ளை ஒரு ஆறுலட்சம் ரூபாக் காசு மாறித்தந்தியெண்டால் பெடியன் போன உடனே திருப்பித் தந்திடுவன்:

"பெரியக்கா எங்களிட்டை உந்தளவுக்கு காசு கையிலை எந்தக் காலத்திலை இருந்தது. நீங்கள் இப்பிடிக் கேக்கிறியள்...?"

"அது எனக்குத் தெரியுந்தானேடா. காணி பூமி, நகையெண்டு உன்னட்டை இருக்கே தவிர இவ்வளவு காசு இருக்காது. ஒரு பதினாலு பதினைஞ்சு பவுண் நகை தந்தியெண்டால் கெதியிலை எடுத்துத் தந்திடுவன்"

எனக்குத் திடுக்காட்டமாக இருந்தது. எண்டாலும் அவவின்ரை நிலைமை அப்பிடி. எங்களெல்லாருக்கும் அவதான் பெரியக்கா.

வீட்டுக்குப் பின்னாலை வாழைக்குத் தண்ணி மாறிக்கொண்டு நிண்ட என்ரை புருஷனட்டை போய் ஒரு கதை கேட்டுப்போட்டு வந்து என்ரை மார்புப் பதக்கத்தோடை சேர்ந்த இரட்டைப்பட்டுச் சங்கிலி நாலு காப்பு, ஒரு சின்னச் சங்கிலி எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு வந்து குடுத்தன்..

ஈஸ்வரியக்காவுக்கு கண்கலங்கிவிட்டுது. என்ரை இரண்டு கையையும் பிடிச்சுக்கொண்டு சொன்னா...

"பிள்ளை உன்னட்டை வரமுந்தி இவள் மணிமேதலையிட்டைத்தான் போய் உதவி கேட்டனான். அவளும் உன்னைப்போலதானே ஒரு தங்கச்சி. எங்கடை மூண்டு

"சாமத்திய வீட்டாலை வாறன். என்னடி உன்னையும் உன்ரை ஆளையும் பிள்ளையளையும் அங்கே காணேல்லை... உனக்குச் சொல்லேல்லையாம்... என்ன..."

நான் மௌனம் சாதிக்கிறன்.

"எல்லாம் நான் அறிஞ்சுகொண்டுதான் இருக்கிறன். நீ எனக்கு ஒண்டுமே சொல்லுறேல்லை. பெரியவன் வெளிநாட்டுக்குப் போகிறதுக்கு நீ நகை கொடுத்தனியாம். பிறகு போய் இண்டைக்கு நகையளை எடுத்துத் தந்தால்தான் எழும்பிப் போவன் எண்டு விடாப்பிடியாய் நிண்டனியாம். அடுத்தநாளே நகையளை எடுத்துக்கொண்டு வந்து தந்திட்டாவாம். அதோடை உங்கடை உறவு முறிஞ்சுபோச்சாம்"


"டியே...விசர்க்கதை கதையாதை. கேட்டுக் கேட்டுக் களைச்சு மூண்டு வரியத்தாலைதான் அப்பிடிப் போய் நிண்டனான்.

"ஓ... தெரியும். உன்னட்டை வரமுந்தி என்னட்டைத் தான் வந்து நிண்டு அழுதவா. நான் குடுக்கேல்லை. கொஞ்ச நாளாக மூஞ்சையை நீட்டிக்கொண்டு திரிஞ்சவா... பிறகு எல்லாம் சரி... பெடியளை ரியூசனுக்கு அனுப்பவேணுமடி. நான் பிறகு கதைக்கிறன்."

அவள் அவசரப்படுகிறாள். அவர்களை அனுப்பி விட்டு கேற்றைச் சாத்திவிட்டுத் திரும்பும்போது எனக்கெதிரே வந்த என்ரை புருஷனின் முகத்தைப் பார்க்கிறதுக்குச் சக்தியில்லாமல் தலையைக் குனியிறன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐரோப்பியப் பயணம் கற்றுத் தரும் பாடங்கள்

அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்

அண்மையில் எட்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தேன். வாசகருக்குப் பயனுள்ளவற்றைப் பகிர விரும்புகின்றேன்.

**அழிந்துபோகாத ஆன்மீகம்:**

போர்த்துக்கல்லில் லிஸ்பன் நகரில் புனித அந்தோனியார் பிறந்த இடத்தில் ஆலயம் சென்றிருந்தேன். அங்கிருந்து அந்நாட்டிலேயே உள்ள பத்திமா மாதா கோயிலுக்குச் சென்றிருந்தேன். அதன் பின்னர் ஸ்பெயின் நாட்டில் இயேசுவின் நெருங்கிய சீடர் யாகப்பர் கல்லறையுள்ள கோயிலுக்குச் சென்றிருந்தேன். இவ்வாலயங்களுக்கு சிறுவர், இளைஞர், வளர்ந்தோர், வயோதிபர் எனப் பலரும் துறவிகளும் நாள் முழுவதும் வந்து செல்கின்றனர். குறிப்பாக ஸ்பெயின் நாட்டிலுள்ள திருத்தலத்திற்குப் பலர் நூற்றுக்கணக்கான மைல்கள் கால்நடையாக திருயாத்திரை வருவதைப் பார்த்தேன். அதுவும் இளைஞர்கள் கூட்டமாகச் சயிக்கிளில் வந்து கொண்டிருந்தார்கள். இளம்பெண்கள் கால்நடையாக வந்து கொண்டிருந்தார்கள். தள்ளாத வயதிலும் வயோதிபர்கள் கால்நடையாக வருவதைப் பார்க்க கண்கொள்ளாக் காட்சி. பிரான்சின் லியோன் நகரில் மாதா் கோயிலில் இளைஞர்கள் யுவதிகள் நிலத்திலிருந்து பிரார்த்திப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். ஒரு சாரார் கடவுளையும் கோயிலையும் கைவிட்டுவருகின்றனர். ஆலயங்கள் வேறு தேவைகளுக்காக விற்கப்படுகின்றன. மறு கரையில் ஆன்மீகம் அழியாது தொடர்கின்றது என்பதைக் கண்டேன்.

**தரும சிந்தனை:**

இந்நகரங்களில் இரண்டு பெட்டிகள் அருகருகே காணப்படுகின்றன. இவை தருமப்பெட்டிகள் (charity boxes) எனப்படுகின்றன. தமக்கு இனித் தேவையில்லையெனக் கருதப்படும் அல்லது ஏழைகளுக்குக் கொடுக்கக் எனக் கருதப்படும் உடைகளை ஒரு பெட்டியிலும், சப்பாத்துகள் இன்னொரு பெட்டியிலும் போடுவார்கள். இவை நன்கு சுத்தம் செய்யப்பட்ட பின்னரே மக்கள் போடுகின்றனர். இவற்றைக் கறிற்றாஸ் நிறுவனம் சேகரித்து வறிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றது. தருமக் கடைகள் (charity shop) அல்லது இம்மானுவேல் (Emmanuel) எனப்படும் கடைகள் ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் இன்னொரு நல்ல அம்சம். வீட்டில் அவசியமற்றதாக உள்ள பொருள்களுள் தாமாகக் கொண்டு வரக்கூடியவற்றைத் தமது வாகனத்தில் கொண்டு வந்து ஒப்படைப்பர். வாகனத்தில் கொண்டு வர முடியாதவை பற்றியும் அவற்றைக் கொண்டு செல்ல எத்தகைய வாகனம் தேவைப்படும் என்றும் இக்கடை களுக்கு அறிவிப்பர். அவர்கள் வந்து அவற்றை ஏற்றிச் சென்று இக்கடைகளில் குறைந்த விலையில் விற்பர். அதில் சேகரிக்கப்படும் பணம் ஏழைகளின் நலன்களுக் காகப் பயன்படுத்தப்படும். திருத்த வேண்டிய பொருட்களை அங்குள்ள பட்டறையில் வைக்கும்போது, தொண்டர்கள் வந்து இலவசமாகத் திருத்திக்கொடுத்துவிட்டுச் செல்வர். இக்கடைகளில் தளபாடங்கள், சமையலறைப் பொருள்கள், ஆடைகள், கைக்கடிகாரங்கள், சூட்கேஸ்கள், பைகள், ஓவியங்கள், புத்தகங்கள், சமயப்பொருட்கள் எனப் பல மலிவு விலையில் விற்பனையாகின்றன. வெள்ளையர்கள் இவை பழையன என்று கருதாது, தமது பாவனைக்காக அவற்றை வாங்கிச் செல்கின்றனர். பாவித்த நூல்களை வாங்கிச் செல்கின்றனர். இங்கு விற்கப்படும் பொருட்கள் நல்ல நிலையிலுள்ளவையாகவே காணப்படுகின்றமை முக்கிய அம்சம். பழசென்றால் குப்பையில் போடப்பட வேண்டும், பிறர் பாவித்த பழசுகளைப் பயன்படுத்துவது வெட்கம், என்று கருதுகின்றவர்கள் நம் மக்கள் தமது கண்ணோட்டத்தை மாற்றவேண்டும். பழசென்றாலும் என் பிள்ளை, பேரப் பிள்ளைக்கு உதவும் என்ற கற்பனையில் சேர்த்து வைத்து அழியவிடும் சுயநலம் நிறைந்த, மற்றும் தர்ம சிந்தனையற்ற நம்மவர்கள் அவர்களைப் பின்பற்றுவது நல்லது.

**தமிழர் பண்பாடு:**

சுவிற்சலாந்திலுள்ள ஒரு கத்தோலிக்க ஆலயத்தினுள்ளே இங்கு கதைக்க வேண்டாம் என்று தமிழில் எழுதியிருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். இங்கு கிறிஸ்தவ மற்றும் இந்துத் தமிழர்கள் செல்வதுண்டு. ஆயத்தில் நாம் அமைதி பேணிப் பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும், பிறரது வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் விளைவிக்கக்கூடாது என்பதை நம் தமிழர்கள் கற்கவேண்டும் என்ற செய்தியை அது சொல்லி நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அழகியலுணர்வு:**

ஜேர்மனியிலுள்ள ஆன்ஸ்பேர்க்கில் மக்கள் ஆழமான அழகியல் உணர்வுகொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். தமது வீட்டு வளவை அழகியல் தன்மையோடு வடிவமைப்புச் செய்துள்ளனர். சீமெந்தினால் அல்லது பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட விலங்குகளைச் தமது பூந்தோட்டத்தில் வைத்திருக்கின்றனர். சில இடங்களில் அவ்வாறு முழு மனித உருவத்தையே வைத்திருக்கின்றனர். அத்தோடு அழகிய பூங்கன்றுகளை பிளாஸ்ரிக் பூச்சாடிகளில் தம் வீட்டின் முன்னேயும் வீதிகளிலும் வைத்துள்ளமை ஆச்சரியமானதுதான். அங்கு வாழும் வெளிநாட்டவர்களும் ஜேர்மனியர்களின் இந்த அழகியல் தன்மையை உள்வாங்கியுள்ளனர். அவற்றை வீதியால் செல்வோர் களவெடுத்துச் செல்வதோ சேதப்படுத்துவதோ இல்லை என்பது நல்ல அம்சம். அழகிய மரங்களை வைத்து வளர்த்திருக்கிறார்கள். அழகுற அதைக் கத்தரித்து விடுகின்றார்கள். அவற்றின் எந்தக் கொப்புமோ வீதியில் இடைஞ்சலாக இருப்பதில்லை. அது மாத்திரமல்ல வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காத வண்ணம் வைத்துள்ளனர். குறுகிய வீதியில் தமது மதிலுக்கு அருகே பூங்கன்றுகள் வைத்துப் பிறருக்கு இடையூறு செய்வோர் கற்றுக்கொள்ள நிறைய இருக்கின்றது. மதிலுக்கு வெளியே போக்ன்விலா விச முள்ளும், றோசா முள்ளும், தென்னை ஈர்க்கும்... வீதியில் தொங்கிக் கொண்டிருக்கும். பாதசாரிகளையும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சயிக்கிளில் செல்வோரைக் குத்திக் காயப்படுத்தும். விபத்துக்குக் காரணமாகும். என்ன பொதுநலச் சிந்தனை கல்தோன்றி மண்தோன்றுமுன்னே தோன்றிய மூத்த நம் குடிகளுக்கு???

**பிராணிகளில் அன்பு:**

இங்குள்ளவர்கள் பிராணிகளை பாசத்தோடு பராமரிக்கின்றனர். அதற்காகப் பணம் செலவழிக்கவும் தயங்குவதில்லை. ஆன்ஸ்பேர்க்கில் பாட்டி ஒருவர் அநாதவரான பூனைகள் பலவற்றை எடுத்துவந்து அக்கறையோடு பாராமரித்து வளர்க்கின்றார். இத்தகைய இரக்கப்போக்கு தமிழர் சிலரிலும் அங்கு தொற்றிக்கொண்டது நல்ல அம்சம்.

**நீண்ட தூர பஸ்சில் கழிப்பறை:**

போர்த்துக்கலில் பத்திமா நகரிலிருந்து ஸ்பெயினுக்குச் சென்ற பஸ்சினுள்ளும், பிரான்சிலிருந்து ஜேர்மன் சென்ற பஸ்சினுள்ளும் கழிப்பிடம் காணப்பட்டது. ஒரு யூறோ நாணயத்தைப் போட்டால் அது திறக்கும். துப்பரவாகவும் இருந்தது. இது நீண்ட தூர பஸ்கள் அனைத்திலும் முக்கியமான இவ்வசதி உள்ளதாக அறிந்தேன். போக்குவரத்துத் துறையினர் நீண்ட தூர பஸ்களில் இதனைக்கொண்டிருக்க நடவடிக்கை மேற்கொண்டால் பயணிகளின் அசௌகரியங்கள் எவ்வளவு குறையும்!. பஸ் சாரதிகள் நேரத்தோடு சென்றுவிடவேண்டும் என்று கருதி குறித்த இடம் ஒன்றில் மாத்திரம் நிறுத்துவார்கள். அதுவரை பயணிகள் படும் அவஸ்தை சாரதிகள் மனதைத் தொடுவதே இல்லை. பஸ் சாரதியப் பயிற்சியின்போது பயிலுநர்கள் தம் குடும்பத்தவரோடு பஸ்ஸில் நீண்ட பயணம் செய்வதற்கு ஒழுங்கு செய்தால் சிலவேளை பயணிகளின் அசௌகரியத்தைப் புரிந்து நடக்க வாய்ப்புக் கிட்டுமா?

**கழிவகற்றல் பயிற்சி:**

ஜேர்மனியில் ஆன்ஸ்பேர்க் என்பது ஒரு குட்டிக் கிராமம். அக்கிராமத்திலுள்ள வீதிகள் குப்பைகள் ஏதுமின்றித் துப்பரவாக இருந்தது. வீதி ஓரங்களில் நூறு யாருக்கு ஒரு குப்பைத் தொட்டிகள் காணப்பட்டன. அத்தோடு பஸ் தரிப்பிடங்களிலும் குப்பை வாளிகள் வைக்கப்பட்டிருந்தன. அங்குள்ளவர்கள் குப்பைகளை குப்பை வாளிகளுக்குள் போடும் நற்பழக்கத்தைக் கொண்டுள்ளனர். அத்தோடு குப்பைகளை ஒவ்வொன்றையும் பிரித்து உரிய குப்பை வாளியில் போடுகின்றனர். இப்பழக்கம் இவர்களில் எவ்வாறு உருவாகின்றது என்பதை அறிய பிரான்சிலுள்ள என் மருமகளிடம் கேட்டேன். அவர் சொன்னார், "இது எங்களுக்கு அம்மாதான் சொல்லித் தந்தவா" என்று. நம் தாய்மாரும் ஆசிரியர்களும் இத்தகைய நற்பழக்கங்களைச் சிறுபிள்ளைகளின் மனத்தில் ஊன்றினால் எமது பொது இடங்கள் எவ்வளவு துப்பரவாக இருக்கும். யுத்த காலத்தில் யாழ் நகர்ப்பகுதியில் பிளாஸ்ரிக் குப்பை வாளிகள் வைக்கப்பட்டிருந்தன. இதனை யுனிசெவ் நிறுவனம் வைத்திருந்தது என நினைக்கின்றேன். சில தினங்களுள் இரவோடிரவாகக் களவாடப்பட்டு மறைந்து போயின. தற்போதும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தாது குப்பை வாளிகள் வைக்கப்பட்டுள்ளன. தொலைக் காட்சியில் குப்பை போடுவது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்னர் இவற்றைப் பொது இடங்களில் வைத்திருந்தால் எவ்வளவு பயனுள்ளதாக இருந்திருக்கும். குப்பை வாளிகளை வைத்தால் மட்டும்போதாது அதற்குள் எவ்வாறு பிரித்துப்போடப்படவேண்டும் என்பதையும் தொலைக்காட்சியில் விளம்பரப்படுத்தினால் எவ்வளவு நல்லது! போத்துக்கல்லில் உள்ள பற்றிமா நகரில் குப்பை வாளிகளைப் பார்த்து வியந்தேன். அவ்வளவு தரமானது விலையானது! பளபளக்கும் உருக்கால் செய்யப்பட்டது. நான் பார்த்த நாடுகளில் இங்குதான் இத்தகைய தரமான மற்றும் அழகான குப்பைத் தொட்டிகளைப் பார்த்தேன். நம்மவர்கள் தற்போதும் குப்பை வாளிகளுக்குள் போடுவதற்குப் பதிலாக கழிவுபொருட்களை வெளியே போடப்பட்டிருப்பதைக் காணும்போது அது பொது சுகாதரம் பற்றிய அறிவின்மையா, சோம்பல்தனமா, அலட்சியமா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

**விபத்துக் குறைத்தல் நடவடிக்கைகள்:**

ஐரோப்பிய நாடுகளில் வாகனத்தைத் தொடர்ச்சியாக நீண்ட தூரம் ஓட்டக்கூடாது என்பது சட்டம். பிரதான வீதியிலிருந்து பிரிந்து சற்று உள்ளே ஒரு பகுதி உண்டு. இங்கு வாகனங்கள் நிறுத்தப்படும், குளியலறை, கழிப்பிட வசதி என்பன இங்கு உண்டு. சில இடங்களில் உணவு மற்றும் தாகசாந்திக்கான கடைகளும் உண்டு. பொலிசார் திடீரென மறித்து வாகன மீற்றரில் இன்னொரு கருவியைப் பொருத்தும் போது இறுதியாக எத்தனை கிலோ மீற்றர்கள் தொடர்ச்சியாக ஓடிவந்தது என்பதைக் காண்பித்துவிடும். மிகுதியான தூரம் ஓட்டிவந்திருந்தால் கடும் குற்றமாகக் கருதப்பட்டுப் பெருந்தொகை பணம் அறவிடப்படும். காசு உழைக்கும் நோக்கோடு ஓய்வின்றி நீண்ட தூரம் ஓடும் சாரதிகளால் ஏற்படும் விபத்துகள் பலவற்றை நோக்கும் போது ஐரோப்பியர்கள் நல்ல சட்டத்தைக் கொண்டுள்ளனர் என்பது விளங்கும். எந்த வீதியில் அதன் எந்தப் பகுதியில் எத்தனை கிலோமீற்றர் வேகத்தில் செல்லவேண்டும் என்று அந்நாடுகளில் வீதியின் பல இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதை மீறிச் செல்லும்போது இரகசிய கமரா உடனே காரை அதன் இலக்கத்தோடு பட மெடுத்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மையப் பகுதிக்கு உடனே இணையத்தில் செல்ல, தண்டப்பணத் தொகை வங்கியில் கழிக்கப்பட்ட பற்றுச்சீட்டு தபாலில் வரும். பிரான்சில் என நினைக்கின்றேன். ஒரு சுரங்கப் பாதையில் 80 கிலோ மீற்றர் வேகத்தில் தான் ஓடவேண்டும். தமிழ் இளைஞன் ஒருவர் வீதியில் எவருமில்லைத்தானே என்ற நினைப்பில் 180 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடியுள்ளார். கமரா படமெடுத்து அனுப்ப, பொலிசார் வந்து அவரைக் கைதுசெய்தனர், இரண்டு வருடச் சிறைத்தண்டனையை அவர் அனுபவித்துக் கொண்டிருப்பதாகக் கூறக்கேட்டேன். சிவப்பு விளக்கு எரியும்போது வீதியைக்கடக்க எந்த வாகனம் முயன்றாலும் உடனே கமரா படமெடுத்து அனுப்பும். இதற்கு பாரிய தண்டப்பணம் செலுத்தவேண்டும். வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க இலங்கையில் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது. நமது மக்களுக்கும் கடும் தண்டனை முறையே பொருத்தம்போலத் தோன்றுகின்றது. அங்கு இலஞ்சம் வழங்கலிற்கு இடமேயில்லை. அதனால் தண்டனை முறை வெற்றியளித்து வருகின்றது.

**பயன்பாடுள்ள கருவிகள்:**

இந்நாடுகளில் பாரமான பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சிறுகருவிகளை உருவாக்கி வைத்துள்ளனர். மேசையின் இருபக்கக் கால்களுக்கிடையேயுள்ள குறுக்குப் பலகையினைக் கவ்விப் பிடிக்குமாறு அமைக்கப்பட்ட சில்லுள்ள கருவி இது. இதில் இரண்டு மேசையின் இரு குறுக்குச் சட்டத்திலும் பொருத்தப்படும். ஜேர்மனியில் ஒரு திருமண மண்டபத்தில் வேலை செய்தோர் நீண்டதும் பாரமானதுமான மேசையை நகர்த்திச்செல்வதற்கு இந்நுட்பத்தை பயன்படுத்தியதைப் பார்த்தேன். இருவரே கொண்டு செல்லக் கடினமான இம்மேசையை இக்கருவியினால் தனித்து ஒருவர் இலகுவாக நகர்த்திச் செல்ல முடிந்தது. பெருந்தெருக்களில் நூறு மீற்றர் இடைவெளியில் அவசர தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. விபத்தோ, வாகனம் பழுதோ ஏற்பட்டால் உரிய துறையினருக்கு அறிவிக்க இது பயன்படுகின்றது. அந்த இலக்கம் பிரதான பணியகத்துக்குமாத்திரம் உரியது. இதனை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது. விபத்தாயின் அறிவித்தவுடன் தீயணைப்புப் படை, அம்புலன்ஸ், பொலிசார் அவ்விடம் வந்து சேர்ந்துவிடுகின்றனர். விபத்து ஏற்பட்டால் ஏனைய வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவலம் அங்கு உண்டு என்பதை அனுபவித்தேன்.

**சிறு நூலகத் திட்டம்:**

பிரான்சில் ஆர்ஸ் என்ற இடத்தில் கத்தோலிக்கக் குருவான புனித மரிய வியன்னியின் அழியாத உடல் கொண்ட திருத்தலத்திற்குச் சென்றிருந்தோம். பார்த்து விட்டு ஒரு சிறிய பூங்காபோன்ற இடத்திலிருந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தோம். ஒரு இரும்பு அலுமாரி அப்பகுதியில் காணப்பட்டது. அதற்குள் இருந்த நூல்களை எடுத்து சிறுவரும் வளர்ந்தோரும் என வாசித்துவிட்டு வைத்துச்சென்றதைப் பார்த்து மகிழ்ந்தேன். இவர்கள் இவற்றை வாசிக்கின்றார்களே என்பதையிட்டு மகிழ்ந்தேன். அவற்றைச் சுய நலத்தோடு தம்மோடு எடுத்துச் செல்லாது அல்லது அவற்றிற்குச் சேதம் விளைவிக்காது மீண்டும் அதற்குள் வைத்துச் செல்கின்றனர். நமது பிரதேசங்களில் மக்கள் கூடும் இடங்களில் இவ்வாறு குட்டி நூல் நிலையங்களை அமைப்பது அறிவுப்பசி உள்ளவர்களுக்குத் தீனி போடுவதாக அமையும்.

**கற்கும் ஆர்வமுள்ள தமிழ் இளைஞர்கள்:**

ஒரு திருமணச் சடங்கிற்கு வந்த பல தமிழ் மாணவர்களோடு பேசும்போது பெரும்பாலானோர் பல்கலைக் கழகத்தில் கற்கின்றனர் அல்லது அதை நோக்கிக் கற்கின்றனர் என்பது தெளிவாக இருந்தது கண்டு மகிழ்ந்தேன். பலர் கல்வி கற்பதில் ஆர்வமாக உள்ளனர். பெரும்பாலான பெற்றோரும் இதற்கான வாய்ப்பு வசதிகளைக் கொடுக்கின்றனர். தமிழ்ப்பிரதேசத்தில் கல்வி பாதாளம் நோக்கிச் செல்கின்றது. வெளிநாட்டுப் பணத்தைக் குறைகூறிச் சாதிக்கப்போவது எதுவுமில்லை. வறிய மாணவர்களின் கல்விக்காகப் பலர் அங்கிருந்து உதவி செய்கின்றனர். ஆனால் மாணவர்கள் கற்க ஆவல் கொண்டிருக்க வேண்டுமே. பெருந் தவறு மாணவர்களிலேயே. எதிர்கால இலட்சியமின்றி, சிறந்த பெறுபேறுகள் கிடைக்கவேண்டும் என்ற உத்வேகமின்றி வாழும்போது எத்தனை வசதிகள் செய்து கொடுத்துத்தான் என்ன பயன். குற்றம் பல துறையினரில் காணப்படினும் மாணவர்களின் கல்வி அவர்கள் கையிலேதான் பெரிதும் தங்கியுள்ளது.

**நாட்டு அபிவிருத்தி முன்னுரிமை:**

ஹிட்லர் காலத்தில்தான் ஜேர்மனியில் சிறந்த பெருந்தெருக்கள் மற்றும் கிராமப்புற வீதிகள், பாலங்கள், பல்வேறு போக்குவரத்துச் சேவைகள் என்பன உருவாக்கப்பட்டது என்பதைக் கேள்வியுற்று ஆச்சரியப்பட்டேன். மலைகளை இணைத்துப் போடப்பட்ட பாலங்களைப் பார்க்கப் பிரமிப்பாக இருந்தது. தமிழரே தமிழரை ஆண்ட, ஆளுகின்ற இலட்சணத்தைப் பார்த்தபோது சர்வாதிகாரியான ஹிட்லர் தன் நாட்டை மேம்படுத்தச் செய்த பல விடயங்கள் அவரை வித்தியாசமாக நோக்கச் செய்தன. பிலிப்பைன்சில் சர்வாதிகாரியான மார்க்கோஸ் காலத்தில் தான் பல முன்னேற்றகரமான அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்றன. இப்ப உள்ளவர்கள் விமர்சிப்பதில் காலத்தைக் கழிக்கிறார்களேயன்றி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு எதுவும் செய்வதில்லை. நாட்டைச் சுரண்டுவதிலேயே அவர்களின் கவனம் என்று டாக்சிச் சாரதிகள் கூறக்கேட்டிருக்கின்றேன். பிரான்சில் அனுபவமுள்ள கணக்காளர் ஒருவர் கூறினார், "இங்கு ஊழல் இல்லை என்றல்ல. ஆனால் தன் நாட்டை அபிவிருத்தி செய்வேண்டும் என்பதற்கே முன்னுரிமை கொடுப்பார்கள்."

**சமூகப்பணி ஆவல்:**

குவைத் விமானம் கொழும்புக்குச் செல்வதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தைவிட நான்கு மணித்தியாலங்கள் தாமதம். குருவுக்கான றோமன் கொலர் அணிந்திருந்தேன். ஒரு இளம் பெண் முன் வாங்கில் இருந்தார். அவரோடு பேசினேன். அவர் தன் அண்ணனை ஜேர்மனியில் பார்த்துவிட்டு டெல்கி சென்றுகொண்டிருந்தார். இவர் அண்மையில் தன் சொந்த நாடான அமெரிக்காவில் தாதியர் பயிற்சி முடித்திருந்தார். அவரது பயணத்தின் நோக்கம் இந்தியா சென்று அங்குள்ள ஏழைகளுக்கு இலவச சேவை வழங்க வேண்டும் என்பதே. நமது பிரதேசத்தில் பல்கலைக் கழகப் படிப்பை முடித்துவிட்டு எந்த வேலையும் கிடைக்காத நிலையிலே தமது ஊருக்குச் சேவை செய்கின்ற சிலரைப் பார்த்திருக்கிறேன். பலருக்கு அப்படியான ஒரு எண்ணமே தோன்றுவதில்லை. நமது கல்வியின் வறுமைதான் இதற்குக் காரணமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி. ராமநாதன்

## –மறைவு –

### தர்மு ஜீவராம் பிருமிள்

'எங்கௌண்டர்" என்ற பிரிட்டிஷ் பத்திரிகையின் இலக்கியப் பகுதி ஸ்டீபன் ஸ்பெண்டரின் ஆசிரியத்துவத்தின்கீழ் இருந்த போது, 1950 வாக்கில் அது ஒரு சிறுகதைப் போட்டியை நடத்திற்று. போட்டி ஆசிய ஆப்பிரிக்க எழுத்தாளர்களுக்கு மட்டுமே நடத்தப்பட்ட ஒன்று. முதல் பரிசு நூறு பிரிட்டிஷ் பவுண்டுகள்.

போட்டிக்கு வந்து குவிந்த கதைகளுள் ஒன்று, ஒட்டப்படாத கவரினுள் புக்போஸ்ட் என்கிற "செகண்ட்கிளாஸ் ஏயர் மெயி"லில் இலங்கையின் கொழும்பிலிருந்து வந்த "The Greatest Census in the World'. அனுப்பிய ஆசிரியரினால் பாதுகாப்பாக கதையை அனுப்புமளவுக்கு கையில் சில்லரை கூட அப்போது இல்லை. காரணம், விதவை ஆகிவிட்ட சகோதரியின் குடும்பத்தைப் பேண வேண்டிய அளவுக்கு ஏறிவிட்ட சுமைதான்.

இந்தக் கதை ஏற்கனவே நிராகரிக்கப் பட்ட ஒன்று. அப்போது கதாசிரியர் வேலை செய்து கொண்டிருந்த கொழும்பு ஆங்கிலத் தினசரியின் சண்டே எடிஷனுக்காக இதே கதை கொடுக்கப்பட்டபோது, அதன் ஆசிரியர் திருப்பித் தந்துவிட்டார்-பின்வரும் புத்திமதியுடன்: "ஒரு சிறுகதைக்கு ஆரம்பம், நடு, முடிவு. மூன்று அங்கங்கள் இருக்கவேண்டும். இதில் ஒன்றுமே இல்லையே." கதையை எரிச்சலுடன் பிடுங்கிக் கொண்டுவந்து மேஜைடிராயரின் புல்ஸ்டாப், கமாக்களுக்கு நடுவே போட்டு விட்டிருந்தார் கதாசிரியர். இப்போது அவரது நண்பர்கள் அட்டகாசமாக ரிஜிஸ்தர் பண்ணி தங்கள் கதைகளை எங்கௌண்டருக்கு அனுப்பியபோது தமது கதையை இப்படி ஒப்பன் லெட்டராக அனுப்பிவிட்டிருந்தார். "வெறும் காலிக் கவர்தான் போய்ச் சேரும்" என்று மனசு அவநம்பிக்கைப்பட்டுக் கொண்டிருந்தது.

கதைத் தேர்வுக்குழுத் தலைவர் விளடீமர் நபக்கவ்; நமது சிறுகதாசிரியரின் நக்ஷத்திரங்களுள் ஒருவர். அவரா தமக்குப் பரிசைத் தந்துவிடப் போகிறார் என்றும் ஒரு எண்ணம்.

வந்தது முதல் பிரதிபலிப்பு. "இது உங்களுக்கு மட்டும்" என்ற எச்சரிக்கையுடன், கவியும் விமர்சகருமான ஸ்பெண்டரிடமிருந்து. அவசரமாக ஓரம் தாறுமாறாகும்படி ஏரோகிராமைக் கிழித்து காரியாலய பில்டிங்கின் மூன்றாவது மாடியிலிருந்து படித்த டி. ராமநாதனுக்கு ஜன்னல் வழியாக குதித்துவிடலாம் போன்ற குஷி முதல் பரிசு அவருக்குத் தான். இதை உறுதிப்படுத்தி அடுத்த கடிதம் வந்தது, "விளடீமர் நபக்கவ்" இடமிருந்து.

தொடர்ந்து பத்திரிகை அறிவிப்பு... எக்ஸ்ட்ரா, எக்ஸ்ட்ரா. ஆயினும் தமிழுலகம் டி. ராமனாதனின் பெயரைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. இதற்கு ஒரு காரணம் என்று அவரையே தான் "குத்தம்" சொல்ல வேண்டும். இலக்கிய இயக்கம் எதனுடனும் அவர் தம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளாதது ஒன்று. தமிழில் தமது கதைகளை மொழிபெயர்த்ததுடன் அது சம்பந்தமான பொறுப்புகளை காவலூர் ராசதுரை என்ற இலங்கை எழுத்தாளரிடம் விட்டதுக்கு மேல் ஏதும் செய்யாதது மற்றொன்று.

முதல் பரிசுக் கதையான "தி கிரேட்டஸ்ட் ஸென்ஸஸ் இன் தி ஒர்ல்ட்" இலங்கைத் தமிழரால் எழுதப்பட்டதெனினும் அது இந்தியா சுதந்திர மடைந்தவுடன் எடுக்கப்பட்ட முதல் ஸென்ஸஸைப் பகைப் புலமாக்கிய கதைதான். எனவே இது ஒரு ஆசியக் கதை; ஆசியாவின் துருவ நட்சத்திரமாக உதித்த இந்தியாவைப் பற்றிய கதை. ஆயினும் கதை நிகழும் பிராந்தியம் குப்பத்தை ஒட்டிய ஒரு பில்டிங்கின் "காராஜ்"ஜிற்குள் குடியிருக்கும் ஒரு எழுத்தாளரைப் பற்றியது. ஸென்ஸஸ் எடுக்க வந்த "உயரமான வெளுப்பான" மனிதரின் கண்ணில் தமது மனைவி பட்டுவிடாமல் உள்ளே அனுப்பி விடுகிற அவர் வந்தவனின் கவனத்தை, தமது விக்டோரியன் மணிக்கூண்டுப் பக்கம் இழுக்க முயற்சிக்கிறார், "இந்தியா முழுவதையுமே ஸென்ஸஸ் எடுக்க உங்களால் முடியுமா என்ன?" என்று சந்தேகப்படுகிறார், ஸென்ஸஸ்காரன் போனபிறகு ஆங்கிலப் படம் பார்க்கப்போய் உட்கார்ந்திருந்து பீடி குடிக்கிறார், திரும்பி வரும் வழியில் ஒரே கூட்டம், பிளாட்பாரத்தில் உருவங்கள் பிணைகின்றன. புதிதாக ஒரு குழந்தையை குப்பத்தில் தனது சினேகிதி பெற்றிருப்பதாக அவர் மனைவி சொல்கிறாள். இதுதான் கதை. ஆரம்பம், நடு, முடிவு – இதற்கு எப்படி வரும்?

இன்று, இதையும் இதைப்போன்ற "பசி" முதலிய கதைகளையும் எழுதிய டி. ராமநாதன் நம்மிடையே இல்லை. கடந்த செப்டம்பர் முதல் வாரத்து சனிக்கிழமையில், அவரது கலையுள்ளத்தினால் புரிந்து கொள்ள முடியாத தீவிர நிலைக்குப்போய் விட்ட குழப்பமான அரசியல் சூழலின் நடுவே, யாழ்ப்பாணத்தில் அவர் மறைந்து விட்டார்.

ஆங்கிலத்தில் மட்டுமே எழுதியவரான ராம நாதனின் கதைகளில் உள்ள இந்தியப் பின்னணி அவரது அநுபவமாகும். கடவுளுக்கு தன்மேல் ஏதும் அக்கறை இருக்கிறதா என்று நேரில் கண்டறிய, ஒருவிதமான சுதந்திர மான (அல்லது பாதுகாப்பற்ற)வாழ்வைத்தேடி, பி.ஏ.யை பூர்த்தி செய்யாமலே இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு "ஓடி" வந்த அவர், ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சியின் ஆங்கிலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை ஒன்றை சென்னையில் எடிட் செய்திருக்கிறார், இன்னுமொரு சமயம் கன்யா குமரியிலிருந்து ஹிமாலயம் வரை ஹிட்ச் ஹைக் செய்திருக்கிறார். கர்நாடக சங்கீத ஈடுபாட்டிலிருந்து காய் கறித் தோட்டத்தின் மூலம் தன் நிறைவு வாழ்வை அமைப்பது வரை ஈடுபட்டிருந்த ராமநாதனின் தோற்றம் ரொம்ப சாமானியமான கருத்த குள்ளமான தோற்றம்தான், கிடைக்கக்கூடிய சலுகையைக் கூட விரும்பாமல் ஒதுங்கி இருக்கிற சுபாவம் அவருடையது. இதனால்தான், உலகப் புகழ்பெறக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று அவரை வீடுதேடி வந்தபோதும்கூட, அதை உபயோகித்துக் கொள்ளும் மூர்க்கம் அவரிடத்தில் வேலை செய்யவில்லை.

தமிழ்நாட்டில் கூத்துப்பட்டறையிலிருந்து கோமாளித்தனமான விகடக் கச்சேரி நாவல்கள் வரை எதெதையோ எல்லாம் செய்து, சுயதம்பட்டங்கள் மூலமும் ஆள் பிடிப்பது மூலமும் நவீன தமிழ் இலக்கியவாதத்தையே கேவலமாக்கிக் கொண்டிருக்கும் புள்ளிகளுக்கும் நிறு வனங்களுக்கும், ராமநாதனின் இந்த மனேபாவம் புரியாது.

முதன்மையாக அவரது மனோபாவம் காந்தீயம் நிலவிய ஒரு சூழலில் மேலெழுந்த ஜவாலைகளிலே புடம் பெற்றிருந்த ஒன்று. இன்று கசடதபற கும்பலிலிருந்து கணையாழி கும்பல்வரை ஆர்.எஸ். எஸ்.ஸின் இண்டலக்சுவல் கோணிப்பை யான விஸ்வஹிந்து பரிக்ஷத்துக்குள் அடைக்கலமாகி இருக்கிறார்கள். காரணம் ஹரிஜனங்களுக்கு தண்ணீர் வழங்காத இவர்களுடைய மதிப்பீடு களின் விளைவாக அவர்கள் முஸ்லீம்களாகியமையாகும். இன்று இதன் அடுத்தகட்டமாக "தண்ணி குடுக்க மாட்டேன்னு முஸ்லீமா நீ ஆயிடறதா? குத்திப்புடுவேன் சூலத்தால்" என்ற தத்துவமும் அதற்கு எதிராக அவர் களுடைய சூலங்களும் கிளம்பி இருக்கின்றன. ராமநாதனின் இலக்கியம் இந்தப் பிளவுண்ட இந்திய மனோநிலத்தின் அடிப்படைகளை ஒன்றிணைத்த ரஸவாதமாகும் - நவஇந்தியாவின் புதிய அத்திவாரமாகும் கொழும்பில் அவருடன் பழகிய நாட்களில் என் ஆங்கிலப் படைப்புகளை (அளவு மீறி) புகழ்ந்த அவர் என்னிடம் கூறிய ஒரு வாக்கியம்: "I have been carrying forward a torch. when I fall you must carry it."

அவர் தாங்கிய torch என்ன என்று நான் கேட்கவில்லை. அவரும் விளக்கவில்லை. ஓரளவுக்கு அவரையே போன்று இந்தியாவுக்கு "ஓடி" வந்து வாழ்ந்து எழுதி உள்ள ஒரு போக்கில், என்னை யறியாமலே புரிந்து என்னையறியாமலே நிறைவேற்றிய ஒரு அர்த்தத்தில் அவரது அன்றைய மர்மமான வேண்டுகோளைப் புரிந்து கொள்கிறேன். நவஇந்திய லட்சியங்களைப் பற்றிய பிரக்ஞை தான் இந்த torch. இதை அவர் அன்று எனக்கு விளக்காமல் விட்டமையே, விளக்கங்களுக்கு அப்பாற்பட்ட உணர்வுகளை அவர் மதித்ததின் அத்தாட்சியாகும்.

நன்றி: - "லயம்" ஒக்-டிசெம்பர் 1986

# நல்லதொரு சிறுகதைக்கு கிடைத்த கௌரவம்

■ அர்ச்சுனன்




ஆனந்தமயில் முல்லைத்திவ்யன் தொடர்ந்து இலக்கிய செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் ஒரு இளம் இலக்கியவாதி. மூன்று கவிதைத் தொகுதிகளையும், 'தாய் நிலம்' என்னும் சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டவர். தாய் நிலம் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'தாய் நிலம்" என்னும் முள்ளியவளைக் கிராமத்தின் செழிப்பை புலப்படுத்தும் கதை தற்போது 'தாய் நிலம்' என்னும் நூலாக ஆங்கிலம், பிரெஞ், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. முல்லைத்திவ்யனின் அயராத உழைப்பிற்கு யாழ். பிரெஞ்சு நட்புறவுக்கழகம் வழங்கிய சன்மானமாக இந்நூலின் வெளியீடு கொள்ளத்தக்கது.

அழகிய அட்டைப்படத்துடன் ஒவ்வொரு பக்கத்தினையும் விளக்கும் விதமான கறுப்பு வெள்ளை ஓவியங்களுடன் வசீகரமான மான பாராட்டத்தக்க நூலக்க அமைப்புடன் 'தாய்நிலம்' சிறுகதை நூலாக்கப்பட்டுள்ளது.

கதையின் களம் முள்ளியவளை. முள்ளியவளையின் இயற்கையின் வனப்பை ஆசிரியர் விபரித்து செல்லும் பாங்கு தனித்துவமானது; முள்ளியவளையை வாசகனின் மனத்திரையில் படம் பிடித்து காட்டுவதாக அமைந்துள்ளது. யாழ் மொழி, மான்விழி ஆகிய இருபாத்திரங்களின் உரையாடலினூடாக கதை நகர்த்தப்படு கின்றது. சிறுவயதில் இருந்தே தோழிகளான யாழ்மொழி, மலர்விழி போரிற்பட்ட துன்பங்கள், இழப்புகள், தின வாழ்க்கைக்காக படும் இடர்கள், சமூகத்தின் பெண் மீதான குறுகிய பார்வை, தாய்ப்பாசம் என பல உணர்வுகளை கலந்து உணர்ச்சி பூர்வமாக கதை நகர்கின்றது. கணவனை போரில் பறி கொடுத்த யாழ்மொழி தன் மகனை சிறப்பாக வளர்க்க வேண்டும், அவனைப் பெரிய கல்வியாளன் ஆக்க வேண்டும் என்பதற்காக பணம் உழைக்க சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாக செல்கின்றாள். மூன்று வயதேயான மகனைப் பிரிந்து செல்லும் தாயின் மன உணர்வுகள் விபரிக்கப்படும் தன்மை சிறப்பாக உள்ளது. எழுத்து நடை, உவமானங்கள், காட்சி விபரிப்புகள் முல்லைத்திவ்யனின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றது. கதையின் இறுதி வரிகள் வாசகனிடத்து தொற்ற வைக்கும் உணர்வு சோக மயமானது. அந்த வரிகள்:

"........... இங்கே... அவளுக்காக காத்திருக்கும் அவளின் மகன், அவனின் தந்தையின் இரத்தங் குளைந்து, உலர்ந்து விட்ட மண்ணில் தாயின் வியர்வை மூச்சுக்காத்தும் கலந்து நாளாகிய, மண்ணில்...

ஈரக்காற்றை சொந்தக்காற்றை சுவாசித்தபடி தாய் நிலத்தில்...! ஏக்கத்தோடு...!"

தொடர்ந்தும் முல்லைத்திவ்யன் சிறந்த படைப்புகளைத் தர வேண்டும். இந்த கதைக்கு கிடைத்த பாராட்டையும் மதிப்பையும் முல்லைத்திவ்யனின் எதிர் கால எழுத்துக்களும் தக்க வைக்கும் என நம்புகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து கொண்டாள். குறிப்பிட்ட வேகத்துக்கு மேல் சுற்றாத முன் வாசல் ஃபேன் அடிக்கும் வெக் கைக்கு ஈடுகொடுக்கவில்லை. உடைகளைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டாள்.

ஹரிஸாவுக்கு அப்படிப் பெரிதாக ஒன்றும் வயதாகிவிடவில்லை. நாற்பதைக் கூட இன்னும் தாண்டிவிடவில்லை. இருபது வருட வாழ்வில் மூன்று குழந்தைகள். அதுவும் பெண் குழந்தைகள்.

அரசன எவ் வழி? குடிகள் அவ் வழி. என்பது போல் ஓடிக் கொண்டிருந்ததால் எந்தப் பிரச்சினையும் குறுக்கிடவில்லை.

அவர் சொல் லத்தக்கதாய் எந்தத் தொழிலும் செய்ததாக அடை யாளப்படுத்திக் கொள்ளவில்லை. அதற்காக வீட்டில் சும்மா குந்திக் கொண்டிருந்தார் என்று சொல்வதற்குமில்லை. யார் யாருடனோ எங்கெங்கேயோ போய் வந்து கொண்டிருந்தார். மனைவியையோ பிள்ளை களையோ ஒருநாளும் பசியில் போடாமைதான் அவரது மிகப் பெரிய வெற்றி ஆள் காரியவாதிதான்.

அப்படி ஓடிக் கொண்டிக்கும் போது பதின்மூன்றே வயதில் எட்டாம் வகுப்பில் படிக்கும்போது மூத்தமகள் "பெரியமனிசி" யாகி விட்டாள். அது ஒன்றும் புதுமையான விடயமல்லவே. ஆனால் அதுவே

# பருவம்

திக்குவல்லை கமால்



"யா அல்லா" என்றவாறு வீட்டுக்கேறிய கணவனின் முகத்தில், வியர்வை பளபளக்கும் களைப்புக்கு மத்தியில் மகிழ்ச்சி ரேகைகள் படர்ந்திருப்பதை ஹரீஸா தெளிவாக அவதானித்தாள்.

"அன்ன சல்லி கெட்டித் துண்டக் கொணு வந்த நாளக்கி பத்து மணிக்கு மெடிகெயாருக்கு பொகோணும். எங்கட தங்கச்சீட மகள்தான் செல்லித்தந்த வீஓஜி டொக்டர். பொம்புள... வேண்டிய மாதிரி கதச்சிக் கொளேலும்" மூச்சுவிடாமல் சொல்லி நிறுத்தினார் தமீம்ஸாப்.

அதற்குமேல் அவளுக்கு எல்லாமே விளங்கிவிட்டது. "தேத்தண்ணி கொஞ்சம் ஊத்தவா?"

"வாணா வாணா அடிக்கிய வெய்லுக்கு ஜாதியாயிக்கும். பதினொரு மணிக்கு பெரிய பள்ளில மசூரா போற வழில மீசமாமட கடக்கேறி நான் தம்பிலிக்க யொண்டு குடிச்சிட்டுப் போறன்"- என்றவாறு தலையைத் தடவி தொப்பியைத் திருப்பிப் போட்டுக்கொண்டு வெளியிறங்கினார்.

போகும்வரை பார்த்திருந்தவள் கதவைச் சாத்திவிட்டு மெல்லிய சிரிப்போடு துண்டைப் பார்த்தாள். அதில் பெரிதாக ஒன்றும் அவளுக்கு விளங்கவில்லை. ஆங்கிலத்தில் மகளின் பெயரும் இன்னும் சில கிறுக்கல்களும்தான். மேசைப் பொலித்தீன் விரிப்பை உயர்த்தி தெரியக்கூடியதாக வைத்தாள்.

மூன்று பேருக்கான சமையல். அடுப்படி வேலைகளை ஏலவே முடித்துத் தானிருந்தாள்.

கணவன் ளுஹர் தொழுதுவிட்டு வரும்வரை அவளுக்கு நிம்மதி. ஹாய்யாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையின் முதற்கட்டமாகிவிட்டது.

"புள்ளய நான் மத்ரஸாக்கு போடப் போற. எங்களுக்கு இந்த உலகக் கல்வியால வேலில்ல. அதபொழுக்கம் முக்கியம்"

இப்படி அவர் தன்னை நியாயப்படுத்தி வியாக்கியானம் சொன்னபோது அவளால் இருப்புக் கொள்ள முடியவில்லை. மனசு கொதித்துக் கிளம்பியது.

"கொமரானத்துக்கு இன்னேம் சின்ன குட்டிதானே. சோதின எடுக்கும் காட்டீம் படிக்கட்டு. அதுக்குப் பொறகு மதுரஸாக்கு உடேலும்" அவள் மிக நிதானமாகவே சொன்னாள்.

"நான் எல்லாம் பேசிமுடிச்சிட்டு வந்திட்டன். இன்னம் ரெண்டு கெழமேல காயிதம் வரும். குருனாகல் பொக்கத்திலதான். எல்லா ஏற்ப்பாடும் அங்கீக்கி. இது நாப்பது பேருக்கட்ட கேட்டுக் கேட்டு செய்த விஷயமல்ல. மொல்ல மொல்ல ரெடியானாச் சரி"

இன்னொரு அபிப்பிராயத்துக்கு இடம் வைக்காமல் அவர் முற்றுப் புள்ளி வைத்தார்.

முதலாம் வகுப்பிலிருந்தே அவளது பிள்ளைகள் கெட்டிக்காரப் பிள்ளைகளாக வளர்ந்து வருவதை அவளறிவாள். படித்து ஒரு நல்ல நிலைக்கு வந்தால் பெண்பிள்ளைகள் என்ற வகையில் எதிர்கால எதிர்நோக்கங்களுக்கு ஒருவகையில் தீர்வு வருமென்றெல்லாம் அவள் அவ்வப் போது யோசித்ததுண்டு.

ஹரிஸா தனது மனக் கவலையை நானா, தங்கச்சிமார்களைத் தவிர வேறு யாரோடுதான் பகிர்ந்து கொள்ள முடியும்? எல்லோருமே பொறுமையாக நடந்து கொள்ளுமாறுதான் ஆலோசனை கூறினார்கள்.

அதிக காலம் செல்லவில்லை. இரண்டாம் மகளும் அதே எட்டாம் வகுப்பில் "பெரியமனிசி"யாகிவிட்டாள்.

வாப்பா என்ன முடிவை எடுத்து விடுவாரோ என்ற கலவரத்தில் அவளது முகம் இருண்டு போயிருந்தது. சிலபோது அழக்கூடச் செய்தாள். மகளுக்கு என்ன ஆறுதல் சொல்வதென்று ஹரீஸாவுக்கும் தெரியவில்லை. கிட்டத் தட்ட அவளது நிலையும் அதே கதைதான்.

தமீம்ஸாப் தன்னுடைய பாதையில் தெளிவாகவே இருந்தார்.

பெரியதொரு ஆபத்திலிருந்து எப்படியோ தப்பி விட்டது போன்ற உணர்வோடுதான் ட்பர்வீனா, குளித்து துப்புரவாகிக் கொண்டு அடுத்த திங்கள் பாடசாலைக்குப் போக ஆயத்தமானாள்.

"ஸ்கூலுக்குப் பொக வாண" வாப்பாவின் தீர்க்கமான குரல்.

வெள்ளை உடுப்போடு கட்டிலில் விழுந்தவள் "தீன் தண்ணி" இல்லாமல் முழுநாளும் அழுதாள். இருந்தும் என்ன? மலை அசைந்தாலும் மனம் அசையாத கொள்கை தாரி அவர்.

உம்மாவும் மகளும் தோற்றுத்தான் போனார்கள்.

இரண்டே வாரத்தில் ஃபர்வீனா கண்டிப் பகுதி பெண்கள் அறபிக் கல்லூரியொன்றில் சேர்க்கப்பட்டாள்.

சேர்க்கப்பட்ட இரண்டு பிள்ளைகளும் ஒழுங்காகப் படிக்கிறார்களா? அல்லது பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்களா என்பதை பற்றியெல்லாம் அவருக்கு எந்த அக்கறையுமில்லை. இலவசமாக அவர்களுக்கு ஈடேற்றப் பாதையைக் காட்டிவிட்ட பெருமிதம் அவருக்கு.

தொழுகையாளியாகவும் தஃவாதாரியாகவும் தன்னைப் பிரபல்யப்படுத்திக் கொண்டிருக்கும் தமீம்ஸாப் வீட்டுக்குள் மன்னாதிமன்னன். சிலவேளை அவள் அலுத்துச் சலித்துப் போய்விடுவாள். ஆனாலும் விட மாட்டார். இதற்காகத்தான் வளர்ந்த பிள்ளைகளை வீட்டிலிருந்து வெளியேற்றினாரோ என்று சிலவேளை அவள் நினைப்பதுண்டு. அடுத்தகணம் "அஸ்தஃபிருள்ளா"" என்று சொல்லிக் கொள்வாள்.

ஒருநாள் நள்ளிரவில் சின்னவள் "எனக்கேலா. எனக்கேலா" என்று கத்தத் தொடங்கிவிட்டாள். அவளை அணைத்துக் கொண்டு தூங்கிய ஹரிஸா அப்போது அருகே இருக்கவில்லை.

ஏதோ லைட்போட எழுந்ததுபோல் காட்டிக் கொண்டு "எனத்தியன் புள்ள எனத்தியன் புள்ள" என்று கேட்டாள்.

அதற்கிடையில் தண்ணீர் கோப்பையுடன் வாப்பாவும் வந்துவிட்டார்.

"மடக் மடக்"கென்று தண்ணீரைக் குடித்தாள். தான் கண்டது கனவென்று அவளுக்கு விளங்கிவிட்டது.

"சரி சரி பேசாமப் படுங்கபுள்ள... ம்... படுக்கச் செல்லே ஓதிக்கொண்டு படுக்கோணும்"-

அவர் சென்றதும் சட்டென்று விளக்கை அணைத்துவிட்டு, மகளை அணைத்துக் கொண்டு தூக்கம் வருமட்டும் தலையைத் தடவினாள் ஹரீஸா.

வாகன இரைச்சல் கேட்டுக் கண் விழித்தபோது விடிந்திருந்தது. மகள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். முகம் வாடிவதங்கிப்போயிருந்தது. நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அவளது ஊகிப்பு சரி. மெல்லிய காய்ச்சல் கண்டிருந்தது.

"புள்ள மனாவில என்னத்துக்கோ பயந்தீக்கி" அவள் புறுபுறுத்துக் கொண்டாள்.

ஸ்கொலசிப்புக்கு படித்துப்படித்துப் பலவீனப் பட்டுப் போனவள் இன்னும் பழைய நிலைக்குத் திரும்ப வில்லை. ஆனாலும் அவளது வெறியில் வெற்றிகண்டு விட்டாள். மூத்த இருவரும் இரண்டொரு புள்ளிகளால் தான் தட்டுப்பட்டார்கள். எவ்வாறாயினும், அதற்குமுன் தாய்வழியிலோ, தந்தை வழியிலோ எவரும் கல்வியில் எந்த அடைவையும் கண்டிருக்கவில்லை. அதனால் குடும்ப வட்டாரத்துக்குள் அவளுக்கு அமோக ஆதரவு திரண்டது.

"இவளெண்டா படிச்சி முன்னுக்கு வாரொண்டு. நல்லாப் படிப்பிக்கோணும்" இப்படி காண்பவர்களெல்லாம் சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த உற்சாகம் கொடுத்த உந்துதல் அதைத் தொடந்து வந்த தவணைப் பரீட்சைகளிலும் முதலாம் பிள்ளையாகவே வந்தாள்.

"உம்மா"

தேநீர் கலந்து முடியும் வேளையில் மகளின் குரல் கேட்டது. "வாரன் வாரன்" என்றவள் அவருக்கும் மகளுக்குமாக இரண்டு தேநீர்க் கோப்பைகளுடன் ஓடினாள்.

கட்டிலில் எழுந்து அமர்ந்திருந்தவள் வாய் அலம்பி விட்டு தேநீர் பருகினாள். முகம், கழுத்தெல்லாம் வியர்வை மினுக்கம் படர்ந்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாப்பெங்கியன் உம்மா?"

"ஸொபஹு" தொழப்போனது இன்னேரம் வரல்ல"

"வாப்பெனக்கு ஸ்கூலுக்கு பொகவாணான்ட. நான் போறென்ட. அதுக்கு எனக்கு அடிச்சும்மா. நான் கொரோட்ட. அப்பிடியே முழுப்பு வந்திட்ட" இரவுச் சம்பவத்தை நினைவூட்டிச் சொன்னாள்.

"அப்பிடிக் கெட்ட மனாவியள் தெரிபடுகியதான்" - ஹரீஸா சமாளிக்க முனைந்தாள்.

"வாப்பா என்னேம் மதுரஸாவுக்கு போடி யொன்டும் உம்மா. நான் படிக்கோணும். கெம்பஸூக் கெல்லாம் பொகோனும் உம்மா. எனக்கு பயமாயிக்கும்மா" அவளது கண்கள் கசிந்து மீண்டும் முகம் வாடியது.

"நீ ஒன்டுக்கும் பயப்புடாதே புள்ள படிக்கிய மாதிரி படீ. ஒங்கட வாப்பட கூத்தியள நான் அல்லாவுக்காக பொறுத்துக்கோ நிக்கிய. புள்ளேட படிப்பில கைவெக்கியத்துக்கு நான் எடமுடுகியல்ல." ஹரிஸாவின் வார்த்தைகள் மிக அழுத்தமாக விழுந்தன.

தெளிந்த நிலவாக ஷாமிளாவின் முகம் பிரகாசித்தது.

***

எட்டாம் ஆண்டின் இறுதிக் கால கட்டம்.

ஆசிரியர்கள் வராத வேளையில் பலதையும் பத்தையும் கதைக்க ஆரம்பித்துவிடுவார்கள். விஷேடமாகப் பெண்பிள்ளைகள்.

ஷாமிளா இப்பொழுதெல்லாம் சகமாணவியர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானபோதும் அதை அவள் பெரிதாகத் தூக்கிப் பிடித்துக்கொள்வதில்லை.

ஏதேதோ குசுகுசுத்துக் கொண்டிருந்த பின்வரிசையிலிருந்து இப்படியொரு குரல், "சாமிளா செல்லே நாங்க எப்பேக்கன் ஒங்கடுட்டுக்கு ஹதியா எடுத்துக் கொணுவாரா?"

அவள் ஒருமுறை திரும்பிப் பார்த்து சிரித்தும் சிரிக்காமலும் பேசாமல் இருந்துவிட்டாள். பேசினால் அல்லது கோபம் காட்டினால் அது இன்னுமின்னும் தொடருமென்று அவளுக்குத் தெரியாதா என்ன?

வகுப்பிலுள்ள பிள்ளைகள் யாராவது "பெரிய மனிசி"யானால் எஸ்.எம்.எஸ் வேகத்தில் எல்லோருக்கும் செய்தி பரவிவிடும். பின்னர் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள பிள்ளைகள் நாலைந்து பேராகச் சேர்ந்து, அன்பளிப்பு ஏதாவது வாங்கிக் கொண்டு மாலைநேரத்தில் அங்கு செல்வார்கள். இப்படியொரு நடைமுறை தொடர்ந்து இருந்து வந்தது.

உண்மைதான் சாமிளா மாத்திரமே எஞ்சியிருக் கிறாள். அந்த வாய்ப்பை இன்னும் அவள் சகமாணவிகளுக் குக் கொடுக்கவில்லை. அதற்கு அவளால் என்னதான் செய்துவிடமுடியும்.

"எனாடி ஷாமிளா பேசாம நிக்கிய? அப்ப அடுத்த வருஷமா?" எப்படியாவது அவளது வாயைக் கிண்டவே பின்வரிசை முயற்சித்தது.

அவள் ஒன்றுமே பேசவில்லை.

"அதுக்கடுத்த வருஷமோ தெரிய"

கொல்லென்று சிரிப்பு வெடித்தது.

சகபாடிகளுக்கு மட்டுமல்ல டீச்சர்மாருக்குக் கூட இது ஒரு பிரச்சினைதான். அவளைக் கண்டாலே குசுகுசுக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

ஒரு நாள்.

"எனாடி சாமிளா ஒங்கட வாப்பா தாத்தமாரக் கொணுபோன வழிலதான் ஒன்னேம் கொணுபோவாரு போலீக்கி?" சம்ஸூன் டீச்சர் கேட்டார்.

"தெரிய டீச்சர்"

"அந்த மனிசன் இன்டக்கி நாளக்கென்டு பாத்துப் பாத்து நிக்கியெப்பிடியோ" ராஹிலா டீச்சர் தொடர்ந்தார்.

"தெரியா டீச்சர்"

அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

"வாரன் டீச்சர்" ஒன்றுமே விளங்காததுபோல அவள் திரும்பி நடந்தாள்.

***

"இப்ப ஆட்டா வரும். ரெண்டு பேரும் ரெடியாகி நில்லுங்கொ." காலை ஒன்பதாகும்போது தமீம்ஸாப் அவசரப்பட்டார்.

சற்றுநேரத்தில் மூவரையும் சுமந்துகொண்டு ஆட்டா சென்றது.

"ஆ... பொம்புள டொக்டர்தானே வெளப்பமாச் செல்லுங்கொ. நான் முன்னால இருந்துகோ நிக்கியன்"

வாப்பா சென்றதும் உம்மாவும் மகளும் அழைப்புக்காக காத்திருந்தனர்.

காணும் முகங்களெல்லாம் சோகமுகங்களாகவே காட்சியளித்தன.

சரியாக பத்துமணி ஆகும்போது அவர்களுக்கான வாசல் திறந்தது.

லேடி டாக்டர் இருவரையும் மாறிமாறிப் பார்த்தார். யார் நோயாளியென்று தெரிந்து கொள்ள முடியாது சங்கடப்பட்டாரோ என்னவோ? துண்டைப் பார்த்து பெயர், வயது மூலம் தான் நோயாளியை இனம் கண்டார்.

"டொக்டர் மகளுக்கு ஒரு பிரச்சினேமில்ல. அவ ஒரு வஷத்துக்கு முந்தியே பெரியபிள்ளையாகிட்டா"

"ஆ... அப்ப ஏன் காசு கட்டி என்னிட்ட வந்தீங்க?"

நியாயமான கேள்விதானே?

"இவ பெரிய பிள்ளையானா இவட ஸ்கூல் படிப்ப இவங்க வாப்பா நிறுத்திடுவார். முந்தின பிள்ளைகள் ரெண்டு பேரயும் அப்படித்தான் செய்தார்"

டாக்டர் சுமதி கதிரையை சற்று நகர்த்தி சாசுவதமாக காது கொடுத்தார். இடையில் கேள்விகள் கேட்டார். வியப்படைந்தார். இப்படியுமாவென்று கோபப்பட்டார்.

"சோதின எடுக்கும் வரக்கும் இப்படியே பொகோனும் டொக்டர்"

"சரி இந்தாங்க இந்த மருந்த வாங்குங்க. ஆனா இது மருந்தல்ல. சும்மா விடமின். மூன்று மாதத்துக்குப் பிறகு வரச் சொன்னதா சொல்லுங்க. வாப்பாவ நம்ப வைக்கணுமே."

"நன்றி டொக்டர்"

இருவரும் வெற்றிப் பெருமிதத்தோடு வெளியே வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெறுப்பு அரசியலற்ற இலட்சிய வாத நோக்கிலான ஒரு நாவல்

■ ந.இரவீந்திரன்

படைப்பு: யாவருங் கேளிர்
ஆசிரியர்: சிவ.ஆருரன்
வெளியீடு: பூமகள் வெளியீட்டகம்
விலை: 500/-

சென்ற வருடம் (2016) சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற நாவல் "யாழிசை"; இதனைப்படைத்திருந்த சிவ.ஆரூரன் தனது முதல் ஆக்கத்தின் வாயிலாகவே உயர் விருதினைப்பெற்றிருந்தார் என்பது மிகுந்த கவனிப்புக் குரியது. அவரது இரண்டாவது நாவல் இவ்வருட முற்கூறில் "யாவருங்கேளிர்" என்ற தலைப்புடன் வெளிவந்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் புனர்வாழ்வு பெற்றுத் திரும்பிய முன்னாள் போராளியான ஒரு இளம் பெண்ணுடன் உற வேற்படுத்திக்கொண்டதன் வாயிலாகப் புதிய நம்பிக்கையை எதிர்காலச் சமூகத்துக்கு உணர்த்திய ஒரு ஆசிரியரின் கதையாக "யாழிசை" அமைந்திருந்தது. யுத்தத்தின் பெருந் துயர் - இனப்பிரச்சினையின் மையநாதம் - அரசியல் சிக்கல்கள் என எவையும் பேசப்படாமல், அதேவேளை அவற்றின் விளைபொருள் சமூகத்தில் எவ்வாறு ஊடாடு கின்றது என்பதனை ஒரு குடும்ப உருவாக்கத்தினூடாக மிகச்சிறப்பாக, நாவலுக்குரிய கட்டுக்கோப்புக் குலையாத வகையில் படைக்கப்பட்ட ஆக்கம் "யாழிசை".

யுத்தத்துக்குப் பிந்திய எமது சமூகம் முன்னைய அனுபவங்களை உள்வாங்கி எத்தகைய அரசியல் மார்க்கத்தைத் தேர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்பதைக் காட்டும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய நவீனம் "யாவரும் கேளிர்" அவரது சமூக அக்கறையின் பேறாக எட்டு வருடங் களாக சிறை வாழ்வை அனுபவித்து வருபவர் சிவ.ஆரூரன். அவரது வாழ்வாதாரச் செயற்பாடுகள் முடக்கப்பட்ட அந்தக் கால அவகாசத்தை மிக ஆழமாக கற்பதற்கு அவர் பயன் படுத்திக்கொண்டார், முன்னதாக தான் வாழ்ந்தனுபவித்த எதார்த்த நிலைகளோடு, உள்ளிருந்தவாறே வெளி நிகழ்வு களின் செல்நெறிகளைக் கேட்டறிந்த வகையில் இரு படைப்புக்களையும் அவர் வழங்கியுள்ளார்.

"இரசனையோடு, யாழ் மண்ணின் வாசனையோடு, வரலாற்றையும் பிறர் சொல்லக்கேட்டு மன வெளியிற் சஞ்சரித்த சம்பவங்களையும் என் அனுபவ கற்பனையையும் இணைத்து வெள்ளைத் தமிழில் புனைந்த புதினம் இது" என்பது ஆசிரியர் கூற்று, இங்கு அரசியல் எதிர்காலம் எத்திசையில் செல்லவேண்டும் என்பதற்கு அவர் அக்கறை செலுத்தக்காரணமாக அமைந்திருப்பது. இந்த வருடம் (2017) ருஷ்ய ஒக்டோபர் புரட்சியின் நூற்றாண்டு என்ற உந்துத லினால் என்பதைக் குறிப்பிடுவது அவசியம்; அந்தப் புரட்சியின் வாயிலாக 1917 இல் உதயமான "சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம்" 1991 இல் உலக வரைபடத்திலிருந்து காணாமலாக்கப்பட்டு விட்டது "எனினும் இப்புரட்சி ரஷ்ய நாட்டின் தனியுடைமையல்ல ஒடுக்கப்பட்ட நாடுகளின் பொதுவுடைமை" என்ற சிவ. ஆரூரனின் முகவுரைப்பிரகடனம் ஆழ்ந்த கவனிப்புக்குரியது.

"உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசங் களே ஒன்று சேருங்கள்" என்ற கோசத்தை முழக்கமிட்ட வாறு எழுச்சியடைந்தது அந்த ஒக்டோபர் புரட்சி. இலங்கைத் தமிழ்தேசியம் இன்று எதிர்கொள்ளும் பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்கு முதன்முதலில் அக்கறை செலுத்த வேண்டிய அம்சம் எது என்பதே இப்புதிய நவீனத்தின் அடிப்படை. கடந்த காலத்தில் "எம்மவர்" அல்லாத பிறர் அனைவரும் எதிரிகள் என்ற எடுகோளுடன், எமக்குள்ளும் முளைவிடும் துரோகி களை ஒழிப்பதே முதற்கடன் என்ற செயற்பாட்டில் இயங்கியதன் பேறு மீள முடியாத அழிவுக்குள் புதைந் திருந்தது. அப்போது வெளிப்பட்ட வெறுப்பு அரசியலுக்கு மாறாக முன்னெடுக்கப்பட வேண்டிய ஆக்கபூர்வமான அரசியல் செயற்பாடுகள் தேடுதலுக்குரியது.

வெளியேயும் உள்ளேயும் எதிரிகளையும் துரோகி களையும் தேடுவதைவிட அனைத்து இடங்களிலும் - சந்தர்ப்பங்களிலும் நட்புக்குரிய சக்திகளைத் தேடி ஒன்றுபடுதல் அவசியம் என்றவகையில் "யாவரும் கேளிர்" (அனைவரும் உறவினர்) என வலியுறுத்த வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு அருகேயுள்ள இருபாலைக் கிராமத்தின் கீழ் மத்தியதர வர்க்க குடும்பப் பின்னணிக்குரியவர்கள் இந்தப் படைப்பில் உலாவுகின்றன பிரதான கதை மாந்தர் கள். அவர்களது தொடர்போடு வடமராட்சி, வவுனியா, புத்தளம், பேராதனை, கம்பொளை, தெஹிவளை எனும் ஊர்களைச் சேர்ந்த கதை மாந்தர்களும் உறவாடுகின்றனர்.

பூங்குன்றன் யாழ்.பல்கலைக்கழக மாணவன். அவனது தந்தை அரசியல் செயற்பாடுகளில் தீவிரம் கொள்ளாத போதிலும் தனது இருபாலைக்கிராமத்தவரான சபாபதி என்ற சீன சார்பு கொம்யூனிஸ்ட்டுடன் இறுக்கமான நட்பைக்கொண்டிருந்தவர். இதன் நீடிப்பாக பூங்குன்றன் தோழர் சபாபதியோடு தொடர்பாடித்தனது சமூகச் செயற் பாடுகளில் அவ்வப்போது ஏற்படுகின்ற ஐயங்களைத் தெளிவுபடுத்திவரப்பழகிக்கொண்டான். அதேவேளை, அரசியலை முற்றாகப் புறக்கணித்தான். அரசியல் நலன்களின் பேரில் மக்களைப் பிளவுபடுத்துவதாயன்றி, அனைவரையும் ஒன்றுபடுத்துகின்ற பண்பாட்டு செயற்பாடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே இன்றைய சூழலில் அவசியமானது என்ற எச்சரிக்கை உணர்வுடன் தோழர் சபாபதியுடன் தொடர்பாடி வந்தான். "மரம் அமைதியை விரும்பிய போதிலும் காற்று அதனை அனுமதிப்பதில்லை" என்பதற்கமைய, சமூகச் செயற்பாடுகளின் சுழற்சி வேகம் பூங்குன்றனை மக்களுக் கான அரசியல் அரங்கில் எப்படி கொண்டு வந்து சேர்க் கின்றது என்பது புதினத்தின் செல்நெறி.

"இருபாலையூர் இளைஞர் சங்கம்" என்ற கிராம எல்லைக்கு உட்பட்ட அமைப்பானது அமைதிப்படையென எமது மண்ணில் கால்பதித்த இந்திய இராணுவத்தோடு வந்து சேர்ந்த பார்த்தீனியச் செடியை முற்றாக அழிக்கும் நடவடிக்கையில் இறங்குகின்றது. மேலாதிக்கத்தீண்டலின் அடையாளத்தை வேரும் வேரடி மண்ணுமாய்க் களைந் தெறிவது ஒரு கிராமத்தையும் கடந்து நாடு பூராகவும் விரிவாக்கம் பெறும் செயற்திட்டங்களாகப் பரிணமிக்க வேண்டியிருப்பதை உணரும்போது "சூழலுடன் சமூகப் பேணுகைக் கழகம்" உருவாக்கம் பெறுகின்றது. கிராம எல்லையைக் கடந்த புதிய அமைப்பு முன்னிறுத்துகின்ற சுலோகம் : யாவரும் கேளிர் (பக்கம் 114). இந்தச்செயற்பாடு வடமராட்சி மீனவர் எதிர்நோக்கும் தமிழக மீனவர்களின் இழுவைப் படகு வாயிலாக மேற்கொள்ளப்படும் அத்துமீறிய மீன்பிடி மற்றும் வலையழிப்பு பிரச்சினையை அறிமுகப் படுத்துகின்றது; யாழ்ப்பாணத்திலிருந்து வலிந்து வெளி யேற்றப்பட்டு புத்தளத்தில் அகதிகளாக வாழும் முஸ்லிம் உறவை ஏற்படுத்தி தருகிறது; பேராதனைப் பல்கலைக் கழக சிங்கள மாணவர்களை ஈர்த்து நட்புறவாட வகை செய்கின்றது; உழைக்கும் மக்களின் பிரதிநிதிகளை ஒன்று படுத்தி தமிழ் – முஸ்லிம் – சிங்களம் என்ற பேதங்களைக் களைந்தெறியச்செய்யும் அரசியல் நாட்டத்திற்கு ஆற்றுப் படுத்தி விடுகின்றது.

அரசியல் மக்களைப் பிளவுபடுத்திவிடும் எனக் கருதிய பூங்குன்றனை இவ்வகையில் தனது செயலனுபவங் கள் வாயிலாக மக்களை ஒன்றுபடுத்துகின்ற அரசியலின் பால் ஆற்றுப்படுத்திய தோழர் சபாபதி எனும் பாத்திரப் படைப்பு விதந்துரைக்கத்தக்கது. "இந்த நாவலில் உண்மைப் பாத்திரங்களும் நடமாடுகின்றன" என்ற நூலாசிரியர் கூற்றுப் பிரகாரம் சபாபதியை இனங்காண இயலும்.

முதலாவது நாவலான "யாழிசை"யின் என்னுரை யில் "இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி; நிகழ்க்கால வாழ்வின் பிரதிபலிப்பு எனக்கூறுவதை நானும் ஒப்புக் கொள்கின்றேன். இவ்வாறான தகாத செயல்களையும் சமூகத்தைப் பின்னோக்கி உந்தும் சம்பவங்களையும் எழுதி விட்டு, "சமூகத்தில் இருப்பதையே எழுதுகிறேன்" என்று கூறிவிட என்மனம் ஒப்பவில்லை" என சில. ஆரூரன் குறிப்பிட்டிருந்தமை மனங்கொள்ளத்தக்கது. யதார்த்தவாதப் படைப்பொன்று சமூக இருப்பைக் காட்டுவதையும் கடந்து, எவ்வாறு இருக்க வேண்டும் என்பதன் மீதும் அக்கறை செலுத்துவது அவசியம்.



ஒக்டோபர் புரட்சியின் இந்த நூற்றாண்டு நினைவு கூரலின் போது, சோவியத்தின் வீழ்ச்சியென்பது மார்க்சியத் தால் அடுத்த கட்ட நகர்வைச் சாத்தியப்படுத்த இயலாமற் போனதன் பேறெனக் காட்டுகின்ற நிலைப்பாடு ஒன்றையும் இனங்காணு கின்றோம். சோவியத் ருஷ்யா மார்க்சியத்தைப் பிரயோகிப்பதிலிருந்து விலகிப் பெரியண்ணன் மனப்பாங்குடன் மேலாதிக்க நாட்டம் கொண்டதன் பேறுதான் சோவியத் யூனியனின் வீழ்ச்சியென இனங்கண்ட சிவ.ஆரூரன், மார்க்சியத்தை தெளிவுறக் கற்று எமக்கு அமைவாக அதனைப் பிரயோகிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இந்தப் படைப்பை வழங்கியுள்ளார். நம்பிக்கை வறட்சியின் வலுப்பெற்றுவரும் இன்றைய இருள் சூழ்ந்த கெடுநிலை தகர்ந்து புத்தொளி எழுச்சி கொள்ளும் என்ற அவரது திடவுறுதி மாற்றத்தை விரும்பும் அனைத்து உள்ளங் களுக்கும் புத்துணர்வை ஊட்டும் என்பது உறுதி!

இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் நீறுபூத்த நெருப்பாகத் துலங்கும் மக்கள் விடுதலை மார்க்கத்துக் கான சிறு பொறியைத் தனது படைப்பு வாயிலாக ஆசிரியர் காட்டுத் தீயாய் எழுச்சியுறுத்திக்காட்டியுள்ள பாங்கு பாராட்டத்தக்கது. அதேவேளை, இன்று வலுப்பட்டு வரு கின்ற மக்கள் விரோத சிந்தனைகளையும் நடை முறை களையும் பிரதி நிதித்துவப்படுத்துகிறவர்களுக்கான வகை மாதிரிப் பாத்திரங்கள் அறவே தவிர்க்கப்பட்டிருப்பது படைப்பின் முழுமையை எட்டவிடாத தடையாக கருத வேண்டியுள்ளது. புதிய தலை முறை வெளிப்படுத்தும் "தனியுடைமை நல்லது" என்பதான இன்றைய நிதர்சன நிலை (பக் .175 – 178) அத்தகைய மக்கள் விரோத சக்திக்கு உரியதல்ல.

யாவரும் கேளிர் என இன – மத பேதம் கடந்த ஒன்று கூடலை வலியுறுத்துகின்ற போது, எதிரி பற்றிய தெளிவு ஏற்படுத்தப்பட வேண்டும்; இல்லையெனில் எதிரியுடன் ஒன்றிணைவதாக அரைவேக்காடுகள் கூச்சலிட இடமேற்பட்டு விடும். வெறுப்பு அரசியல் அழிவையே தரும் – ஒடுக்கும் பெருந்தேசிய இனத்தினுள்ளும் இருக்கக்கூடிய எமக்கான நட்பு சக்திகளை இனங்கண்டு அவர்களையும் அரவணைக்க வேண்டுமெனக் கூறும் போது "நீங்கள் இணக்க அரசியல் பேசுகிறீர்கள்" என்ற எதிர்க்கணை வீசப்பட இடமுள்ளது. வெறுப்பு அரசியலைக் கைவிடும் போது அதிகாரக் கும்பலோடு கூடிக்குலாவும் இணக்க அரசியலையும் நிராகரிப்பதான "யாவரும் கேளிர்" பேசு பொருளாக்கியுள்ள மக்கள் அரசியலில் நண்பர்களைத் தெளிவாகக் காட்டுவது போன்று எதிரி யார் என்பதையும் ஏதோவொரு வகையில் புரிய வைப்பது அவசியம்.

நாவல் முழுமையும் "வெள்ளைத்தமிழில் எழுதப்பட்டிருப்பது நெருடலாக உள்ளது. "கொழும்புச் சத்தம் (Horn), ஈருருளி போன்ற சுத்தத்தமிழ் ஒரு புதினத்துடன் ஒன்றிச்செல்வதற்கு தடைக்கற்கள் மேட்டுக்குடி பண்டித மனப்பாங்குக்கு இது உவப் பானதாகலாம்; உழைக்கும் மக்களோடு ஒன்றிப்போவதற்கு "வெள்ளைத் தமிழை" விடவும் "மக்கள் தமிழே" அதிகம் பொருத்தப்பாடுடையது.

பூங்குன்றனை அரசியல் தன்வயப்படுத்துவதற்கு, யாழ்ப்பாணத்தில் வீறுபெற்று எழுந்த ஒக்டோபர் 21 (1966) எழுச்சி பற்றிய நினைவூட்டல் ஒரு காரணியாக இருந்தது. அந்த ஒக்டோபர் எழுச்சியின் அரை நூற்றாண்டு கடந்த நிலையில் உலகைக் குலுக்கிய ஒக்டோபர் புரட்சியின் நூற்றாண்டு முகங்கொள்கின்றோம்; இன்றைய எமது கும்மிருட்டு சூழலைக் கீறிக்கிழித்து மின்னலாக ஒளி பாய்ச்சும் "யாவருங்கேளிர்" மக்கள் விடுதலையுடன் சமத்துவ உலகை வென் றெடுக்க நாட்டம் கொள்ளும் ஒவ்வொருவர் வீட்டு நூலகங்களிலும் இடம்பெற்று இருப்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடவுளின் மொழியில் பாடல்கள்: அ. நெலோமியின் 'பாட்டுப்பாடவா" நூல் அறிமுகக்குறிப்பு

■ இ.சு.முரளிதரன்

கடவுளுக்கொரு முகநூல் இருந்தால் அவரது பதிவுகளெல்லாம் குழந்தைகளின் மொழியிலேயே அமைந்திருக்கும் என நம்பலாம். சிறுவர்களின் உலகம் உன்னதமானது. தூய்மை சுவறிய மீநயமானது. அவ்வுலகினுள் நுழைதல் பக்குவப்பட்ட கவிமனங்களுக்கே சாத்தியமானது. பாரதியார், சோமசுந்தரப்புலவர், தேசியவிநாயகம்பிள்ளை போன்ற வெகுசிலரே சிறுவர்களின் மொழியினை கற்றுணரும் வல்லமை மிகுந்த கவிஞர்களாகக் கருதப்படுகின்றனர். இருண்மை ரத்தான உள்ளடக்கம், எளிமை நீக்கம் செய்யப்பட்ட சொல்லாட்சி, சிறுவர்களின் உளநிலை, அகவைக்குரித்தான உணர்வுகள், நல்ல உளப்பாங்கினைக் கட்டியெழுப்பும் உத்திகள், நயாதீனமான கற்பனை என்பன கலந்ததாகச் சிறுவர் பாடல்கள் ஆக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளரான அ. நெலோமி ஆரம்பக்கல்வி சார் மழலைகளின் புரிதல் புலத்திற்கு அமைவான வகையிலே "பாட்டுப்பாடவா" என்ற சிறுவர் பாடலை காத்திரமான முறையிலே வெளிக்கொணர்ந்துள்ளமை பாராட்டுக்குரியது. 'சிலு சிலு' தமிழில் 'வழுவழு' தாளில் வசீகரமான படங்களோடு நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் 25 பாடல்கள் என முன்னுரையில் குறிப்பிட்டுள்ள போதும் 28 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. காட்சி ஊடகங்களுக் குள்ளும், தேர்வு மையக் கவனக்குவிப்புக் கல்வியினுள்ளும் தொலைந்து கொண்டிருக்கும் சிறுவர்களை மீட்டெடுக்கும் வகையிலே இவரது பாடல்கள் காணப்படுகின்றன.

இயற்கையின் மீதான நேசத்தை, உடலின் உறுதிப் பாட்டை, உறவுகளின் வலிமையை, நல்லுளப்பாங்கினைக் கட்டி எழுப்பும் நோக்கத்தின் இப்பாடல்களில் காண முடிகிறது. அவற்றின் ஊடாக கற்றற் தூண்டலை ஏற்படுத்துகிறார். 'உதவி செய்வோம்" என்ற தலைப்பிலே அமைந்துள்ள பாடலின் தர நயத்தை சிறுவர் பாடலில் ஆர்வம் உள்ளோர் அனைவரும் வியந்து பாராட்டுவர்!

"தேநீர் கோப்பி சோடாவைத்
தேவை இன்றிப் பருகாமல்
தேடித் தேடி நலமான
நல்ல பானம் பருகுவோம்"

என இன்றைய பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தும் ஆபத்தினை எளிமையான முறையிலே சிறுவர்களிடம் கொண்டு சென்று சேர்க்க நினைக்கும் பாங்கு அற்புதமானது. புதுமை - எளிமை - தரம் இம்மூன்றையும் சமன் செய்யும் வகையிலே பாடல் இயற்றும் வல்லமை அ.நெலோமி அவர்களுக்கு தாடனமாகியுள்ளமை பாராட்டுக்குரியது.

"தாண்டிக் குதிப்பதற்கு
காலில் பலம் இல்லை"

என்று "உண்போம்" பாடலில் இடம்பெறுகிறது. 'பலமும்' என அமைந்திருந்தால் ஓசைச்சிதைவு நிகழ்ந்திருக்காது என்பது எனது அபிப்பிராயமாகும். எனினும் ஓர் எழுத்தை மாற்றுமாறு படைப்பாளிக்கு எடுத்தியம்ப எவருக்கும் உரிமை இல்லை என்பதால் எனது அபிப்பிராயத்தை என்னோடேயே வைத்துக் கொள்கின்றேன். மொத்தத்தில் அ. நெலோமி இத்துறையில் தனது பயணத்தை துணிவோடு தொடர்ந்தால் சிறுவர் இல்க்கியம் செழிப்படையும் என்பதில் யாதொரு ஐயமும்மில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்

திருமண அழைப்பிதழ்
காட்சியறை

MATHI
COLOURS



## WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.
T.P: 021 2229285, 077 7222259


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org